மனையியல்
விரிவுக் கல்வி முறைகள்

(HOME SCIENCE EXTENSION METHODS)

திருமதி டாக்டர் இராஜம்மாள் பா. தேவதாஸ்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ) வரிசை எண் - 592

மனையியல் விரிவுக் கல்வி முறைகள்

(பட்டப் படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகின்றது)

ஆசிரியர்

டாக்டர் (திருமதி) இராசம்மாள் பா. தேவதாஸ், எம்.ஏ.,
எம்.எஸ்.சி., பி.எச்.டி. (ஓஹியோ ஸ்டேட்),
முதல்வர்,
திரு. அவிநாசிலிங்கம் மகளிர் மனையியற் கல்லூரி,
கோயமுத்தூர்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—November, 1974

T.N.T.B.S. (C.P.) No. 592

© Tamilnadu Textbook Society

HOME SCIENCE EXTENSION METHODS
Dr. (Tmt.) Rajammal P. Devadas

Price Rs. 3–75

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by :
Novel Art Printers,
202, Jani Jan Khan Road,
Madras-14

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினான்காண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டு தோறும் எடுத்துவரும் பெரு முயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வாணியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'மனையியல் விரிவுக்கல்வி முறைகள்'** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 592 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 627 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

			பக்கம்
1.	மனையியலின் தனிச்சிறப்பு	...	1
2.	விரிவுக்கல்வியின் தத்துவங்களும் கொள்கைகளும்	...	11
3.	மனையியல் விரிவுத் திட்டங்கள்	...	23
4.	சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நிருவாக அமைப்பு	...	29
5,	மனையியல் விரிவுத் திட்ட ஊழியர்கள்	...	34
6.	மனையியல் விரிவுத் திட்டக் கல்வி முறைகள்	...	42
7.	விரிவியலும், சமூகப் பழக்க வழக்கங்களும் பண்பாடும்	...	75
8.	மக்களுடன் இணைந்து செயல்படுதல்	...	81
9.	விரிவியல் பணிகளைத் திட்டமிடுதலும், மதிப்பீடு செய்தலும்	...	84
	மேற்கோள் நூற்பட்டியல்	...	92
	கலைச்சொற்கள்	...	93

1. மனையியலின் தனிச்சிறப்பு

(UNIQUENESS OF HOMB SCIENCE)

குடும்பக்கலை எனப்படும் மனையியல் (Home Science) இன்று குழந்தைப் பள்ளிமுதல் பல்கலைக்கழகம் வரை அமைந்துள்ள பாடத்திட்டங்கள், சமூக நல வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நல் வாழ்வுத் துறை அனைத்திலும் சிறப்பான இடம் பெற்று விளங்குகின்றது. மனையியல் என்பதன் கோட்பாடுகளும், அதன் கொள்கைகளும், குறிக்கோள்களும் ஆழமானவை; மனித வாழ்வுக்கு நிலையான பயன்தருபவை.

மக்கள் தம் உடல் நலம், வாழ்வில் வெற்றி, குடும்பத்தின் மகிழ்ச்சி இவைகளில் நாட்டம் கொள்வது இயல்பு. இவற்றை நிறைவுபெறச் செய்து குடும்ப வளம், சமூக நலம், நாட்டுப்பற்று, ஒருமைப்பாடு, முன்னேற்றம், ஆன்மீகம் ஆகிய அனைத்தும் பரிணமிக்க மனையியல் வழிகாட்டுகிறது. விஞ்ஞானம், மானிடக்கலை, நுண்கலை ஆகிய மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு, குடும்பத்திலுள்ளவர்களின் உடல், உள்ளம், உணர்ச்சிகளை வளப்படுத்தி, நெறிப்படுத்தி அவர்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் செய்ய வேண்டிய சேவைகளையும் விளக்குகிறது.

குடும்பத்தினரின் சூழ்நிலைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றபடி அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதே மனையியலின் நோக்கம். இல்லத்திலும் வெளியுலகத்திலும் வாழ்வுடன் சம்பந்தப்பட்டவை அனைத்தையும் குடும்பத்தினர் பயன்படுத்தி நலம் பெறவும், அன்றாட வாழ்க்கையிலுள்ள சிக்கல்களைத் தீர்க்கவும் மனையியல் உதவுகிறது. இல்லத்தில் எழில், அன்பு, நலம் ஆகிய பண்புகள் வளர்வதற்கு ஆதாரமாக இருக்கும் குடும்ப வாழ்வு, மனை நிர்வாகம், உணவியல், கலையுணர்ச்சி, உளவியல் ஆகிய துறைகளைத் தன்னகத்தே கொண்டது மனையியல். சுருங்கச்

சொல்லின் இல்லறத்தை நல்லறமாக்குவதே மனையியலின் தலையாய குறிக்கோள்.

நமது நாட்டில் மனையியலைப்பற்றிய அறிவும், அனுபவமும் குறைவாக இருப்பதால், மனையியலைப்பற்றிச் சில தவருன கருத்து கள் நிலவி வருகின்றன. 'சமையல் கலை, தையல் வேலை, குழந்தை வளர்ப்பு-இவைதாமே மனையியல்? நம் தாய்மார்களும், பாட்டிமார்களும், பள்ளி கல்லூரிகளுக்குச் செல்லாமலே, புத்த கங்களும் ஆசிரியர்களும் இல்லாமலே, கேள்வியாலும் பழக்கத் தாலும், பல தலைமுறைகளாக இல்வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்தி வந்திருக்கிருர்களே! அப்படியிருக்க இன்று பள்ளிகள், கல்லூரிகள், ஊராட்சி, சமூக வளர்ச்சி, சமூகநலத் திட்டங்கள் வாயிலாக மனையியல் கல்வியைப் பரப்பவேண்டிய அவசியம் என்ன? மனையியற் கலை என்பதைப் பெண்மையின் உள்ளுணர்வு மூலமாகவும், பகுத்தறிவாலும், பரம்பரைப் பழக்க வழக்கங்களைக் கையாளுவதாலும், கற்றுணர முடியாதா?' என்ற கேள்விகள் மனை யியலைப்பற்றிய தவருன கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு பிறந்தவையே. இத்தகைய தவருன கருத்துகளைப் போக்கி, ஆக்கமும், செல்வமும், ஆற்றலும், ஆரோக்கியமும் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்குவதே மனையியல் விரிவுத்துறையின் (Home Science Extension) நோக்கமாகும்.

நாகரிகம் தோன்றிய காலம்முதல் ஒரு நாட்டின் வளர்ச் சிக்கும், நலத்திற்கும், முன்னேற்றத்திற்கும் மனை (இல்வாழ்க்கை) களமாக இருந்து வந்திருக்கிறது. மனித சமுதாயத்தின் உயரிய நோக்கங்கள், சாதனைகள் அனைத்தும் இன்பமான இல்லங்களை அடிப்படையாகக்கொண்டே பெற முடிந்திருக்கின்றன. சிறப்பாக, நம் நாட்டில் 'வீடு' என்பது அனைவரும் வணங்கும் 'அன்னை' வாழும் திருக்கோயிலாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. அன்பு, அறம், தியாகம், சகோதரத்துவம், பொறுமை, ஒப்புரவு போன்ற உயர்ந்த பண்புகளையெல்லாம் இல்லத்திலிருந்தே, பெற்ற தாயிட மிருந்தே மனிதன் பெற்றிருக்கிருன். இல்லத் தலைவியர் என்றுமே குடும்ப உறுப்பினர்களுக்குத் தூண்டா விளக்காக, உற்ற துணைவிய ராக இருந்து வந்திருக்கிருர்கள். நம் நாட்டு வரலாற்றில் சுடர் விடும் சாவித்திரி, அருந்ததி, சீதை, தமயந்தி போன்ற பெண் மணிகள் இல்லறத்தால் இறவாப் புகழ்பெற்றவர்கள். இவர்கள் தங்கள் கற்பு நெறியால், கடமையுணர்வால், நேர்மையால், அன்பின் அடிப்படையில் தோன்றும் பண்பு நலன்களால் செயற் கரிய செயல்களைச் சாதிக்கக்கூடிய திறமையைப் பெற்றிருந்தனர். எனவே, மனையியற் கலை என்பது நமது பண்பாட்டில் தொன்று தொட்டு வேருன்றிச் சிறந்து வளர்ந்து விளங்கி வந்திருக்கிறது.

ஆனால், இன்றைய சமுதாயத்தில் வாழ்க்கை முறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன; அடுக்கடுக்காக, மாறுதல்கள் வேகமாக வளர்ந்துகொண்டிருக்கின்றன. நமது வாழ்க்கை, நம் தாய்மாரும் பாட்டிமாரும் வாழ்ந்து வந்த காலத்தில் இருந்தவாறு இல்லை. விஞ்ஞானத்தின் சாதனைகளால் மனைவாழ்க்கை பல வழிகளில் வேறுபட்டுக் காணப்படுகிறது. முன்னேற்றத்திற்காகப் போராடும் பெரும் போட்டியின் விளைவாக, குடும்ப வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இறைவழிபாடு, பக்தி, தியாகம் போன்ற ஆன்மீகப் பண்புகள் அடியோடு போய்விட்டனவோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அதனால்தான் விஞ்ஞான முடிவுகளின் துணைகொண்டு, நமது பழமையான பண்பாட்டின் அடிப்படையில், வாழ்க்கையை உயர்த்தும் குடும்ப வாழ்வைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மனையியல் விரிவுமுறைக் கல்வி, ஆண்களும் பெண்களும் பழங்காலத்துச் சம்பிரதாயங்களில் பயனற்றவற்றை அகற்றவும், பயன் தரும் பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் கடைப்பிடிக்கவும், ஆரோக்கிய வாழ்வும், ஆற்றலும் பெறவும் உதவுகிறது. குழந்தைகளும், இளைஞர்களும், முதியவர்களும் புத்தக அறிவையும், கல்விச் சிந்தனையையும், ஆன்மீக ஆற்றல்களையும் பெறவும், மாறிக்கொண்டே வரும் வாழ்க்கைத்தரம், உளவியல் உண்மைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப வாழும் திறமைகளைப் பெறவும் மனையியல் வழிகாட்டுகிறது. தேசிய, மாநில அரசுகள் வழங்கும் வசதிகள், மின்சக்தி, இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், உலக நாடுகளின் தொடர்பு, புதிய சமையல் முறைகள், ஆடை வகைகள், உள்ளத்தின் தன்மைகளைப்பற்றிய உண்மைகள், பொருளாதார மாற்றங்கள் ஆகிய பல புது விளைவுகளை எவ்வாறு திறம்படப் பயன்படுத்துவது என்றும் மனையியல் காட்டுகிறது.

பொருளாதாரத் தேவையால் அல்லது விஞ்ஞான வளர்ச்சியால் கிடைத்திருக்கும் ஓய்வுநேரத்தைப் பயன்படுத்துவதற்காக, இன்று ஏராளமாக மகளிர், தங்கள் இல்லங்களுக்கு வெளியே சென்று பணியாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அகத்தே அன்புடன் மனையறம் நடத்துதல், புறத்தே சென்று பொருள் ஈட்டல் என்ற இரு வேறு கடமைகளையும் செவ்வனே செய்ய அவர்களுக்குத் தனி அறிவும், திறமையும் தேவைப்படுகின்றன. அரசியலிலும், சட்ட மன்றங்களிலும் பெண்கள் ஈடுபட நமது குடியரசு வாய்ப்புகளை நல்கியுள்ளது. இப் பொறுப்புகளை எவ்வாறு ஏற்பது? அதே நேரத்தில் மனை நடத்தும் பண்பினின்றும் எவ்வாறு வழுவாதிருப்பது என்பது மற்றொரு பிரச்சினையாகும்.

இன்றைய சமுதாயம், பண்டைய சமுதாயத்தினின்று பல் வேறு துறைகளில் மாறியிருக்கிறது. முன்னேறிக்கொண்டே யிருக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவாகவும், தொழில் வளர்ச்சியினாலும் நமது பண்பாடுகளும், கொள்கைகளும், குறிக் கோள்களும் மறைந்து அல்லது மாறிக்கொண்டு வருகின்றன. இந் நிலையில், தாய்க்குலத்திற்குத் தொன்றுதொட்டு, வாழையடி வாழையாக வந்துள்ள பண்புகள் அழியாவண்ணம் போற்றிப் பாதுகாக்கும் தலையாய கடமை ஏற்பட்டிருக்கிறது. மகளிர் ஆண் களுக்குச் சமமாகப் பல துறைகளில் முன்னேறி வந்திருப்பினும், இன்றும் அவர்களுடைய மகத்தான பொறுப்பு, குடும்பத்தைப் பரா மரித்துக் குடும்பத்து உறுப்பினர்களின் நலத்தைப் பேணிக் குழந்தைகளை நன்முறையில் வளர்த்து, வரும் காலத்திய நல்ல குடிமக்களாக்குவதே.

பழங்காலத்துக் குடும்பங்கள் இக்காலத்து முறைகளினின்றும் வேறுபட்டிருந்தன. எங்கும் நிலவியிருந்த கூட்டுக் குடும்பமுறை, இப்போது வேகமாகச் சிதைந்து மறைந்துவருகிறது. வேலையாள்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. தொழில்துறை, பொருளாதாரம் ஆகியவற்றில் காணப்படும் முன்னேற்றங்கள் வீட்டு வாழ்க்கை யையும் பல வழிகளில் பாதித்துள்ளன. தொழில் செய்யும் முறைகள், வேளாண்மை ஆகியவற்றின் முன்னேற்றமும், பழமை யான பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் எதிர்க்கின்ற மனப்போக்கும், கிராமப்புற மக்களெல்லாரும் நகரங்களை நாடிச் செல்லும் நிலையும், இந்த மாறுதல்களையெல்லாம் சமாளிக்கக்கூடிய கல்வியை அனைவருக்கும் அளிக்கவேண்டும் என்பதைக் காட்டு கின்றன. இவற்றை நிறைவேற்றும் முயற்சியே மனையியல் விரிவுக் கல்வியாகும்.

ஆகவே, இன்று மனையியல் பல கல்வித் திட்டங்களிலும், விரிவுத் துறைகளிலும் ஒப்பற்ற இடத்தைப் பெற்றிருக்கிறது. முதன்முதலாக, உலகிலேயே மனையியற் கலைச் சங்கத்தை அமெரிக் காவில் நிறுவிய டாக்டர் எல்லன் எச். ரிச்சர்ட்ஸ் என்பவர் 1912ஆம் ஆண்டில் மனையியலைப் பின்வருமாறு விளக்குகிறார்:

'பொருள்களுக்கு அடிமையாவதினின்றும் இல்வாழ்க் கையை விடுவித்து, அதை உயர்ந்த கொள்கைகளுக்கும் குறிக்கோள்களுக்கும் தலைவணங்குமாறு செய்வதும்; மனை வாழ்க் கையை மேம்படுத்த உதவுவதும்; இல்லம், சமுதாயம் இவற் றிற்கு அழியா நன்மைகளை நாடுமாறு உள்ளத்தைத் தூண்டுவித்து உலகியற் சூழ்நிலையில், எளிய ஆன்மீக வாழ்க்கையை மேற்

கொள்ளச் செய்வதும் பழங்காலப் பழக்க வழக்கங்களால் கட்டுப் படாமல் இலக்கிய மனை வாழ்க்கையை நடத்த உந்துவதும் மனையிய லாகும்.'

மனையியல் என்பது, மனைவாழ்க்கைக்குரிய கல்வியாகும். மனை என்பது சுவர்கள் மட்டுமே கொண்டதன்று: அது சமுதாய மக்க ளையும் குறிக்கும். மனையும் குடும்பமும் ஒரு நாட்டின் செல்வ நிலையினை அளக்கும் அளவுகோல்கள். இவை நாட்டின் முன்னேற் றத்தைப் பிரதிபலிக்கின்றன. மனிதர்களை ஆக்குவது வீடு. அது குடும்ப உறுப்பினர்களுடைய உடல், உள உணர்ச்சிகளை, தேவை களைக் கவனித்துப் பராமரித்து அவர்களின் வாழ்க்கையை வளப் படுத்துகிறது; குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது; பண்பாட்டை நிர்ணயித்து, அவர்களது குணநலன்களை உருவாக்குகின்றது; தனிமனிதனையும், சமுதாயத் தையும் மலர்வித்து, அவர்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகிறது. குடிமை, பிறரிடம் மரியாதையாகப் பழகுவது, உடல் நலம், பணியில் திறமை ஆகிய யாவுமே சிறந்த மனை வாழ்க்கையின் மூலமே கிடைக்கின்றன.

ஆன்மீக வாழ்க்கையும், மன நிறைவும், நலமும், அழியாத மகிழ்ச்சியுமே மனையியலின் குறிக்கோள்கள். இவற்றைப் பெறு வதற்காக மனையியல், விஞ்ஞானம், அறிவியற்கலை உண்மைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றது. இத்தகைய கல்வியின் மூலமாகக் குடும்பத்தினர்களுக்குத் தெளிந்த நோக்கு, பரந்த மனப் பான்மை, மன நிறைவு ஆகிய பண்புகள் கிடைக்கின்றன. தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியையும், நாட்டுக்குத் தொண்டு செய்யும் ஆர்வத்தையும் உண்டாக்குதலும், அனைத்துலகச் சமாதானத்தை நிலவச் செய்தலும் மனையியல் ஆற்றும் தொண்டாகும்.

ஆகவே, மனைவாழ்க்கைக்குரிய மனையியற் கல்வியை ஆடவரும், பெண்டிரும், இளைஞரும், முதியோரும் பெறுவதற்கு வழி செய்ய வேண்டும்.

வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளாகிய உணவு, உடை, உறைவிடம், பொருளாதாரம், உடல் நலம், குழந்தை வளர்ப்பு, மனையலங்காரம், சமூகக் கடமைகள் முதலிய பல துறைகளைக் கொண்டது மனையியல். இது இசை, வரலாறு, கலைவெளிப்பாடு, பண்பாடு, சமயம் போன்ற நுண்கலைகளை அடிப்படையாகக் கொண்டது. மனைவாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் உணர்ந்து கொள்வதற்கு இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry), உயிரியல் (Biology), கலை, கட்டடவியல் போன்ற கலைகளின் அறிவு

இன்றியமையாதது. மனிதப் போக்குகளையும் குணங்களையும் புரிந்துகொள்ள உளவியல் (Psychology), சமூகவியல் (Sociology), பொருளாதாரம் (Economics) ஆகிய துறைகள் உதவுகின்றன. இவற்றை அடித்தளமாகக் கொண்டு, மனையியலின் துறைகளான ஊட்டம் (Nutrition), உடை (Clothing), வீடு (Housing), உடல் நலம் (Health), குழந்தை வளர்ச்சி (Child Development), மனித உறவு (Human Relationships), சமூக வளர்ச்சி (Community Development) ஆகியவற்றால் மனையியல் என்ற மாளிகை எழுப்பப் பட்டுள்ளது.

உணவுச் சத்துகள் அல்லது ஊட்டம் என்ற துறையில், நாட்டின் உணவுப் பிரச்சினைகள், உணவு உற்பத்தி, உணவுப்பொரு ளாதாரம், உணவின் தன்மைகள், உணவில் அடங்கியுள்ள சத்துகள், உடல் வளர்ச்சிக்கும், நலத்திற்கும், பணி செய்வதற்கும் தேவையான உணவுப்பொருள்கள், பருவத்திற்கும் வயதிற்கும் ஏற்ற உணவுகள், உணவுச் சத்துக் குறைவால் உண்டாகும் விளைவுகள், அக் குறைகளைப் போக்கும் முறைகள், உணவுச் சத்து வீணாகாதவாறு சமைக்கும் முறை, மணம், குணம் முதலியவை நீங்காத முறையில் உணவைப் பிற்காலத்திற்கெனப் பாது காத்தல், உணவுப் பொருள் வாங்குவதற்குச் சிறந்த முறையில் பணத்தைச் செலவிடுதல், உடலுக்குள் உணவு அடையும் இரசாயன மாறுதல்கள், உணவைப்பற்றி மக்கள் கொண்டிருக்கும் தவறான கருத்துகளை மாற்றும் முறைகள் ஆகியவை அடங்கி யுள்ளன. உடல் நலத்திற்கும், சத்துள்ள போதுமான உணவிற்கு முள்ள தொடர்பு, சுகாதார முறையில் உணவைத் தயாரித்தல், உணவு உண்ணும்போது உள்ளம் மகிழ்ச்சியுடன் இருப்பதன் அவசியம் ஆகியவற்றையும் இத் துறை வலியுறுத்துகிறது.

குடும்ப உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இருக்க இடமும், உடல் வளமும், சுகமும் அளிக்க உதவுவது வீடு. ஆகவே, வீடு எவ்வாறு அமைக்கப்பட வேண்டும்? செலவையும், வேலை யையும் குறைக்கும் தளவாடப் பொருள்கள் யாவை? குறைந்த கருவிகளைக்கொண்டு கூடுதலான வேலைகளைச் செய்யுமாறு வீட்டை அமைப்பது எவ்வாறு? வீட்டில் அழகு, ஆரோக்கியம், காற்றோட் டம், நடமாட வேலைசெய்ய வேண்டிய வசதிகளைப் பெறுவது எப்படி? குறைந்த செலவில் நிறைந்த பயன்தரும் வீடுகளை எப்படிக் கட்டுவது? விலைக்கு வாங்கிய வீட்டிலோ வாடகைக்குக் குடியிருக்கும் வீட்டிலோ நமது தேவைக்குத் தகுந்த மாற்றங்களை எவ்வாறு செய்துகொள்வது? வீட்டுத் தோட்டம், காய்கறித்

தோட்டம் அமைப்பது எப்படி? ஆகியவை வீட்டைப்பற்றிய பகுதியில் ஆராயப்படுகின்றன.

உடை என்ற பகுதியில், உடையைத் தேர்ந்தெடுத்தல், பாது காத்து வைத்தல், தைத்தல், குடும்ப வருவாய்க்கு ஏற்ப உடைகளை நியாய விலைக்கு வாங்குதல், நூலிழைகளைப்பற்றிய விஞ்ஞான அறிவு, இழைகளின் தன்மை, உடைகளின் நிறங்கள், கெட்டிச் சாயத்தின் நிலை, இழைகள் சுருங்கும் தன்மை, பட்டு, பருத்தி, லினன் ஆகிய இழைகளின் தன்மை ஆகியவை கற்கப்படுகின்றன. துணிக்காகச் செலவழிக்கப்படும் செலவு பல குடும்பங்களில் பெரிய தொகையாக இருக்கிறது. அவர்கள் நல்ல துணிகளைத் தேர்ந் தெடுக்காது, எடுத்த துணிகளையும் நன்கு பாதுகாக்காது வீணுக்கு கிறுர்கள். ஆகவே, துணிகள் நீண்ட நாள்களுக்கு நீடித்து உழைப்ப தில்லை. நிறங்கள் மங்குகின்றன. நூலிழைகள் அறுந்துபோகின்றன. செயற்கைப் பட்டுகளைப் பெரும்பாலோர் நல்ல பட்டென்று நினைத்து விலைக்கு வாங்குகின்றனர். ரேயான் ஈரத்தில் வலுவற்றது. துணிகள் பெரிதும் சுருங்குகின்றன. போர்வைகள் போன்ற கனமான துணிகளில் தூசிபடிந்து எளிதில் அழுக்கடைகின்றன. ஆகவே, கல்வி, ஆரோக்கியம், ஓய்வு இவற்றிற்காகச் செலவழிக் கப்பட வேண்டிய பணம், இத்தகைய வேண்டாத துணிகள், உடைகள், அணிகள் ஆகியவற்றிற்காகத் தேவையற்ற முறையில் செலவழிக்கப்படுகின்றன. உடைகளைச் சரியாகத் தேர்ந்தெடுக் கவும் பயன்படுத்தவும் மனையியல் உதவுவதால், நாட்டின் செல் வத்தில் கணிசமான அளவு மிச்சமாகும். வயதிற்கும், கால நிலைக்கும் ஏற்ற உடைகள், தம் உடைகளைத் தாமே தைத்துக் கொள்ளுதல்மூலம் ஏற்படும் சிக்கனம், நாட்டின் பண்பாட்டை வெளிப்படுத்தும் உடைகளின் வரலாறு, துணிகளைச் சலவை செய்யும் முறைகள், கிழிந்தவற்றைத் தைத்தல், பழுது பார்த்துப் பாதுகாத்தல் ஆகிய பகுதிகளும் இப் பிரிவில் அடங்கியுள்ளன.

மனையறத்து வெற்றியின் இரகசியம், குடும்பநிர்வாக முறை யாகும். கிடைக்கும் பொருள்களை மிகச் சிறந்த முறையில் பயன் படுத்தி நிறைந்த பயன்பெறுவதே நல்ல நிர்வாகம் எனப்படும். அதனை அடையக் குடும்பத்தினர் எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும். வீட்டில் மகிழ்ச்சியும் நிறைவும் நிலவச் செய்ய வேண்டும், வீட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் போதிய உணவு, உடை, இடம், உடல் நலம், கல்வி ஆகியவை கிடைக்குமாறு மனைத் தலைவியும், குடும்பத் தலைவரும் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். ஒவ்வொருவருடைய தேவைகளுள் முக்கியமான

வற்றை எடைபோட்டுத் தெரிந்து, அவற்றை நிறைவு செய்யும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும். சிறு கைத்தொழில்களைச் செய்து அவற்றால் வருவாயைப் பெருக்கி, எதிர்காலத்திற்கெனச் சேமித்து வைக்கவேண்டும். வேலையைக் குறைக்கும் முறைகளையும், கருவிகளையும் தெரிந்து பயன்படுத்த வேண்டும் என்ற பல கருத்துகளை விளக்குவது மனை நிர்வாகவியல்.

மனையியலில், நல்வாழ்வு (ஆரோக்கியம்) ஒரு முக்கியமான பிரிவாகும். ஆரோக்கிய வாழ்வு மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. எனினும், ஏழ்மையாலும் அறியாமையாலும் பலர் நோய்களின் பிடியில் சிக்குகின்றனர். நலமான உடலில்தான் வளமான உள்ளம் பதிய முடியும். வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிறைவும் நிறையும். உடல் நலனைப் பாதுகாக்கச் சுகாதாரமான உணவு, உடை, வீடு என்பனபற்றியும், ஆரோக்கிய நிலையிலும், நோய்ப்பட்ட நிலையிலும் கிருமிகள் (Bacteria) எவ்வாறு செயலாற்றுகின்றன என்பதைப்பற்றியும், தொற்றுநோய்கள் வராதவாறு பாதுகாப்பது எங்ஙனம் என்பதுபற்றியும், நோயாளிகளைப் பராமரிப்பதுபற்றியும் இப் பிரிவு காட்டுகிறது.

குழந்தைகள் நாட்டின் எதிர்காலக் குடிமக்கள். குழந்தைகளின் சிறந்த முதற்பள்ளி இல்லமே என்பதை உளவியல் அறிஞர்கள் காட்டியிருக்கின்றனர். குழந்தைப் பருவ நினைவுகள் ஒருவனின் ஆன்ம வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன. அவர்களுடைய முழு வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சாதகமான சூழ்நிலையில் அவர்களை வளர்க்க வேண்டும். மக்களாட்சியின் வளர்ச்சிக்கான சூழ்நிலை இல்லத்திலேயே தொடங்குகின்றது. ஒருவனின் எதிர்கால வாழ்க்கைக்கான அடித்தளமும் குழந்தைப் பருவத்திலேயே போடப்படுகிறது. குழந்தையின் வெற்றி தோல்விகளுக்குத் தாயும், தந்தையுமே பொறுப்பாக விளங்குகிறார்கள். குழந்தைப் பருவ அனுபவங்களின் வாயிலாகத்தான் எதிர்காலம் உருவாகின்றது. குழந்தைப் பருவத்தின் தேவைகள், குழந்தைகளின் உடல் வளர்ச்சியோடு தொடரும் உளவியல் மாற்றங்கள், குழந்தைகளுக்கான உடைகள், உணவுச் சேர்க்கைகள், திருப்தியும் ஓய்வும், விளையாட்டும் கல்வியும் கொடுக்கும் ஆரோக்கியப் பொருளாதார நிலைகள் ஆகியவற்றை அறிவுறுத்தலுக்குக் குழந்தை வளர்ப்புப் பகுதி.

இவ் வுலகில் யாரும் தனித்து வாழ்வதில்லை; வாழ வேண்டியதுமில்லை; மக்கள் குழுமிய சமுதாயத்திலேதான் வாழ வேண்டும். ஆகவே, ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் சமாதானமாக இருக்கச்

சமூக உறவுகளை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும். நல்ல சமூக உறவுகளை வளர்த்துக்கொள்வதற்காக உளவியல், சமூக வியல் போன்ற மற்றும் பல துறைகளும் மனையியற் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

'ஒரு மனிதனுக்குக் கல்வி ஊட்டும்பொழுது, தனியொருவனுக்குக் கல்வி ஊட்டுகிறோம். ஆனால், ஒரு பெண்ணுக்குக் கல்வி அளிக்கும்பொழுதோ, ஒரு குடும்பத்திற்கே கல்வி அளிக்கின்றோம்' என்ற சீனப் பழமொழி, பொறுப்புகள் மிக்க மனைவாழ்விற்கு ஏற்ற கல்வியின் இன்றியமையாமையைக் காட்டுகிறது. கல்வி என்பது ஆளுமையை வளர்க்கும் சக்தி. ஆகவே, அஃது ஒவ்வொருவரது திறமை, ஆர்வம் இவற்றை உணர்ந்து அவற்றை வெளிப்படுத்துமாறு அமையவேண்டும். பொருளற்ற சம்பிரதாயங்களை அகற்ற அல்லது மாற்றவேண்டும்.

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தம் கல்வியறிவைப் பெருக்கிக்கொள்வதோடுகூட, வீட்டிலும் வெளியிலும் எத்தகைய நிலைமையையும் சமாளிக்கும் திறமையும், வலிமையும், பண்பு நலனும் பெறுதல் வேண்டும். அன்பின் நிறைவுக்கும், வாழ்வின் இன்பத்திற்கும் இடமாக, இல்லத்தின் சூழ்நிலையை அமைக்க வேண்டும். வீட்டில் பக்தி, பண்பாடு, அழகு, அமைதி ஆகியவற்றை வளர்க்க வேண்டும்.

இல்லாளின் பொறுப்பினைப் போன்ற பலதிறப்பட்டது. உலகில் வேறு எந்தப் பணியுமில்லை. இல்லாள் தன் வீட்டில் மருத்துவராக, பணிப் பெண்ணாக, உணவியல் வல்லுநராக, நிதிப் பொறுப்பாளராக, தையற்காரராக, சமையற்காரராக, உணவுச் சத்து ஆராய்ச்சியாளராக, குடும்ப நிர்வாகியாக, அழகுக் கலைஞராக, வாழ்க்கைத் துணைவராக, மனைவியாக, தாயாக விளங்க வேண்டும். சமூகத்திலும் உறுப்பினராகப் பல கடமைகளைச் செய்யவேண்டும். இத்தகைய பெரும் பொறுப்புகளைத் தாங்குவதற்கு ஏற்ற கல்வியை அளிக்க வேண்டாமா?

குடும்ப வாழ்க்கையைச் சிறப்பித்தல் மனையியலின் முக்கிய நோக்கமாகும். குடும்ப உறுப்பினர்கள் தாம் வாழும் சூழ்நிலையை நன்குணர்ந்து, தமக்குள்ள வாய்ப்புகளை முழுதும் பயன்படுத்தி நிறைவுபெற மனையியல் உதவுகிறது. அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்த வழி காட்டுகிறது. குடும்பத்தில் இசை, கலை, அழகுணர்ச்சி ஆகியவை மனிதனை அன்றாடத் தொல்லைகளிலிருந்து விடுவிக்கின்றன. கலையுணர்ச்சி வெளிப்பாட்டினால் சிறந்த சமூக உறவுகள் விளங்கு

கின்றன. ஆன்மீகத்தின் அடிப்படையில் ஆரோக்கியமான நல்வாழ்வு, வீட்டை அழகாக வைத்தல், சத்துணவு, குழந்தை வளர்ப்பு, நல்ல பழக்க வழக்கங்கள்பற்றி மனையியல் அறிவைப் பரப்புவது நாட்டு மக்கள் நல்ல வலிவுடனும் பொலிவுடனும் வாழ வழி செய்யும்; வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்தும்.

மனையியல், மக்களுக்கு மனைவாழ்க்கைக் கல்வியாக இருப்பதுடன், சில பணிகளுக்கும் பயிற்சியளிக்கிறது. மனையறம் நடத்துவதும், மகிழ்ச்சியான குடும்பங்களை உருவாக்குவதுமே பணிகளுள் சிறந்த பணியாகும். குடும்பத்தின் பொருளாதாரத்தை நல்ல நிலையில் வைப்பதற்கும் மனையியல் உதவுகிறது. சமுதாயத்தில் பெருகிவரும் பொருளாதாரத் தேவைகளாலும், விலைவாசி உயர்வதால் ஏற்படும் நெருக்கடிகளாலும் பெண்களும் ஊதியத்திற்காக வீட்டை விட்டு வெளியேறிப் பணியாற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் பல துறைகளில் பணிபுரிவதற்கேற்ற பயிற்சியை மனையியல் அளிக்கிறது. இன்று மற்றத் துறைகளில் தேர்ச்சிபெற்ற பெண்கள் படிப்பு முடிந்த பின்னர், வேலையில்லாது திண்டாடும் போது மனையியல் கற்றவர்களுக்குச் சமூக நல ஊழியர்களாக, ஆசிரியர்களாக, உணவு ஆலோசகராக, ஆராய்ச்சியாளர்களாகப் பணிபுரியும் வாய்ப்புகள் பெருகியுள்ளன. பெண்கள் தங்கள் இல்லங்களுக்கும், சமுதாயத்திற்கும் ஒரே வேளையில் தொண்டு செய்ய மனையியல் பெரிதும் உதவி புரிகிறது.

மனையியற் கல்வி தரும் நிரந்தரப் பயன்களால் கல்வித் திட்டத்தின் பல்வேறு நிலைகளிலும், குழந்தைப் பள்ளி முதல் கல்லூரி, பல்கலைக்கழக மேற்படிப்பு வரையிலும், ஆராய்ச்சித்துறையிலும் அதற்குப் பெரும் இடம் உள்ளது. சமூக வளர்ச்சி விரிவுத் திட்டத்திலும் (Community Development Programme) மனையியல் பயிற்சி பெற்றவர்களுக்குப் பல வேலைகள் உள்ளன. அத்திட்டத்தில் பணி செய்துவரும் கிராம சேவிகைகள் (Grama Sevika), வட்டார நலப் பணியாளர் (Mukhya Sevika) ஆகியோருக்கு மனையியலின் கல்விமுறைகளில் (Home Scienc Extension Methods) ஓராண்டுக்கு ஆழ்ந்த பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் அவர்கள் மகளிர் நலம், தாய்சேய் நலம், வட்டார வளர்ச்சி, சமூக முன்னேற்றம் ஆகியவற்றில் பொறுப்பேற்றுச் செயல்படுகின்றனர். அவர்களுடைய பணியிடைப் பயிற்சித் திட்டங்களிலும் (Refresher Courses) மனையியலுக்குத் தனியிடம் தரப்பட்டுள்ளது. இங்ஙனம் பல வழிகளில் மனையியல் சமுதாயத்திற்குத் தொண்டு செய்கிறது. மனையியலின் ஆன்மீக நலங்களை வெளியுலக அளவுகோல் கொண்டு அளக்க இயலாது. அது மக்களாட்சி நாட்டில் வாழ்வதற்கேற்ற நற்பண்புகளை மக்களிடம் உண்டாக்குகிறது,

2. விரிவுக் கல்வியின் தத்துவங்களும் கொள்கைகளும்

(THE PHILOSOPHY AND PRINCIPLES OF EXTENSION)

விரிவுக் கல்வி (Extension Education) வாழ்க்கைக்கு அடிப்படையான கல்வியின் - ஆராய்ச்சியின் முடிவுகளை மக்களிடையே பரப்புவதற்காக இந்த நூற்றுண்டில் அமைப்புப்பெற்ற ஒரு துறையாகும். அது சமூக நலம், நல்வாழ்வு, தொழில் வளம், முதியோர் கல்வி, மனையியல் ஆகிய துறைகளில் சிறப்பான அங்கம் வகித்து வருகிறது.

விரிவுக் கல்வியின் தத்துவம்

விரிவுக் கல்வியின் தத்துவத்தைக் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர், தேசத் தந்தை அண்ணல் காந்தியடிகள், மற்றும் மேனுட்டு அறிஞர்கள் பலர் எடுத்துக் கூறியுள்ளனர். இவர்கள் அனைவரும் கூறியபடி விரிவியல் தத்துவம் ஒரு தனிநபரின் ஆளுமை, குடும்ப வாழ்வு ஆகியவற்றை மலர வைக்கும் குறிக்கோள் கொண்டது. விரிவுக் கல்வியின் உதவியால், ஒரு விவசாயி அல்லது குடும்பத் தலைவி, தன் குடும்பத்தை முன்னேற்றப் பாதையில் செயல்பட வைக்க முடிகிறது.

மக்களாட்சி அமைப்பில், தனிமனிதனுக்கு மிக உயர்ந்த இடம் உள்ளது. அவன் குடும்பத்தின், குழுவின், சமுதாயத்தின், நாட்டின் கருவூலமாகக் கருதப்படுகின்றான். அக் 'கரு' இன்றி எதுவும் வளராது. ஒரு தனிமனிதன் தன் எண்ணத்திலும், செயலிலும், வாழ்க்கை முறையிலும் வளரும் சமுதாயத் திற்கேற்றபடி ஆக்கமான மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ள விழையும் போதுதான் சமுதாயமும், நாடும் உயிர்பெற்று எழுகின்றன. எனவே, ஒரு சமுதாயத்தை நல்ல பாதையில்

மாற்ற வேண்டுமானால் அதிலுள்ள ஒவ்வொரு மனிதனும் அங்ஙனம் விழைந்து முன்னேற்றம் காண முயற்சி செய்யவேண்டும்.

ஒவ்வோர் இல்லமும் பண்பாட்டின் பிறப்பிடம். அது விஞ்ஞானம், பொறியியல் ஆகியவற்றின் வளர்ச்சியின் இறுதிப் பயன்களால் தாக்கப்படும் களம். விஞ்ஞான வளர்ச்சியின் வாயிலாக ஏற்படும் மாறுதல்களை ஒவ்வொரு குடும்பமும் மனமுவந்து ஏற்றுச் செயல்படும்போதுதான், விஞ்ஞானம் உருப்பெற முடியும். ஆகவே, விரிவியல் பணியாளர் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களையும் தனிநபர்களின் இல்லங்களையும் இணைக்கும் பாலங்களாகச் செயல்படுகின்றனர்.

ஒவ்வொரு குடும்பமும், குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் முதல் பயிற்சிக் களம். ஒரு குழந்தை, தன் இளம் பருவத்தின் பெரும் பகுதியைத் தன் உறவினருடன், குறிப்பாகத் தாயுடன் கழிக்கிறது. எனவே, குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்குக் குடும்பத்திலுள்ள அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். குழந்தையின் தாய், சரியான குழந்தைப் பராமரிப்பு முறைகளை அறிந்திருத்தல் வேண்டும். இதற்கு விரிவுக் கல்வித் துறை பெரிதும் உதவுகிறது.

மனித நாகரிகம் மனிதனுக்கும், அவன் சார்ந்துள்ள நிலத்திற்கும் உள்ள அழியாத தொடர்பை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்திருக்கிறது. உதாரணமாக, ஒரு விவசாயிக்குக் கல்வியினால் ஏற்படும் மாறுதல்களைப் பொறுத்தே, அவன் நிலத்தில் ஏற்படும் முன்னேற்றங்களும் அமைய முடியும். எனவே, விஞ்ஞான ஆராய்ச்சிகளினாலோ, அல்லது அவை ஏற்படுத்த விழையும் முன்னேற்றங்களினாலோ பயன்பெற வேண்டுமென்றால் ஆராய்ச்சிக்கும், மக்களுக்கும் நேரடித் தொடர்பு உண்டாகவேண்டும்.

விரிவுக் கல்வியின் கொள்கைகள்

கொள்கைகள், அன்றாட வாழ்க்கையை நெறிப்படுத்த உதவும் அடிப்படை உண்மைகளாகும். விரிவியல் கல்வியின் கொள்கைகள் கீழ்வருமாறு :

(1) விரிவுத் துறை மக்களது தேவைகளையும், குறிக்கோள்களையும், விருப்பங்களையும் நிறைவுசெய்வதை அடிப்படையாகக் கொண்டது. மக்கள் கல்வியறிவு பெறவேண்டுமாயின் தங்கள் தேவைகளை முதலில் உணரவேண்டும். அத்தகைய உணர்ச்சி உண்டாக, விரிவுத் துறை விழிப்புணர்ச்சி ஏற்படுத்த உதவுகிறது.

(2) மக்களின் ஈடுபாட்டை அடித்தளமாகக் கொண்டது விரிவுத் துறை. மக்களே முன்வந்து திட்டங்களைத் தீட்டவும், தீட்டிய திட்டங்களை நடத்தவும், மதிப்பீடு செய்யவும் முன்வர விரிவுத் துறை தூண்டுகிறது. நமது ஜனநாயக அமைப்பின் வெற்றிக்கு வழிகோலுவது திட்டங்கள். அத்தகைய ஈடுபாடு மேலிடத்திலிருந்து அதிகாரத்தில் திணிக்கப்பட்டதாயிருத்தல் கூடாது.

(3) ஒவ்வொரு சமுதாயத்திலுமுள்ள மூலப் பொருள்களையும், மனித ஆற்றல் சக்திகளையும் நன்முறையில் பயன்படுத்த விரிவுக் கல்வி வாய்ப்பு ஏற்படுத்துகிறது.

(4) முன்னேற்றப் பணிக்காகச் சமுதாயத்திலுள்ள மக்களின் பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும், நோக்கங்களையும் நன்கு அறிந்திருத்தல் அவசியம். பண்பாட்டு-ஒருமைப்பாட்டுத் திட்டங்களின் வெற்றிக்கும் உறுதுணையாகிறது. மாறுதல்களை நினைத்த உடனே கொண்டு வந்துவிட முடியாது. பொறுமையைக் கடைப்பிடித்தல் அவசியமாகிறது.

(5) புதிய உண்மைகள் முறைகளைச் செயல்மூலம் விளக்குவது விரிவியல் கல்வி. அப்பொழுதுதான் மக்கள் மனத்தில் நம்பிக்கை ஏற்பட வழியுண்டு. மக்களது மூடநம்பிக்கை அகலவேண்டுமானால், அவர்களே ஒரு செயலைச் செய்து பார்த்துத் திருப்தி பெறவேண்டும்.

(6) விரிவுக் கல்வி, ஆராய்ச்சியையும் மக்களையும் இணைக்கும் பாலம். ஆராய்ச்சிகளின் முடிவுகளை மக்களுக்கு அறிவிப்பதோடு, மக்களது பிரச்சினைகளையும் ஆராய்ச்சியாளர்களுக்கு எடுத்துக் கூறுகிறது. விரிவாக்கப் பணியாளர்கள், இந்தக் கண்ணோட்டத்துடன் விழிப்புடன் ஈடுபடுதல் அவசியம்.

(7) விரிவுப் பணி ஒரு தனிநபருக்கு மட்டுமன்றி அவரது குடும்பத்துக்கும் சமுதாயத்திற்கும் பயன்படக்கூடியது.

(8) விரிவுக் கல்வி, மக்களுக்குப் புரியக்கூடிய வகையில், மிகச் சிறந்த முறைகளைக்கொண்டு கல்வியளிக்கிறது. ஒரே செய்தியைப் பல கல்வி முறைகளின்மூலம் மக்கள் மனத்தில் நன்கு பதியும்படி பரவச் செய்கிறது.

(9) மக்கள் சுய நிறைவுடன் வாழ உதவுவது, விரிவுக் கல்வியின் தலையாய குறிக்கோள். மக்களிடையே நல்ல

தலைமையை உருவாக்குவது அதன் நோக்கம். நல்ல மக்களைச் சார்ந்த தலைவர்களை உருவாக்கி நம்பிக்கையை ஒளிவிடச் செய்வது.

(10) விரிவுக் கல்வி வயது, இனம், பால், சமூக அந்தஸ்து, பொருளாதார ஏற்றத் தாழ்வு போன்ற வேறுபாடின்றி அனைவருக்கும் பயன்படுகிறது. ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர், ஏழைகள், பணக்காரர்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய அனைவருக்கும் விரிவுக் கல்வி உதவுகிறது.

(11) விரிவுக் கல்வியில் இடைக்கால மதிப்பீடுகள்மூலம் நிறை குறைகள் அறியப்பட்டு, தேவையான மாற்றங்களையும் உடனுக்குடன் செய்துவிட முடிகிறது.

மனையியல் விரிவுக் கல்வி

இன்று நமது நாட்டில் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றில் வறுமை, கல்வியறிவின்மை, சத்துணவின்மையால் ஏற்படும் நோய்கள், மக்கள்தொகை கட்டுக்கடங்காமல் பெருகிக் கொண்டே போவது ஆகியவை, நாட்டு வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் பாதிக்கின்றன. சென்ற நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களின் பெருமுயற்சிகளால் விவசாயம், உணவு-உற்பத்தி, தொழில்-வளர்ச்சி, கல்வி, தொற்றுநோய்த் தடுப்பு, வாழ்நாள் அதிகரிப்பு ஆகிய துறைகளில் கணிசமான முன்னேற்றங்களைக் கண்டும், மேற்கூறிய பிரச்சினைகளும் வளர்ந்துகொண்டு வந்திருப்பதால் வாழ்க்கைத்தரம் உயராமல், பிணிகள் குறையாமல், கல்வி வளராமல், வறுமை ஒழியாமல், மனித குணங்களும் உறவுகளும் கெட்டு வருகின்றன. இந்நிலையில் அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியம், குறைந்த தொகையில் நன்மக்கள், சமுதாயத்தில் பெயர், புகழ், நட்புறவு, நல்ல தோற்றம், உடை, சக்தி, ஆற்றல் செல்வத்தைப் பெருக்குதல், வாழ்வில் மலர்ச்சி ஆகிய நலங்களை நல்கும் விரிவுக் கல்வி (Ex'ension) தேவைப்படுகிறது. இவற்றைப் பெறுவதற்கு ஆதாரமாக இருப்பது மனையியல் விரிவுக் கல்வி காட்டும் நல்லுணவும் நல்வாழ்வுமே.

விவசாய விரிவுக் கல்வி

நல்லுணவு கிடைக்க நல்ல விவசாயம் வேண்டும். விவசாய உற்பத்திப் பெருக்கத்துடன் விவசாயப் பண்டங்களுக்கு நல்ல விற்பனை, உணவுப்பொருள்களைப் பாதுகாத்தல், பண்ணை நிர்வாகம்,

குடும்ப நலம் ஆகியவை உயர்ந்த நிலையில் அமையவேண்டும். விவசாயம் சிறக்க நல்ல விதைகள், நாற்றுகளைப் பயன்படுத்தல், கால்நடைகளைத் தேர்ந்தெடுத்தல், பொருத்தமான உரம், எருவைப் பயன்படுத்துதல், செடிகளையும் கால்நடைகளையும் தாக்கும் பூச்சிகளை அழித்தல், வளரும் பயிர்களை, பிராணிகளைப் பேணுதல், வேலைகளைச் சுருக்கும் கருவிகளைப் பண்ணையில் உபயோகித்தல், கிடைக்கும் நீரைத் திட்டமிட்டுப் பயன்படுத்துதல் ஆகிய முறைகளை நன்கு கையாள வேண்டும்.

விவசாய உற்பத்தி உயர்வதுடன் அவற்றை நியாய விலையில் விவசாயி விற்பதற்கேற்ற விலைகளும், கிடங்குகளும் வேண்டும். நமது பண்ணைகளிலும், வீடுகளிலும் ஓரளவான விரயம் இருக்கிறது. இருக்கும் நிலம், நீர், மக்கள் பலம் ஆகியவற்றை விரயமின்றிக் காத்து வளப்படுத்த வகை தெரியவேண்டும்.

பண்ணை நிர்வாகம் நன்கு நடைபெறுதல் அவசியம். இயற்கையன்னை எத்தனை வரங்கள் அளித்திருந்தாலும், அவற்றைச் சீரிய முறையில் நிர்வகித்துப் பண்ணையில் வரவுகளும் செலவுகளும் திட்டமிட்டுச் சிக்கனமாகச் செயல்பட வேண்டும்.

விவசாயியின் குடும்பத்தில் சத்துணவு உண்டு நல்ல ஆரோக்கியமுள்ள உறுப்பினர் இருந்தால், உழைப்பு அதிகமாகி உற்பத்தியும் பெருகும். அகமும் புறமும் சுத்தமாக உள்ள வீட்டில், அன்பும், பண்பும், மலர்ச்சியும் அடிப்படையாக இருக்கும் சூழ்நிலையில் வசதியான சமையற்கூடத்தில் சமைத்த நல்ல உணவை உண்டு, குழந்தைகள் ஆனந்தமாக வளரும்போது, ஆக்கமுள்ள நாடே உருவாகிறது.

மேற்கண்ட முயற்சிகளால் வளமிக்க சமுதாயம் உருவாகி, வாழ்க்கைத்தரம் உயர வேண்டும். மக்கள், கவலையின்றி மனர்ச்சியாக உழைக்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சியில் விரிவுப் பணியின் பங்கு

நாட்டின் வளத்திற்கு (1) பொருளாதாரம், (2) சத்துணவு, (3) வீடு, (4) சுகாதாரம், (5) கல்வி வளர்ச்சி, (6) முயற்சி, (7) விவசாயம், (8) குடும்ப நிர்வாகம், (9) கூட்டுறவு, (10) சமூக முன்னேற்றமும் வாழ்க்கையில் நிறைவும் ஆகியவை ஆதாரமானவை. இவற்றையடைய மனையியல் விரிவுத் துறை உதவுகிறது.

1. **பொருளாதாரம் :** மக்களின் பொருளாதாரத் தேவைகள் நிறைவு பெற்றால்தான் அவர்கள் வாழ்க்கை மலர முடியும்.

அதற்கு உழவும், தொழில் உற்பத்தியும் விரிவியல் துறையின் விஞ்ஞான நோக்குக்கொண்டு உதவியைப் பெற்று விவசாயிகள் தங்கள் விளைச்சலையும், மற்றவர்கள் தங்கள் உற்பத்தியையும் பெருக்கும் வழிமுறைகளை விரிவுப் பணியாளரிடம் கற்று முன்னேறும்போது, நாட்டின் பொருளாதாரத் தேவைகள் நிறைவாக வழி பிறக்கும்.

மனையியல் விரிவுத் துறை, மக்களின் அடிப்படைத் தேவைகளையும் பிரச்சினைகளையும் உடனடியாகத் தீர்த்து நல்வாழ்வினை ஏற்படுத்திக்கொள்ள வழிகாட்டுகிறது. மேலும், அது தொழிற்கலை, நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை வளப்படுத்தி மக்கள் புதிய நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொண்டு, தொடர்ந்து நல்வாழ்வு வாழ வழிவகுக்கிறது.

2. **சத்துணவு**: மக்கள் சத்துள்ள உணவைச் சாப்பிடுவதன்மூலம் அவர்கள் உழைக்கும் சக்தியும், உழைப்பால் கிடைக்கும் நலன்களும் அதிகரிக்கின்றன. சத்துணவு பெற மக்கள் முட்டை, பால், பழம், காய்கறி, பருப்புப் போன்ற உணவுகளை அதிகமாக உற்பத்தி செய்து உண்ணவேண்டும். விரிவியலால் கல்வி விருத்தியாவதுடன் பொதுமக்கள் நலமும், பணி செய்வோர் திறனும், விவசாயமும் காக்கப்படும்.

3. **வீடு**: குடும்பத்திற்கு உணவு போலவே, ஆபத்தின்றி வாழ்வதற்கும், வாழ்க்கைத்தரத்தில் முன்னேறுவதற்கும் தேவையானது வீடு. மக்கள் வசதிகளுடன் சுகமாக வாழ்ந்தால்தான் நன்கு உழைக்க முடியும். சமூகத்தில் மதிப்பாக இருக்கவும் நண்பர்களால் உயர்வாக எண்ணப்படுவதற்கும் நல்ல வீடு வேண்டும்.

4. **சுகாதாரம்**: நோயாளிகளைக் குணமாக்குவது மட்டுமன்றி நோய் வருமுன்னரே தடுப்பதுபற்றி முயற்சிகள் வகுக்க வேண்டும். வீட்டையும் பொது இடங்களையும், உள்ளும் புறமும் சுகாதாரமாக வைப்பது எப்படி என்பதை மனையியல் விரிவுத்துறை புகட்டுகிறது.

5. **கல்வி வளர்ச்சி**: வாழ்க்கையில் பாமர மக்களும் கல்வியால் கிடைக்கும் தம் சொந்த முயற்சியால் முன்னேறுவதற்கு மனையியல் விரிவுத்துறை வழிகாட்டுகிறது. விவசாயம், குடும்பத்தைச் சீராக்கும் முறை, குடும்பத்தாரின் நலம், நாட்டின் உயர்வு ஆகிய நோக்கங்களுடன் விரிவியல், கல்வி வளர்ச்சிக்கு அடிப்படையாகிறது. பள்ளிப்போதனையைப் பொறுத்து அமையாமல், தமக்கு நல்லது எது என்பதை மக்கள் தாமாகவே அறிந்துகொள்ள உதவுகிறது.

மக்களின் அறிவு வளர்ச்சியும், திறமையும், அவர்களுக்கு வேண்டிய கல்வி கிடைக்கும்போது பெருகுகின்றன. உதாரணமாக-வீரிய மக்காச்சோளத்தைப் பயிர் செய்யும் துறையினர், விவசாயிகள் மக்காச்சோளச் செடி எவ்வாறு வளருகிறது என்பது பற்றி அறிவூட்ட முடிகிறது. அவற்றைப் பூச்சிகள் அரிக்காதபடி பாதுகாத்துக்கொள்வதுடன், பூச்சி அரித்தால் என்னென்ன மருந்துகளைத் தெளிக்க வேண்டும் என்பதைப்பற்றியும் காலத்தில் தெரிவித்தால், மக்காச்சோளத்தின் வளர்ச்சியையும் விளைச்சலையும் பெருக்கலாம். அப்படிக் கிடைத்த மக்காச்சோளத்தை எப்படிப் பதமாகச் சமைத்துச் சத்துக்குறைவின்றி உண்ணலாம்என்பதையும் கற்றுத்தருகிறது. கிராமங்களில் பெரும்பாலோர் படிப்பறிவு குறைந்தவர்களே. ஆனால், விரிவியல் துறையினர்மூலம், வேளாண்மைத் துறையில் அறிவியல் பயிற்சியும், தேர்ச்சியும் பெற்று எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளலாம்.

குழந்தைகளுக்கு மட்டுமல்லாது, இளைஞர், முதியோர், பொது மக்கள், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவருக்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் கல்வியை விரிவியல் தருகிறது. மனையியல் விரிவுத் துறை, இயற்கையாக உள்ள வசதிகள்-சாதனைகளைப் பயன் படுத்திக் கல்வியைத் தருகிறது. விவசாயிகளுக்கு அவர்கள் பண்ணையிலும் குடும்பங்களிலும் பாடம் கற்பிக்கப்படுகிறது. கிராம சேவிகைகளுக்கு, மகளிர் மன்றங்களிலும் கல்வி முறைகள் காட்டப் படுகின்றன.

6 **மக்களது தன்னம்பிக்கை, முயற்சி** விரிவியலானது 'மக்களுக்காக அல்ல; மக்களுடன் ஒன்றி' இருக்கிறது. இந்த உறுதியே மக்களுக்குத் தன்னம்பிக்கையை உண்டாக்குகிறது. பல உண்மைகளைக் கற்பிப்பதுடன், மக்கள் தம் முயற்சியால் தம் சிக்கல்களைத் தீர்க்கவும் முடியும் என்று ஊக்குவிக்கிறது.

7. **விவசாயம்** குறுகிய நேரத்தில், குறைந்த செலவில் விவசாயத்தைப் பெருக்கும், உணவுச் சத்துகளை அதிகரிக்கும் வகைகளைக் கூறுகிறது. கால்நடைகளைப் பராமரிக்கும் முறைகள் முதலியவற்றை நடை முறையில் அளிக்கிறது.

உரம்தான் பயிர்களின் வளர்ச்சிக்குக் காரணம் என்பதைச் சில கிராம விவசாயிகள் அறிந்துள்ளனர். ஆனால், எப்போது சத்துள்ள உரங்களைப் போட வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்திலன்றி நாம் நினைத்த நேரத்தில் போட்டால் செடிகள் வளர்ச்சியடையா, நற்பயன் விளைவியா. எனவே, விரிவியல் பணி புரிவோர் விவசாயிகளின் சிக்கல்களை

உணர்ந்து அவற்றைத் தீர்க்க உதவும் கல்வியை அவர்கள் கிராமத்திலேயே தரவேண்டும்.

சில விவசாயிகள் முதலில் தங்கள் விளைச்சலைப் பெருக்கும் வழிகளைக் கையாளுவதில் தீவிரமாக இருப்பர். பின்னர், படிப் படியாக அம் முயற்சியைக் கைவிடுவர்.

மக்கள் வாழ்க்கைக்கு உணவும், தண்ணீரும் மிக அவசியம். இவற்றைப் பெறுவதற்கு விவசாயிகள் பயிர்வகைகளைப் பயிரிட்டு, அவற்றிற்குக் கிணறு தோண்டித் தண்ணீர் இறைத்துப் பாய்ச்சிப் பேணுகின்றனர்.

8. குடும்ப நிர்வாகம் குடும்பங்கள் ஆரோக்கியத்துடன் வாழத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் சத்துள்ள உணவைப் பெறவும், சுகாதார நியதிகளை அனுசரிப்பதற்கும், தேவையான பொருளாதார முயற்சிகள் பற்றியும் குடும்ப நிர்வாகம் விளக்கு கிறது. அதாவது, மக்கள் தம் நேரத்தை நன்முறையில் செலவிடுவது எப்படி என்பதை அறிந்துகொள்ள வழி செய்கிறது. விவசாய உற்பத்திக்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் நேரம் வேண்டுமல்லவா? எவ்வாறு அந்த நேரத்தைப் பெறுவது? உயர்ந்த வாழ்க்கையை அறிவுறுத்தும்போது, உற்பத்தியையும் வருவாயையும் பெருக்கும் வழிகளை மட்டுமல்லாமல், விரயமற்ற முறைகளையும் எடுத்துக் காட்டித் தனிப்பட்டோர், குடும்பம், சமுதாயம், நாடு தழைக்க உதவுகிறது.

மனையியல் விரிவியலின் நோக்கமானது மக்கள் தனிப்பட்ட முறையில் கல்வி கற்பதுடன், குடும்பத்தையும் சமுதாயத்தையும் வளமாக்குவது எப்படி என்பதை அறிந்து புதிய முறைகளைக் கையாண்டு பலர் வாழ்க்கையில் முன்னேறலாம். ஆனால், சமூகப் பிரச்சினைகளையும், தங்கள் சொந்த முயற்சியினால் தீர்க்க முயற்சி செய்ய, அவர்களை ஊக்குவிக்க வேண்டும். விரிவுப் பணியா ளர்கள் மன்றங்களை நிறுவி மக்களின் சமூக, பொருளாதார வளர்ச் சியைக் கவனிக்கத் தூண்டுகின்றனர்.

சமூக முன்னேற்றம் பொது மக்கள் மற்றவர் கருத்துகளை ஏற்றுக்கொள்ளுவதற்கும், அரசின் கொள்கைகளைப் புரிந்துகொள் வதற்கும், தம் சமுதாயத்தின் அபிவிருத்திக்காக முயற்சிகளையும், தொண்டுகளையும் மேற்கொள்ளுவதற்கும், கல்விதந்து பயிற்றுவிப்ப தற்கும், சிறந்த கிராமவாசிகளாகப் பண்பட்ட வாழ்க்கையுடன் தலைமையைப் படிப்படியாக வளர்ப்பதற்கும், சட்ட மன்றத்திலும்: உள்ளூர் பணிகளின் சிறந்த துறையில் உழைப்பதற்கும் விரிவியல் உதவுகிறது.

மக்கள் ஒற்றுமையாகப் பணிபுரிந்து, தங்களது சிக்கல்களைத் தாமே ஆராய்ந்து தீர்த்து வைக்க இத் துறை உதவுகிறது. பொருளாதாரக் கழகங்களை ஏற்படுத்தி, சமூக, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, சமூகநலத் தொண்டு என்ன என்பதை மக்களுக்கு அறிவூட்டுகிறது. வாழ்க்கைத்தரம் முன்னேறுவதற்கு நடைமுறையில் பயிற்சி அளிக்கிறது. குடும்ப நிர்வாகத்தில் பெண்கள் திறமையுடன் குழந்தையைப் பாதுகாப்பதுபற்றி அறிந்துகொள்ள பயிற்சி தருகிறது. வீட்டில், வேளாண்மை, கால்நடைகள் வளர்த்தல்மூலம் வருவாயைப் பெருக்கவும், கால் நடைகளுக்குத் தீங்கு ஏற்படாவண்ணம் காத்துக்கொள்ளவும் பயிற்றுவிக்கிறது.

சிறு குழந்தைகளுக்கு அதிகமான பாதுகாப்பு வேண்டும். ஒரு குடும்பத்தில் நிரம்பக் குழந்தைகள் இருந்தால் எவ்வாறு அவர்கள் எல்லாருக்கும் வயிறு நிறைய உணவு கொடுக்க முடியும்? வயிறு நிரம்பாதபோது அவர்கள் மெலிந்து, இளைத்துப்போய் பெரியவர் களான பின்னும் பலவீனமாய்க் காணப்படுவர். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். எனவே, ஒரு நல்ல குடும்பத்தின் உதாரணத் தால், வாழ்க்கை முறையால் சமுதாயம் முன்னேறும். இக் கருத்தைச் சமுதாய நல வளர்ச்சித் திட்டம் வலியுறுத்துகிறது. ‘சிறுதுளி பெருவெள்ளம்’ என்பதுபோல் பண்பட்ட பல குடும்பங்கள் சேர்ந்து ஒருங்கிணைந்த ஓர் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குகின்றன.

9. **கூட்டுறவு** பொருள்களை விற்க கூட்டுறவு அங்காடிகளை ஏற்படுத்தித் தொடர்புகொள்ள விரிவுத்துறை உதவுகிறது. அப்போதுதான், பொருள்களின் விலையை அன்றன்று அறிந்து கொண்டு கட்டுப்படுத்த முடியும். கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனைமூலம் ஒற்றுமை ஒழுங்கு, கட்டுப்பாடு, கண்ணியம் ஆகிய பண்புகள் வளரமுடியும்.

10. **சமூக முன்னேற்றமும், வாழ்க்கையில் நிறைவும்** வீட்டு வசதியும், உணவு வசதியும் இருந்தாலும் பலருக்கு உள்ளத்தில் நிறைவு இல்லை. ஏனெனில், அவர்கள் மேலும் மேலும் பணம் சேர்க்கவே விரும்புகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் ஆன்மீக வாழ்வு கிடைக்கும்படி விரிவுத்துறை உதவுகிறது.

மக்கள் பொருள்களின் உபயோகத்தை அறியவும், சீர் தூக்கவும் விரிவியல் உதவுகிறது. உதாரணமாகக் குறிப்பிட்ட பொருள்களை வாங்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். அப் போது அப்பொருள்களை வாங்கி, பணத்தைத் திரட்டும் முயற்சியும்

தொடங்கும். பசுவை விற்கலாமா? நிலத்தை அடகு வைக்கலாமா? அல்லது விளைச்சலைப் பெருக்குவோமா என்றெல்லாம் சிந்திக்கத் தூண்டும். மக்கள் பிறந்ததிலிருந்து சாகும் வரை படித்துக் கொண்டும் பணத்தைத் தேடிக்கொண்டும் இருக்கின்றனர்.



மக்களின் இப்படிப்பட்ட ஆர்வங்கள் என்னென்ன? அவற்றை எந்தவகையில் நிறைவு செய்யலாம். விவசாயம்பற்றிய விஞ்ஞான அறிவை அவன் அறிந்திருக்கிறானா என்பதை விரிவியல் துறையிலுள்ளோர் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும்.

தொடர்பு (Communication)

செய்தித் தொடர்பானது ஆற்றின் மறுகரையில் வசிக்கும் ஒருவனுக்கு இக்கரையில் உள்ள மற்றொருவன் செய்தி கொண்டு செல்வதைப் போன்றது. அவன், ரேடியோ மூலமோ, செய்தித் தாள் மூலமோ தான் அறிந்த செய்தியை, ஆற்றின் மறுகரையில் வசிப்பவனுக்குக் கூற வேண்டும். அவன் எங்கிருந்து செய்தியைப் பெற்றானோ அதுதான் செய்திகளின் தோற்றுவாய் **ஆரம்ப இடம்**. அச் செய்தியை நண்பனுக்குச் சொல்ல நதியை எப்படியாவது கடக்க வேண்டும். கடக்கும் வழி **கணவாய்**. மக்களின் பிரச்சினை

களையும் அவற்றைத் தீர்க்கும் அறிவையும் இணைக்கும் பாலமே **கணுவாய்.** அதைப் படகின்மூலமாகவோ, பாலத்தின்மூல மாகவோ, ஆழமில்லாவிடில் நடந்தோ கடத்தல் வேண்டும். அவனது கருத்தை ஏற்றுக்கொள்ளும் நண்பன், மேற்பார்வை யாளர். எந்த முறையில் **மேற்பார்வையாளருக்குச்** செய்தி சொல்லப்படுகிறதோ அது கல்வி நடத்தும் முறை. செய்தியைக் கொண்டு செல்லும் மனிதனே **செய்தி பரப்பாளர்.**

விரிவியல் ஆசிரியர், விவசாயிக்கும் ஆராய்ச்சிக்கும் இடையே ஒரு பாலம் போன்று அமைந்துள்ளார். அவர் சிந்தித்துத் தீவிர மாகச் செயல்பட்டுப் பயன்காட்டினுல் மக்களின் மதிப்பைப் பெறுவார். மக்களின் உடனடித் தேவைகளை அறிந்து, அவற்றைச் சீர்தூக்கி முக்கியமானவற்றை உடனடியாக மக்களும் முக்கியத் தேவை என உணரச் செய்து, அதை நிறைவு செய்ய வழி வகுத்தலே அவர் பணியாகும். இந் நிலையில் அவர் மக்களிடையே நண்பனுய், ஆசானுய் இருந்து பிரச்சினைகளின் தன்மைகளை அவற்றைத் தீர்க்கும் முறைகளைப் பலன் தரும் வழிகளால் காட்ட வேண்டும்.

விரிவியல் பணியாளர், தனக்குத் தெரிந்த பேருண்மைகளை மக்களுக்குப் புரியும் வகையில் எடுத்துச் சொல்லி அவர்களை ஊக்கு விக்கவேண்டும். வானொலி, செய்தித்தாள், திரைப்படங்கள் போன்றவைகளே கல்வி முறைகள் ஆகும். ஆகவே, பயனுள்ள செய்திகள் சிறந்த முறையில் உரியவரை அடைய வேண்டுமாயின் செய்தி பரப்பாளர், மேற்பார்வையாளர், சிறந்த கல்விமுறைகள் ஒருமித்து இயங்க வேண்டும். செய்திகளைக் கீழ்க்கண்ட முறையில் அறிவிக்கலாம்.

குழுக்களுக்கு

பரிசோதனைகள், கூட்டங்கள் நடத்திக் காட்டுவது.

தனிப்பட்ட முறைகள்

மக்களைத் தனித்தனியாக நேரில் சென்று பார்ப்பது. தேவைகளைப் பூர்த்தி செய்வது. ஒரு சில மக்களை அணுகத் தனிப்பட்ட முறையே போதுமானது. ஆனுல், அதிக மக்களடங்கிய கூட்டத்திற்கு கூட்டுமுறையும் குழு முறையுமே பொருந்தும்.

புதுப்புது கருத்துகளை அனைவரும் உடனே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனுல் ஒரு சிலர் புதுக் கருத்துகளை ஆவலுடன் ஏற்றுக் கொள்வர். கிராமப்புறங்களில், சந்தேகமும், பொறுமை யின்மையும் உள்ள மக்களைக் காண்பது இயற்கை. ஆனுல்,

விரிவியல் துறையினர், அன்புடனும் மரியாதையுடனும் அணுகிப் புகழ்ந்து, அவர்களைக் கவர்ந்து தம் கருத்துகளை நயமான முறையில் கூறி ஏற்றுக்கொள்ளச் செய்தல் வேண்டும். புதிய கருத்துகளை ஆவலுடன் கேட்டு நடைமுறையில் பயன்படுத்தும் போது - நல்ல பயனைப் பெறும்போழ்து, அவர்களை ஊர்த்தலைவர்களும் மக்களும் மதிப்பார்கள், மற்றவர்களும் பின்பற்றுவார்கள்.

பெரும்பாலானவர்கள் புதிய கருத்துகளை மிகவும் மெதுவாகக் கடைப்பிடிப்பவர்கள். கருத்துகள் முழுவதையும் கடைப்பிடிக்கவும் மாட்டார்கள். சிலர் புதிய கருத்துகளை வெறுக்கவும் செய்வர். அவர்கள் ஊர்த்தலைவர்களின் கருத்துகளை ஏற்றுக்கொள்வார்களேயன்றி, விரிவியல் துறையினரின் கருத்தினையும், பரிசோதனையையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்நிலையில் ஊர்த்தலைவர்களின் (Influential leaders) உதவியைப் பெருமளவில் பெற்றுச் செயல்புரிய வேண்டும். மேலும், புதிய முறைகளை ஏற்றுக்கொண்டு பயன்பெற்ற மக்களைப் பாராட்டி, அவர்களை உதாரணமாகக் காட்டி, மற்றவர்களையும் புது முறைகளைப் பின்பற்றச் செய்தல் வெற்றிக்கு வழிவகுக்கும்.

3. மனையியல் விரிவுத் திட்டங்கள்
(COMMUNITY DEVELOPMENT AND HOME SCIENCE EXTENSION PROGRAMMES)

சமுதாய நல விரிவுத்திட்டம்

இந்தியாவில் 500 இலட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அவற்றில் 80 சதவீதம் மக்கள் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு வாழ்கின்றனர். 'கிராமங்களே இந்தியாவின் உயிர்நாடி' என்று அண்ணல் மகாத்மா காந்தியடிகள் கூறினார் கிராம மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாக வேளாண்மை சிறக்க வேண்டும். நமது நாட்டில் பண்ணையில் ஆண்களோடு சமமாகப் பெண்களும் வேலையில் பங்கு கொள்ளுகின்றனர். பால் பண்ணை, கோழிப்பண்ணை, பண்ணையம் ஆகியவற்றை நிர்வகிப்பது பெண்களது பணியில் பெரும் இடம் பெறுகின்றது. அவற்றைத் திறம்படச் செய்து நிறைவுபெற, அறிவியல் அடிப்படையில், மனையியற் கல்வி தேவைப்படுகிறது. நமது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் விவசாய உற்பத்தி பெருமளவுக்கு உயரவேண்டும் என்று திட்டக்குழு **(Planning Commission)** வகுத்துள்ளது.

தேசிய நல விரிவுத் திட்டம் என்பது, மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்ற உதவுவதற்காக அவர்களுக்கும் கொடுக்கப்படும் கல்வியாகும். அது வகுப்பறைக்குள், மாணவர்களை இருத்திக் கற்றுக் கொடுப்பது அன்று. அவர்களுடைய மனைகளையும் பண்ணைகளையும் வாழ்க்கை நிலைகளையும் கல்விக்களமாகக் கொண்டு முன்னேற்றங்களைச் செய்யக் கற்றுக் கொடுப்பதாகும். இம்முறையில், கல்வியானது, நூல்கள் மூலமாகவோ, சொற்பொழிவுகள் மூலமாகவோ ஊட்டப்படுவதில்லை. மக்களுடைய செயல்கள் மூலமே புகட்டப்படுகின்றது. அவர்களுடைய தேவைகளும்,

பிரச்சினைகளுமே, கல்விக்குரிய பாட திட்டங்கள் (Syllabus) ஆகின்றன.

இத்தகைய விரிவுத் திட்டங்களின் அடிப்படை நோக்கம் நாட்டின் முன்னேற்றமாகும். குடும்பங்கள் ஒன்றோடொன்று இசைந்து உறவுகொண்டு, வளர்ச்சியடைந்து, நிலம், நீர் போன்ற பொருட் செல்வங்களையும், மக்கள் என்ற மனிதச் செல்வங்களையும் சமுதாய முன்னேற்றத்திற்கெனப் பயன்படுத்துவதற்கு வேண்டிய அறிவையும் திறமையையும் பெறவேண்டும். ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களைச் சார்ந்த உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் (FAO of the U.N.) விவசாய நலன் விரிவுத் திட்டத்தைப் பின்வருமாறு விளக்கியுள்ளனர். 'தனியொருவரின் முயற்சியாலும், கூட்டுமுயற்சியாலும் பல வளங்களையும், பொருளாதார முன்னேற்றத்தையும் கொண்டுவருவதற்குக் கிராமமக்களுக்கு உதவும் கல்வித் திட்டம்'; இத்திட்டம், கிராம மக்களுக்குத் தங்கள் மனைகளிலும் பண்ணைகளிலும் எழும் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற பயிற்சியையும் உதவியையும் அளிக்கின்றது. விஞ்ஞான விவசாய முறைகள், வீரிய விதைகள், உரச் சத்துக்கள், இயற்கை உரச் சேர்க்கை, உணவு உற்பத்தி, விவசாயத்தில் விரயம் ஏற்படாமல், விவசாயப் பொருள்களை லாபமுற விற்பனை செய்தல் போன்ற பண்ணைச் செயல்கள் அனைத்திற்கும் இவ் விரிவுத் திட்டங்கள் பயன் தருகின்றன.

ஆண்டுதோறும் விவசாய விளைச்சலில் பத்து சதம் எலி, பூச்சிகள் ஆகியவற்றால் வீணாகின்றன. மேலும், 30-40 சதவீதம், உணவு தயாரிக்கும் முறை, பரிமாறுதல், பயன்படுத்தல் ஆகியவற்றில் தவறான முறைகளால் விரயமாகின்றன. ஈரம் கசியாத, எலி புக முடியாத நவீன சேமிப்பு வசதிகள் இல்லாமை, பெரும் குறையாக உள்ளது. ஆனால், உணவைச் சேமித்து வைக்க, பருவ காலத்து உணவுகளைப் பாதுகாக்க, எலிகளை எதிர்க்க, எளிய விஞ்ஞான முறைகளைக் கையாண்டால் உணவு வீணாகாது. நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஒழிய மனையியல் விரிவுத்திட்டம் பெரிதும் உதவுகிறது.

குடும்பத்திற்குத் தேவையான உணவுச் சத்துகள், உடைகள், வீடுகளின் அமைப்பு, உடல் நலம், குழந்தை வளர்ப்பு, சமூக வாழ்க்கை, இளைஞர்கள் முன்னேற்றம் போன்றவற்றிலும் இத் திட்டம் உதவிபுரிகின்றது. குடும்ப வாழ்க்கையை முன்னேற்றவும், அதற்காக ஆராய்ச்சிகள் நடத்தவும், ஆராய்ச்சி முடிவுகளைப் பயன் படுத்தவும், குழந்தைகளோடும் இளைஞர்களோடும் பழகிப் பணி

செய்து அவர்களின் தேவைகளை உணர்ந்து நிறைவேற்றவும், கிராம மக்களுடைய பண்பாட்டினை வளர்க்கவும், நாட்டுப்புற மக்கள் தலைமைப் பணி ஏற்கவும் இத்திட்டங்கள் உதவுகின்றன.

மனையியல் விரிவுத் திட்டமானது ஓர் இருவழிப்பாதையாகும். ஆராய்ச்சி நிலையங்களினின்று பெற்ற கல்வி கிராமத்திற்குப் பயன் படுவது ஒரு வழி. பிறிதொரு வழி, கிராம மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதுடன், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி முன்னேற்றுவதுடன், கிராமங்களின் தேவை களைக் கல்வி நிலையங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், அரசினர் அலுவ லகங்கள் இவற்றிற்குக் கொண்டுவந்து நிறைவேற்றவும் உதவி புரிவதாகும்.

'கிராமநலத்திட்டம்' அல்லது 'தேசிய வளர்ச்சி திட்டங் களில்' குடும்பத் தலைவர்களான வயது முதிர்ந்தோரே மாண வர்கள், அந்த மாணவர்களே ஆசிரியர்களாகவும் அமைவர். இவர்கள் தங்கள் அனுபவங்கள், கருத்துகள், கைத்திறன், அறிவுத் திறன் ஆகியவற்றைப் பகிர்ந்துகொண்டு முதியோர் கல்வியில் பங்கெடுத்துக்கொள்கின்றனர். அவர்களின் ஒத்துழைப் பால் கிராம வளர்ச்சித்திட்டம் வெற்றி பெறும்.

கிராம வளர்ச்சித் திட்டங்களின் சிறப்பான குறிக்கோள்

கிராம வளர்ச்சித் திட்டங்களின் சிறப்பான குறிக்கோள்கள் ஆவன :

விவசாயிகள் உணவு உற்பத்தியையும், வருவாயையும் பெருக்கித் தங்கள் பண்ணைகளைத் திறமையுடன் நடத்த அறிவும் துணையும் கொடுத்தல்.

அவர்கள் தங்கள் தேவைக்கேற்ற உணவை விளைவித்து வள மாக வாழ்வதற்கு ஊக்கமளித்தல்.

விவசாயக் குடும்பத்தினர், கிராம வாழ்க்கையின் வசதிகள், கடமைகள், உரிமைகள் ஆகியவற்றை நன்கு உணர்ந்து பயன் படுத்துமாறு செய்தல்.

தாம் வாழ்கின்ற உலகைப்பற்றி அறிந்துகொள்ளுமாறு செய்தல்.

கிராமத்தில் சமூக வாழ்க்கையையும், பண்பாடு நிறைந்த ஆன்மீக வாழ்க்கையையும் ஒன்றாக இணைத்துத் திளைக்க உதவுதல்.

தொழில், தலைமையேற்றல் போன்றவற்றால் கிராம மக்கள் தங்களுக்குள் அடங்கிக் கிடக்கும் திறமைகளை வெளிக்காட்டுமாறு செய்தல்.

எடுத்துக்காட்டாக, அவர்கள் புதிய முறையில் ஒரு பயிரை விளைவிக்கலாம். அல்லது பலவகை உணவுகளைக் கலந்து ஆடு மாடு களுக்கு உணவாக அளிக்கலாம். புது உடைகளைத் தைக்கலாம். கலப்பு உணவு தயாரிக்கலாம். கூட்டங்களில் பங்கெடுத்துப் பேச முன்வரலாம். மற்றையோரின் மனைகளையும் பண்ணைகளையும் பார்வையிட்டு, ஆராய்ந்து, அவற்றின்மூலம் தங்கள் வாழ்க்கையை நல்வழியில் மாற்றிக்கொள்ளலாம். கூட்டுறவுச் சந்தை போன்ற மற்றும் பலவித அமைப்புகளில் பங்கெடுத்துக்கொள்ளலாம்.

கிராம வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதாரமாக விளங்குவது விவசாய ஆராய்ச்சியும் விவசாயப் பயிற்சியுமேயாகும். வேளாண்மைப் பல்கலைக்கழகங்களிலும், கிராமியக் கல்லூரிகளிலும், சோதனைக் கூடங்களிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் கிடைத்துள்ள விவசாய ஆராய்ச்சி முடிவுகள், கிராம மக்களின் வாழ்க்கையை, மனையை, சமுதாயத்தைக், கிராம நிலையங்களை, சுருங்கக் கூறின், கிராம வாழ்க்கையையே முன்னேற்றுவதற்குப் பயன்படுவதற்கு விரிவுத் திட்டங்கள் வழி காட்டுகின்றன.

கிராம வளர்ச்சித் திட்டங்களில் மனையியல்

கிராம வளர்ச்சித் திட்டங்களின் முக்கியக் குறிக்கோள் 'கிராம முன்னேற்றம்'. இதன் அடிக்கோல்களாக இருப்பவை விவசாயிகளின் பண்ணைகளும், மனைகளும், அவற்றில் வாழும் மக்களுமே. கிராமங்களில் பண்ணை நிர்வாகத்திற்கும், குடும்ப நிர்வாகத்திற்குமிடையே பிரிக்கமுடியாத நெருங்கிய தொடர்பு உள்ளது. ஏனெனில், விவசாயத்தை நடத்தி வருவது குடும்பங்கள் தான். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் கிராமக் குடும்பங்களின் வாழ்க்கை முன்னேற்றமே இன்றியமையாதது. எனவே, கிராம நலத் திட்டங்களில் மனையியலுக்கு உள்ள இடம் மிகப் பெரிது.

உலகில் பல நாடுகளில் கிராமங்களே நாட்டின் பெரிய சொத்தாக இருந்துவருகின்றன. நகரத்தைக் காட்டிலும் கிராமங்களில் தான் மிகப் பெரும்பாலான மக்கள் வசிக்கின்றனர். ஆதலின், அநேக நாடுகள், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், அதனால் கிடைக்கும் உணவுச் சத்துகளைப் பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழவும், கிராம மக்களுக்கு அறிவூட்டுவதற்குத் தேசிய வளர்ச்சித்

திட்டங்களில் மனையியலுக்கு பெரிய பொறுப்பு அளித்திருக்கின்றன.

நமது நாட்டின் அடிப்படைத் தொழில் வேளாண்மை. ஐந்தாண்டுத் திட்டங்களில் வெற்றியும், நகரங்களின் வளர்ச்சியும், மக்களின் கல்வியும், வாழ்க்கைத்தரமும், ஆரோக்கியமும், நிலத்தினின்று விளையும் உற்பத்தியைப் பொறுத்தே அமைந்துள்ளன. உணவு உற்பத்தியோ, கிராம மக்களின் அறிவையும், திறமையையும், வாழ்க்கைத் தரத்தையும் சார்ந்துள்ளது. அவர்கள் தங்களிடமுள்ள நிலம், நீர், உலோகப் பொருள்கள், கால் நடைகள், சூரியவெப்பம், மனித ஆற்றல் போன்றவற்றை எவ்வாறு பயன்படுத்தி மிகுந்த நலம்பெறலாம் என்றுணர்ந்து வேலை செய்வார்களேயானால் உணவு உற்பத்தி தானாகவே உயரும். கடும் உழைப்பில் செலவாகும் நேரமும், சக்தியும், குறைந்த ஓய்வும், செல்வமும் கிட்டும். ஓய்வு நேரம், அவர்களது திறமையை அதிகப்படுத்தி உற்பத்தியை மேலும் பெருக்கும். வாழ்க்கைத் தரமும் உயரும். அப்போது சமுதாய, பொருளாதார அரசியல் பொறுப்புகளில் அவர்கள் முழுப் பங்கையும் ஏற்றுக்கொள்ள முடியும். இந்த முன்னேற்றங்களெல்லாம் மனையியலோடு நெருங்கிய தொடர்பு உள்ளவை. உணவு, சுகாதாரம், வீட்டமைப்பு, ஆரோக்கியம், வருவாய், நிர்வாகம், குழந்தைப் பராமரிப்பு ஆகிய யாவும் குடும்பத்தின் முக்கியத் தேவைகளாகும். இவற்றின் நிறைவை மனைவாழ்க்கை தருகிறது.

நாட்டில், பல்லாயிரக்கணக்கான மக்களிடம் காணப்படும் சத்துக்குறைவு, ஆரோக்கியக் குறைவு, வீட்டில் வசதியின்மை ஆகியவை அவர்களுடைய வளர்ச்சியைப் பாதித்து, நாட்டின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும் முட்டுக்கட்டைகளாக இருக்கின்றது. உலகத்தின் பல நாடுகளில் இருப்பது போன்றே, நம் நாட்டிலும் குடும்பத் தலைவியே விவசாயியாகவும் விளங்குகின்றாள். ஆடவரைப் போன்று, பெரும்பாலான விவசாயத் தொழில்களைச் செய்கின்றாள். பண்ணையில் ஆட்சி செலுத்துகின்றாள். தோட்ட வேலை, ஆடுமாடுகளை வளர்த்தல், கோழி வளர்த்தல் ஆகியவற்றை ஆடவரைக் காட்டிலும் பெண்களே அதிகமாகச் செய்கின்றனர். ஆதலால், கிராமங்களிலும், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்கள், சிறப்பாக மனையியல், கிராம மக்களின் பொருளாதாரத்தையும் பிரச்சினைகளையும் சார்ந்தே அமைய வேண்டும். எனவே மனையியலின் நோக்கம் பரந்தது. மனையைச் சிறப்புற நடத்த உதவுவதுடன், வாழ்வை வளமாக்கி, உற்பத்தியைப் பெருக்கி, மனைக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் உள்ள தொடர்புகளை ஆக்கமுறச் செய்கின்றது.

இந்தியாவில் தாய்மார்கள் பல நூற்றுண்டுகளாகப் பக்தியுடனும், கடமையுணர்ச்சியுடனும், உயரிய அறிவுடனும் மனையறம் நடத்தி வந்திருக்கிறுர்கள். தாய்க்குலத்தின் தன்னலமற்ற சேவையினுல்தான் இந்தியநாடு இன்றும் சிதருமல் இருக்கிறது. இன்றைய மனையியலில் விரிவுத் திட்டங்கள்மூலம், சமுதாயத்தில் பல விஞ்ஞான உண்மைகளையும், செயல்முறைக் கருவிகளையும் பயன் படுத்திக் குடும்ப நிர்வாகம் செய்து வருகிறுர்கள். குடும்பத்திலுள்ளோருக்கு, முக்கியமாக இந்நாட்டின் எதிர்கால மன்னர்களாகிய குழந்தைகளுக்கு, வேண்டிய வசதிகளை அளித்து, வலுவான இந்தியாவை உருவாக்குகிறுர்கள்.

எனவே, சமூக முன்னேற்றத்தில் பண்ணைக்கும் மனை வாழ்வுக்கும் சம்பந்தமுண்டு. இவ்விரண்டும் தனித்தனியே குடும்ப நலனுக்கு ஆதாரமாக அமைந்துள்ளன. கிராமங்களில், சமுதாய முன்னேற்றத்திற்காக ஏற்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் வெற்றிகாண வேண்டுமாயின், ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள கணவன், மனைவி, குழந்தைகள் ஆகிய அனைவருடைய சம்மதமும் ஒத்துழைப்பும் தேவை. கணவனும் மனைவியும் சேர்ந்து ஒத்துழைக்கும்போதுதான் அவர்கள் நலத்திற்கென்று தீட்டப் பெறும் திட்டங்கள் வெற்றிபெற முடியும்.

4. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நிருவாக அமைப்பு

(THE ADMINISTRATIVE SET UP OF COMMUNITY DEVELOPMENT)

இந்தியச் சமூக முன்னேற்றத் துறை, காந்தீயத் தத்துவத்தின் அடிப்படையில் சிறந்த இலட்சியங்கள் கொண்டதாக, சுதந்திர இந்தியாவை வளமானதாக்கும் சீரிய நோக்கத்துடன் 1952ஆம் ஆண்டு காந்தியடிகள் பிறந்த நாளாகிய அக்டோபர் 2ஆம் தேதி தொடங்கப்பட்டது. 'மக்களுடைய இயக்கம்' நாமும் வாழ்வோம், மற்றவர்களும் வாழட்டும் என்ற நீதி நிலவ, எல்லோரும் இன்புற அனைவருக்கும் வாய்ப்புகள் வளரத் தேவையான செயல் திட்டங்களை மேற்கொள்வதே, சமூக முன்னேற்றத்துறையின் நோக்கமாகும். சமூக முன்னேற்றப் பணிகளில் மக்கள் போதிய அளவில் பங்குகொள்ள ஊக்குவிப்பதற்காக, முதலில், அரசு, ஆரம்ப அமைப்புச் செயல்திட்டங்கள் ஆகியவற்றில் பொறுப் பேற்கிறது.

நிருவாகம் என்பது, மனித, பொருள் செல்வங்களைக் குறிப் பிட்ட குறிக்கோள்களை அடைய திட்டமிட்டுப் பயன்படுத்த உதவு வதாக வேண்டும். திட்டத்தில் மக்கள் பங்கு கொண்டு, ஈடுபட்டு, அதை இயங்க வைப்பதுதான் நிருவாகத்தின் முக்கியப் பொறுப் பாகும், கிராமத் தலைவர்களிடம் முன்னேற்றப் பணிகளில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் தோற்றுவித்து அவர்களையே பொறுப்புகளை மேற்கொள்ள வைப்பதுதான் சமூக முன்னேற் றத்தின் அடிப்படைக் குறிக்கோள், வெற்றிக்கும் நல்வழி. நாட்டில் இன்று சமுதாய வளர்ச்சித் திட்டம் தேசிய, மாநில, மாவட்ட, வட்டார, கிராம மட்டங்களில் செயல்படுகிறது.

இன்றைய விரிவுத்திட்ட அமைப்பு



தேசிய மட்டம் :

சமுதாய முன்னேற்றத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முழுப்பொறுப்பும், மத்திய அரசின் சமூக முன்னேற்ற அமைச்சகத்தினுடையது. இவ்வமைச்சகம் இன்று, 'உணவு, விவசாய, சமுதாய முன்னேற்ற, கூட்டுறவு, பஞ்சாயத்து அமைச்சகம்' என விளங்குகிறது. கிராம சமுதாயத்தின் முன்னேற்றமே நம் பாரத முன்னேற்றத்தின் அடிப்படை யென்பது அனைவரும் உணர்ந்ததே. விவசாயம் வளம் பெற, கூட்டுறவும், பஞ்சாயத்து ஆட்சி முறையும் அடிக்கற்களாக அமைகின்றன. இதனால்தான் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளும் ஒரே அமைச்சகத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. இந்த அமைப்பு, ஒழுங்குடன், திறம்படச் செயல்பட, சமுதாய வளர்ச்சித்துறை, விவசாயத்துறை, விரிவுத்திட்டம் இயக்கம் என்ற மூன்று பிரிவுகள் உணவு விவசாய அமைச்சகத்திலுள்ளன, சமுதாய வளர்ச்சித்துறை, சமூக முன்னேற்றத்திற்கான எல்லாத் திட்டங்களையும் வகுக்கிறது. விவசாயத் துறை உணவு உற்பத்தியைப் பெருக்குகிறது. விரிவுத் திட்ட இயக்கம், ஆராய்ச்சிகளின் முடிவுகளும், முன்னேற்றங்களும் மக்களிடம் போய்ச் சேர நெறியுடன் வழி வகுக்கின்றது.

மத்திய சமூக வளர்ச்சித் துறையானது மத்தியக் குழுவின் ஆலோசனைகளை மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து சமூக முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. சமூக வளர்ச்சி மத்தியக் குழுவில், பிரதம மந்திரியும், திட்டக் குழுவின் துணைத் தலைவரும், உறுப்பினர்களும், உணவு-விவசாய அமைச்சரும், சமூக முன்னேற்ற அமைச்சரும் உறுப்பினர்களாவார்கள். அனைத்திந்திய மட்டத்தில் தேசிய முன்னேற்றக் குழு சமூக வளர்ச்சித் திட்டத்திற்கும், ஐந்தாண்டு திட்டங்களுக்குமுள்ள தொடர்பை ஆராய்ந்து கொள்கைகளை வகுத்துக்கொடுக்கிறது. இக் குழுவில் பிரதம மந்திரியும், மாநில முதலமைச்சர்களும் உறுப்பினர்கள்.

மாநில மட்டம்

சமுதாய முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகளுக்கு பூரண சுதந்திரம் இருக்கின்றது. மாநிலங்களில் திட்டங்களைச் செயல்படுத்துவது முதலமைச்சரையும், மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர்களையும் கொண்ட மாநில முன்னேற்றக் குழுவின் பொறுப்பாகும். மாநில அரசில், சமுதாய முன்னேற்றத் திட்டப் பணிக்காகக் கிராம முன்னேற்றத் துறை, சமூக நலத்துறை என்ற இரு துறைகளும் செயல்பட்டு வருகின்றன.

மாநில முன்னேற்ற ஆணையாளர், அனைத்துத் துறைகளும் திட்டத்தின் குறிக்கோள்களை அடைவதில் ஒத்துழைக்கச் செய்கிறார். இவர் பிரிவுகளுக்குத் தேவையான அலுவலர்களை நியமிக்கிறார்.

மாவட்ட மட்டம் :

மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியாளர் திட்ட வேலைகளை அமுல் நடத்தப் பொறுப்பானவர். இவர் மாவட்ட முன்னேற்றக் குழுவிற்குத் தலைவராகப் பதவிவகிக்கின்றார். சமூக முன்னேற்றப் பணியில், திட்டமிடுதல், இணைப்பு வேலை ஆகியவற்றில் முழுப் பங்கு ஏற்கிறார். ஊராட்சி ஒன்றியங்களில் வேலைகளை மேற்பார்ப்பதும் இவர் பொறுப்பு. மாவட்ட முன்னேற்றக் குழுவில், மாவட்டத்திலுள்ள சட்டமன்ற, பாராளுமன்ற அங்கத்தினர்களும், தனித்துறைத் தலைவர்களும் அங்கத்தினர்களாக இருந்து, ஊராட்சி ஒன்றியங்களின் சமுதாய முன்னேற்றத் திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டத் திட்டங்களாக அமைக்கின்றனர்.

வட்டார (ஊராட்சி ஒன்றிய) மட்டம்

ஊராட்சி ஒன்றியக் குழுவில், அதன் தலைவரும் ஊராட்சிகளின் தலைவர்களும் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். இக் குழுவில் பாராளுமன்ற, சட்டமன்ற அங்கத்தினர்களுக்கும் பங்குண்டு. இவர்களனைவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலர் உடனின்று, ஒன்றியத்தின் சமுதாய முன்னேற்றப் பணிகளை நடத்துகின்றனர். ஊராட்சி ஒன்றிய அலுவலருக்குக் கீழ், பல திறப்பட்ட நுண்திறன் விரிவாக்க அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியத்தில், சமுதாய முன்னேற்றப் பணியில் பெரும் பங்குகொண்டு விளங்குபவர், முக்கிய சேவிகா என்னும் பெண் அதிகாரி ஆவார். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் அவ்விதமான ஒரு முக்கிய சேவிகை உண்டு. ஒரு வட்டாரத்தை ஒரு முக்கிய சேவிகா கவனிப்பது என்பது மிகவும் முடியாத காரியம். பத்து கிராமங்களுக்காகிலும் ஒரு முக்கிய சேவிகை இருக்கவேண்டும்.

முக்கிய சேவிகையின் பணி விரிவானது. தனக்குரிய தனிப் பட்ட ஆக்க வேலைகளுடன், கிராம நிலையில் பணிபுரியும் கிராம சேவிகாக்கள், பாலசேவிகாக்கள் ஆகியோரையும் மேற்பார்வை செய்து, வழி நடத்த வேண்டும். 'ஊட்ட உணவுத் திட்டம், போன்ற சிறப்புத் திட்டங்கள் நடைபெறும் ஒன்றியங்களில்

மட்டும் இரண்டு முக்கிய சேவிகாக்கள் பணிபுரிகின்றனர். இந்நிலைமையை மாற்றி, சமுதாய முன்னேற்றத்திட்டங்களின், அதுவும் பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் முன்னேற்றத்தின் அவசியங்களை உணர்ந்து, பயிற்சி பெற்ற தேவையான அளவு முக்கிய சேவிகாக்களை, ஊராட்சி ஒன்றிய நிலையில் சேர்க்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஊராட்சி மட்டம்

ஊராட்சி நிலையில், ஊராட்சித் தலைவரும், ஊராட்சிக்குழு அங்கத்தினர்களும், கிராம மக்களின் தேவைகளை உணர்ந்து திட்டங்கள் வகுக்கின்றனர். கிராமத்துப் பிரச்சனைகளை அறிய, தீர்வு காணக் கிராமிய மக்களே அங்கத்தினர்களாக நிற்கின்றனர். இரண்டு கிராம சேவிகாக்கள் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள முக்கிய சேவிகாவின் ஆலோசனையுடன் பணிபுரிகிறார்கள். கிராம சேவிகாக்கள் மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொண்டு, அவற்றை நீக்க உழைக்கின்றனர். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நியமிக்கப்பட்டிருக்கும் இரண்டு கிராம சேவிகாக்களால், அந்த முழுப் பகுதியிலும் திறம்படப் பணிபுரிய இயலுவதில்லை. அதோடு, மக்களின் பிரச்சனைகளை உணர்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ள அவகாசமும் கிட்டுவதில்லை. அவர்கள் பல்நோக்கு ஊழியர்களாகப் பணிபுரிவதால், அவர்களுடைய முக்கியத்துவம் பெரிதாக உள்ளது. இதையுணர்ந்து, சமுதாய முன்னேற்றப்பணி திறம்படச் செயல்பட, கிராம சேவிகாக்களின் எண்ணிக்கையை உயர்த்தி, வேலைப் பளுவைக் குறைத்து, சிறந்த பணிக்கு ஊக்குவிக்க வேண்டும்.

கிராம மட்டம்

கிராம நிலையில், சமுதாய முன்னேற்றம் என்பது, கிராம மக்கள் அத் திட்டங்களை எக் கண்ணோட்டத்துடன் நோக்குகிறார்கள் என்பதைக் கொண்டதாகும். பாலசேவிகாக்கள் மக்களின் கண்ணோட்டத்தை மாற்றி அமைத்து, முன்னேற்றப் பாதையில் செலுத்த வல்லவர்களாக உள்ளனர். அநேக கிராமங்களில் இவர்கள் பணி மேலோங்கி நிற்கின்றது. இஃது, எல்லாக் கிராமங்களிலும், சிறு சிறு கிராமங்களிலும் புகுந்து, கிராமங்கள் புத்தொளி பெறச் செய்யவேண்டும்.

சமுதாய முன்னேற்றத் திட்டமானது, முழு வெற்றிபெற வேண்டுமானால், மக்களின் ஒத்துழைப்புத் தேவை. அவர்களுடைய உள்ளுணர்வில், முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தத்துவம் இடம்பெறவேண்டும். கிராம மக்களின் ஒத்துழைப்பும், அரசாங்கத்தின் இணைப்பான செயல்களுமே முன்னேற்றத்திற்கு வழிகோலாகும்.

5. மனையியல்-விரிவுத்திட்ட ஊழியர்கள்

(HOME SCIENCE EXTENSION WORKERS)

கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக், குடும்பங்களில் ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் பெருக்கிக், கிராமங்களை முன்னேற்றுவதே நமது அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கியக் குறிக்கோளாகும். திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சமூக வளர்ச்சி நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், வெற்றிக்கு விவசாய முன்னேற்றம் மட்டுமே போதுமானதன்று. ஏனெனில், வாழ்க்கைத் தரத்தில் எந்த முன்னேற்றமும் மனையினின்றுதான் பிறக்கின்றது. ஆகவே மனைவாழ்க்கையிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். வாழ்க்கைத்தரம் உயராவிட்டால் குடும்பங்கள், சமுதாயங்கள் ஆகியவை பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஆதலின், தேசிய வளர்ச்சி விரிவுத் திட்டத்தில் மனையியலின் முக்கியத்துவத்தை அரசினர் உணர்ந்து, இந்தியா முழுவதிலும், மனையியல் திட்ட ஊழியர்களை, அதாவது 'கிராம சேவிகை'களை நியமித்தனர். ஒரு வட்டாரத்திற்கு இரண்டு கிராம சேவிகைகள் விகிதத்தில் அவர்களுக்குப் பயிற்சி தர 1954-ல் இருபத்தேழு (27) பயிற்சி நிலையங்கள் நாடெங்கும் நிறுவப்பட்டன. 1959ல் மேலும் 12 நிலையங்களும், 1960-ஆம்ஆண்டில் 10 நிலையங்களும் சேர்க்கப்பட்டன. இந்த நாற்பத்து ஒன்பது மனையியல் நிலையங்கள் ஒவ்வொன்றிலும், கிராமப் பகுதிகளின்று தேர்ந்தெடுக்கப்படும் 40 பெண்கள் ஓராண்டு காலம் கிராம சேவைப் பயிற்சி பெறுகின்றனர்.

மனையியல் என்பது மனைவாழ்க்கைக்குத் தேவையான கல்வி. கிராம நலத் திட்டங்களில் அளிக்கப்படும் மனையியற்பயிற்சியானது, வாழ்க்கையின் முக்கியப் பகுதிகளான உணவு, உடை, உறையுள், உடல் நலம், கல்வி, நேரத்தைச் செலவழிக்கும் முறை, வருவாய்,

குடும்ப வாழ்வு, குடும்பக் கட்டுப்பாடு, குடும்பத்தினரின் ஓய்வு, சமூக உறவு போன்றவற்றை அனுபவங்கள் வாயிலாகக்கொண்டது. இங்கு கல்வி கிராம வாழ்க்கைக்கும், சூழ்நிலைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்றபடி புகட்டப்படுகின்றது. பயிற்சி முடிந்த பின்னர் கிராம சேவிகை, கிராமங்களில் தங்கி அங்குள்ள குடும்பங்களுக்கு வழி காட்டியாகத் தலைமை தாங்கித் தொண்டாற்றுகிறாள். மக்கள் மகிழ்ச்சியும், ஆரோக்கியமும், வளமும் நிறைந்த வாழ்க்கை பெறுவதற்காக ஊக்கமளிக்கின்றாள். தங்கள் பிரச்சனைகளை உணர்ந்து தெரிந்துகொண்டு அவற்றைத் தாங்களே தீர்த்துக் கொள்ளத் துணைபுரிகிறாள். இங்ஙனம் பணி புரிவதன்மூலம் கிராம மக்களின் நம்பிக்கையைப் பெற்று, பல ஆக்க வேலைகளைத் தொடங்கி நடத்திக் கிராமத் தலைவர்கள் வெற்றிகாண உதவி செய்கிறாள்

கிராம சேவிகை பணிபாற்றும் முறை

கிராம சேவிகை, கிராம வளர்ச்சி அலுவலரின் கீழ் (**Block Development Officer**) வேலை பார்க்கும் வட்டார வளர்ச்சி ஊழியர்களின் குழுவில் (குடும்பத்தில்) ஒரு உறுப்பினர். அந்த வட்டாரத்திற்குரிய ''முக்கிய சேவிகை'' அவளுடைய வேலையை மேற்பார்வையிடுகிறாள். தற்சமயம் நூறு கிராமங்கள் கொண்ட ஒவ்வொரு சமூக வளர்ச்சி வட்டாரத்திலும் இரு கிராம சேவிகைகளும் ஒரு முக்கிய சேவிகையும் ஐந்து அல்லது ஆறு பால சேவிகைகளும் பணியாற்றுகின்றனர். ஒரு வட்டாரத் தில், ஏறக்குறைய, 66,000 முதல் 1,00,000 மக்கள் தொகை இருக் கின்றது. ஆகவே இவ்வளவு பரந்த வட்டாரத்தைச் சுற்றி இரண்டு கிராம சேவிகைகள் மட்டிலும் பணியாற்றி வருவதென்பது இயலாத செயலாகும். அவர்கள் தங்கள் இல்லத்திலிருந்தும் நடந்து செல்லும் தொலைவிலுள்ள ஐந்து முதல் பத்துக்கிராமங்கள் வரை உள்ள பகுதிகளில் மட்டுமே வேலைசெய்ய முடிகிறது.

ஒரு கிராமத்திலுள்ள பெண்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து அவர்களுடைய பொதுப் பிரச்சினைகள், குறைபாடுகள், முன்னேற் றத்திற்கு அடிப்படையான கருத்துகளைப் பேசிப் பரிமாறிக் கொள்வது ; ஒவ்வொரு வீடாகச் சென்று குடும்பத் தலைவிகளுடன் பேசித் தேவையான முயற்சிகளை அவர்களை மேற்கொள்ள வைத்து, அவர்களது வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்துதல் ; செய்து காட்டுதல்; செயல்மூலம் கற்பித்தல் மனைகளிலும் பண்ணை களிலும் உள்ள பிரச்சினைகளுக்குப் பரிகாரங்களை விளக்குதல் ; கிராம சமுதாயத்தில் தகுந்த தலைவர்களைக் கண்டுபிடித்து உருவாக் குதல் போன்றவை கிராம சேவிகைகளின் பணிகளில் சிலவாகும்.

இவற்றை அந்தந்த வட்டாரங்களிலுள்ள சூழ்நிலைகளுக்கும், பொருளாதாரங்களுக்கும், கல்விப் பண்பாட்டு நிலைமைகளுக்கும் ஏற்றவாறு திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர்.

கிராமப் பெண்களுக்கு உணவு தயாரிப்பதிலும், உடை தைப்பதிலும், மற்றெல்லா வீட்டு வேலைகளிலும் எளிய சிக்கன முறைகளையும் கிராம சேவிகைகள் கற்றுத் தருகின்றனர். இல்லங்களை வசதிகளும், சுத்தமும், வளர்ச்சியும், அழகும் நிறைந்தனவாக வைத்துக் கொள்ளவும் உதவுகின்றனர். விவசாயத்தில் ஈடுபட்டு, வீட்டு வேலை செய்ய நேரமில்லாத பெண்களுக்கு மனை முன்னேற்றத்தில் ஆர்வம் உண்டாக்கி, மனையியல் குடும்பத்திற்கு நேரம் கண்டுபிடிப்பதற்காக, விவசாய வேலைகளில் முன்னேற்ற வழிகள் கண்டுபிடித்து உதவுகின்றனர். கிராமக் குடும்பங்களின் தேவைகளையும், வாழ்க்கை நிலைகளையும் நன்குணர்ந்து, அவற்றிற்கேற்பத் தம் திட்டங்களை அமைக்கின்றனர். உடல் நலமும், மன வளர்ச்சியும் ஒருங்கே ஓங்கும்படி செய்தல், விருந்து, விழா, சம்பிரதாயம்போன்றவற்றில் வீண் செலவைத் தடுத்தல், பிள்ளைப்பேறு காலத்தில் உதவுதல் ஆகிய துறைகளில் கிராமங்களில் ஏராளமான உதவி எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ந்து வேலைசெய்வதன்மூலம், குழந்தைப் பராமரிப்பு, ஆரோக்கிய பழக்க வழக்கங்கள், சுகாதாரம், சேமிப்பு வசதிகள், உடைகளைத் தைத்தல், சமயலறை அமைப்பு ஆகியவற்றில் காட்டவேண்டிய சிரத்தையும் கவனிப்பும் குறைவதால் கிராம சேவிகைகள் கிராமப் பெண்களது ஆர்வத்தைத் தூண்டி மனைவாழ்க்கையில் ஈடுபாடுகொள்ளச் செய்கின்றனர். நமது கிராமப் பெண்டிர் அறிவும் துடிப்பும் நிறைந்தவர்கள், தம் உடனடித் தேவைகளைச் சமாளிக்க, உதவியும், அறிவும் கிடைக்கும் போது, அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளக் கிராமப் பெண்கள் எப்பொழுதும் ஆர்வமாக உள்ளனர் என்பது நன்கு புலனாகியிருக்கிறது. திறமைகளை ஆக்கவழியில் நெறிப்படுத்தலே கிராம சேவிகையின் தலையாய பணியாகும்.

கிராம சேவிகை, கிராம மக்களுடைய நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெறும் விதம்

கிராம சேவிகை, முதலில் மக்களுடைய இல்லங்களுக்குச் சென்று அவர்களுடன் தொடர்பு கொள்ளுகிறாள். கிராமத்தாரின் இல்லங்களிலேயே தனது நேரத்தில் பெரும்பகுதியைச் செலவிடுகிறாள். கிராமத்துப் பெண்களுக்குத் தேவையானவற்றையும், அவற்றை நிறைவுசெய்ய உள்ள திட்டங்களையும் எடுத்துரைக்கின்றாள். படிப்படியாகக் கிராமப் பெண்கள் அவளிடம் தங்கள் குழந்தைகளின் வளர்ச்சி, படிப்பு, உடை, பணம், குடும்பக்

கட்டுப்பாடு, நோயாளிகளின் பராமரிப்பு முதலியவற்றைப்பற்றிக் கலந்து உரையாடுகின்றனர் ; கிராம சேவிகை, மீண்டும், மீண்டும் அவர்களுடைய வீடுகளுக்குச் செல்லுகின்றாள். நட்பும் வளர்கிறது. அதன் விளைவாகப் பெண்கள், மகளிர் மன்றங்களில் சேருகின்றார்கள். அங்கு குறுகிய நேரத்தில் மிகச் சிறிய அளவில் சிக்கனமாகத் துணிகளைத் தைத்தல், உணவு தயாரித்தல் போன்ற பயனுள்ள செயல்களை, கிராம சேவிகை கூறும் முறைகளைக் கையாண்டு பார்த்து, அவற்றை நன்கு கற்று, தம் உற்றார் உறவினரிடம் அவற்றைப்பற்றிப் பேசுகின்றனர்.

இங்ஙனம் கிராம சேவிகைகளின் பணியின்மூலமாகக் கிராமங்களில் செய்யப்படும் வேலைகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

குடும்ப நிர்வாகம்

1. எளிய, செலவில்லாத முறைகளில் உணவுச்சேமிப்புக்கான வசதிகளை உண்டாக்கிக் கொள்ளுதல்.
2. வீணாகும், கழிவுப் பொருள்களிலிருந்து, வீட்டுக்குத் தேவையான தட்டுமுட்டுச் சாமான்களைச் செய்தல்.
3. பாய்கள் முடைதல், தைத்தல், ஊறுகாய் போடுதல், அச்சடித்தல் ஆகியவற்றைக் கற்றுப் பொருள் ஈட்டுதல்.
4. வீட்டிலுள்ள அறைகளை ஒழுங்காக வைத்தல்.
5. புகையில்லா அடுப்புகளை அமைத்துப் பயன்படுத்துதல்.
6. கழிவு நீருக்கும் சாளரங்கள் அமைத்தல். கழிவு நீரைப் பயன்படுத்தித் தோட்டம் அமைத்தல்.
7. கடைக்குப் போகும்போது திட்டமிடுதல், தேவையற்ற பொருள்களை வாங்காது, பணத்தை மிச்சப்படுத்துதல்.

குடும்பத்திற்கு உணவளித்தல்

1. கிடைக்கும் பலவகை உணவுப் பொருள்களில், குறைந்த விலையில் சத்து நிறைந்தவற்றைப் பொறுக்கியெடுத்தல்.
2. எளிய முறைகளில், சத்துகள் விரயமாகாதவண்ணம் உணவைத் தயாரித்தல்.
3. சாப்பிடும்போதும், உணவு வீணாவதைத் தடுத்தல்.

4. குடும்பத்திலுள்ள பல பருவத்தினர், சிறப்பாகக் குழந்தைகளுக்கும், இளம் பருவத்தினருக்கும் தேவையான சத்துகள் கிடைக்கும் வண்ணம் உணவைச் சமைத்தல்.
5. காய்கறித் தோட்டம் போட்டுப் பாதுகாப்பு உணவுகளை அதிகரித்தல்.
6. பருவகாலத்து உணவுப் பொருள்களைப் பக்குவமாகப் பாதுகாப்பு முறைகளால் சேமித்துவைத்தல்.

குடும்பத்திற்கான உடை

1. துணிகளைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து வாங்குதல்.
2. உடைகளைத் தைக்கக் கற்றுக் கொடுத்தல்.
3. பழைய துணிகளில் கிழிந்த பகுதிகளைத் தைத்தல்.
4. பழைய துணிகளில் புது ஆடைகள் தைத்தல்.
5. துணிகளைப் பாதுகாத்தல்.
6. துணிகளைச் சலவை செய்தல்.

ஆரோக்கியம்

1. சுத்தமான பழக்க வழக்கங்களைக் கையாளுதல்.
2. கிருமிகளை அழித்தல்.
3. உணவில் சுகாதார முறைகளைக் கையாளுதல்.
4. வீட்டு மருந்துப்பெட்டி தயாரித்து, பொருந்திய முறையில் பயன்படுத்துதல்.
5. மனையின் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்தல்.

குழந்தை பராமரிப்பு

1. பால் அருந்தும் பருவத்தில், குழந்தைகளின் உணவுத் தேவைகளைக் கவனித்துப் பிற சத்துள்ள உணவுகளையும் தருதல்.
2. குழந்தைகளின் வளர்ச்சிப் பருவங்களை அறிந்து, வளர்ச்சிக்கு உதவுதல்.
3. குழந்தைகளுக்குத் தேவையான சிறிய விளையாட்டுப் பொருள்களைச் செய்தல்.
4. குழந்தைகளின் கல்விக்காகத் திட்டமிடுதல்.

5. குழந்தைகளுக்கான மருத்துவ நிலையங்களுக்குச் சென்று பாதுகாப்பு தடுப்பு ஊசிகளை உரிய காலத்தில் போடுதல்.
6. குழந்தைகளைப் பாலர் பள்ளிக்கு அனுப்புதல்.

சமூக வாழ்க்கை

1. சமூக முன்னேற்றத்தில் ஆர்வத்தை குடும்பத்தினருக்கு வளர்த்தல்.
2. குடும்பங்கள் சமுதாய வாழ்வில் பங்குபெற உதவி செய்தல்.
3. தலைமை தாங்கும் திறமையை வளர்த்தல்.
4. கலை நிகழ்ச்சிகளை நடத்துதல்.
5. சமுதாய விழாக்களைக் கொண்டாடுதல்.
6. சமுதாயச் சுற்றுப் பிரயாணங்கள் நடத்துதல்.

கிராம சேவிகை, கிராமத்துப் பெண்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் பல முறைகளைக் கையாளுகிறாள். செய்முறைப் பயிற்சிகள், விவாதங்கள், சொற்பொழிவுகள், நாடகங்கள், பொம்மலாட்டம், நடனம், வில்லுப்பாட்டு, படச் சுவரொட்டிகள் (Flannel Graph), பட மின் அட்டைகள் (Flash Cards), பாடல்கள், திரைப்படங்கள் ஆகியவற்றின் மூலம் குடும்ப முன்னேற்றக் கருத்துகளைப் பரப்புகின்றாள். மனையியல் கல்லூரிகள், நிலையங்களுக்குச் சென்று தன் அறிவைப் பெருக்க, அவர்கள் உதவியை நாடிப் பெற்றுக் கொள்ளுகிறாள். அந்தந்த வட்டாரங்களில் பெண்கள் நடுவில் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி அளித்து அதன்மூலம் மனையியல் திட்டங்கள் வலிமை பெறும்படிச் செய்கின்றாள். இளைஞர்களுடன் சேர்ந்து செயலாற்றி அவர்கள் குடும்பத்தின் பயனுள்ள உறுப்பினர்களாக வாழுமாறு உதவுகின்றாள். நல்ல விதைகள், உரம் ஆகியவற்றைக் கொடுத்தல், வீட்டிலுள்ள கழிவுகள், மக்கிய இலைகளை உரக்குழியில் போடுமாறு செய்தல் (Compost), நல்ல கழிவு இடங்கள் அமைத்தல், கூட்டுறவுச் சாலைகள் நிறுவுதல், கல்விப் பயணங்கள் ஏற்பாடு செய்தல் போன்றவற்றிற்குக் கிராமக் குடும்பங்களில் ஆதரவைப் பெருக்கி, நிறைவு நலத்திட்டங்களை நிறைவேற்றுகிறாள்.

கிராம சேவிகைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள்

கிராமங்களிலுள்ள பல இன மக்களும் ஒன்றாகக் கூடி, சேர்ந்து வேலை செய்தல் என்பது புதியதொரு பழக்கமாகும். அவர்கள்

அதன் முக்கியத்துவத்தை உணரும் வரையில் கிராம சேவிகைகளுக்குப் பிரச்சினைகள் ஏற்படத்தான் செய்யும். கிராம வளர்ச்சி முன்னேற்றத் திட்டங்களால் கிராம சேவிகைகளுக்குக் கொடுக்கப்படும் பயிற்சியைப் பற்றியும், அவர்கள் செய்யக்கூடிய வேலைகளைப் பற்றியும் அறிந்திருக்கவேண்டும்.

கிராமங்களில் தனித்து வாழக் கிராம சேவிகைகளுக்குப் போதுமான பாதுகாப்பும் வசதிகளும் இல்லை என்பது ஒரு பெரிய பிரச்சினை. பலருக்குத் தங்க இடம் கண்டுபிடிப்பதே மிகவும் சிரமமான பிரச்சினையாகிவிட்டது. கிராமங்களில் ஏதோ ஓர் இடம் கிடைத்தாலும் கிராம சேவிகை தனது வீட்டில், தான் விரும்பும் மாற்றங்களைச் செய்து, அதனை ஒரு மாதிரிஇல்லமாகக் காட்ட முடிவதில்லை. உதாரணமாக, புகையில்லாத அடுப்போ, நல்ல கழிவிடமோ, வாடகைக்கிருக்கும் தன் வீட்டில் அவள் அமைக்க முடிவதில்லை. ஆதலால் தன் நோக்கங்களைத் தனது வாழ்க்கையிலேயே நிறைவேற்றிக் காட்ட இயலாது போகிறது.

கிராமத்தில் தனியாகத் தங்க வேண்டுவது மற்றொரு பிரச்சினையாகும். அதனால் காரணமில்லாத அவதூறுகளும், வம்புப் பேச்சுகளும், துன்புறுத்தும் வண்ணம் எழுகின்றன. கிராம மக்களின் அன்பும், ஆதரவும் கிராம சேவிகைக்குக் கிடைக்க வேண்டும். கிராம மக்களில் ஒருவராக அவள் கருதப்பட வேண்டுமே தவிர கிராமத்துக்கு வரும் பட்டணத்துப் பூச்சியாகக் கருதப்படக்கூடாது.

மணமாகாத பெண்கள் கிராம சேவிகைகளாகப் பணியாற்றத் தகுதியுடையவர்களல்ல என்ற கருத்து பொதுவாக நிலவிவருகிறது. இவ் வேலைக்கு மணமானவர்களையே தேர்ந்தெடுப்பது விரும்பப்படத்தக்கதே. ஆனால், நடைமுறையில் அவ்வாறு செய்ய முடியவதில்லை. ஏனெனில் மணமான பெண்கள் வீட்டையும் பார்த்துக்கொண்டு, முழு நேர வேலையும் செய்ய இயலாது. ஆதலால், கிராம சேவிகை மணமாகாதவள் என்பதைப் பொருட்படுத்தாது, அவள் கிராமத்துப் பிரச்சினைகளை நன்கு உணர்ந்து அவற்றைத் தீர்க்கத் தகுந்த வழிகளைக் காட்டி, மனைவாழ்வில் சிறப்பினை மதித்து, வெற்றிபெற வந்தவள் என உணர்ந்து மக்கள் அவளுக்கு உதவிபுரிய வேண்டும்.

கிராமத்துக் குடும்பங்களின் ஆர்வங்கள், குறிக்கோள்கள், தேவைகள் பற்றிய அறிவும், ஆராய்ச்சியும் போதுமான அளவுக்கு இல்லாதது மற்றொரு பிரச்சினையாகும். ஆகவே, ஒவ்வொரு

வட்டாரத்திலும், மனையியல் திட்டங்கள் வெற்றி பெற, சமூகத் தொண்டு செய்வோர் பின்வருமாறு உதவித் துணைபுரியவேண்டும்.

1. மனை முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுமாறு மக்களைத் தூண்டுதல்.
2. கிராம நலப் பணிக்காகத் தகுந்த பெண்களைத் தேர்ந்தெடுத்தல்.
3. மனையியல் நிலையங்களில் நடைபெறும் பயிற்சிகளை ஆராய்ந்து அவற்றில் முன்னேற்றம் காண வழிவகைகளைக் கூறுதல்.
4. கிராம சேவிகைகளின் திட்டங்களைப் பழித்துக் கூறாது, ஆக்கம் தரும் அறிவுரைகளைக் கூறுதல்.
5. கிராமங்களில் கிராம சேவிகைகள் ஈடுபடக்கூடிய செயல்கள், தங்குவதற்கு இடங்கள் கண்டுபிடிக்கவும் உதவுதல்.
6. கிராம சேவிகைகளின் கவனத்திற்குக் கிராமத்தில் ஏற்கெனவே உலவிவரும் பயனுள்ள சிறந்த பழக்க வழக்கங்களையும் கிராமத்து மனைகளின் உண்மைத் தேவைகளையும் கொண்டு வருதல்.
7. கிராம மனைகளுக்கான இலக்கியங்களை இயற்றுதல்.
8. மகளிர் மன்றங்களை அமைத்தல்.
9. பெண்கள் பொதுநலத் துறையில் முன் வந்து உழைக்க ஊக்கமளித்தல்.
10. கிராமக் குடும்பங்களில் தலைமையுணர்வை ஏற்படுத்தி வளர்த்தல்.
11. கஸ்தூரிபா நினைவு நிதி, சமூக நலக்குழு (Central Social Welfare Board) அனைத்திந்திய பெண்கள் மகாநாடு (All India Women's Conference) அனைத்திந்திய கிராம மகளிர் சங்கம் (Bharatya Grameen Mahila Sangh) ஆகியவை ஒற்றுமையுடன் உழைக்க உதவுதல்.

6. மனையியல் விரிவுத்திட்டக் கல்வி முறைகள்

(HOME SCIENCE EXTENSION METHODS)

கல்வியின் குறிக்கோள் (கற்பித்தலின்), கற்பவர்களின் வாழ்க்கையிலும் மனநிலைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துவது ஆகும். வாழ்க்கை முறைகளிலும், பழக்கங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்துவது எளிதல்ல. மக்கள் உள்ளங்களைப் படிப்படியாகக் கல்விக்கருத்துகள், செய்முறைகள், முதலியன மூலமாகச் செம்மைப்படுத்தி, அவர்களே, தாங்கள் கற்ற கருத்துகளை மனமுவந்து ஏற்றுச் செயல்பட முன்வரச்செய்வதுதான் நிரந்தரக் கல்வியாகும்.

முதலில், புதிய கருத்துகளை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை (interest & desire) மக்களுக்கு ஊட்ட வேண்டும்; அடுத்து அந்த ஆர்வத்தை வளர்த்துத் தூண்டி, நடைமுறையில் ஆய்ந்து, செயல்படுத்திப்பார்த்து (trial) அதன் விளைவைப்(efficacy) பற்றி நிச்சயமும், நிறைவும் (satisfaction) கிடைக்கச் செய்ய வேண்டும். நல்லதென்று நிரூபிக்கப்பட்ட உண்மை அல்லது பழக்கத்தை வாழ்க்கையில் பயன்படுத்த ஏற்றுக் கொள்ளச் செய்தலே (adoption) சாலச் சிறந்தது. இதனை ஒரு நாளிலோ, சில நாட்களிலோ சாதித்துவிட இயலாது. குழந்தைப் பருவத்திலேயே, நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவதற்கு நாட்கள் பல ஆகும். வயதுவந்தவர்களுக்குக் கற்பிக்கும்போது, அவர்களிடமிருந்து மாறுதல்களை விரைவில் எதிர்பார்த்தல் ஏமாற்றத்தைத்தான் அளிக்கும். ஆதலால் பொறுமையுடன் திட்டமிட்டு, நம்பிக்கையுடன் நேரம் கொடுத்துக் கல்வி முறைகளைத் திறம்படக் கையாண்டு, பயனுள்ளவற்றைக் கற்பிக்கும்போது, வெற்றி கிட்டுவது உறுதி.

கல்வி முறைகள் என்பவை, ஆசிரியர் தம் கல்விப் பணியைச் செய்யப் பயன்படுத்தும் கருவிகளாகும். எப்படி ஒரு தொழிலாளி, தன் பணியில் பல கருவிகளைப் (tools) பயன்படுத்துகிறுரோ, அவ்வண்ணமே பள்ளியிலும், சமுதாய வளர்ச்சித் துறையிலும் கற்பிப்பவர்கள் பல கல்வி முறைகளைக் கையாண்டு கல்வியைப் புகட்ட வேண்டும். ஒருவருக்குப் பரந்த கல்வியறிவு இருந்தால் மட்டும் சிறந்த ஆசிரியராகிவிட முடியாது. அவர் தான் கற்றவற்றைத் திறம்படச் சொல்லிக்கொடுக்கும் வழி முறைகளையும் (techniques) திறமையையும் (abilities and competences) பெற்றிருக்கவேண்டும். ஆகவே ஆசிரியரும், கிராம ஊழியரும், பல்வேறு கற்பிக்கும் முறைகளில் பயிற்சி பெற்றிருத்தல் மிக மிக அவசியமாகிறது.



கல்வி முறைகள்

கல்வி முறைகளின் வகைகளுக்கு எல்லைக்கோடு வகுப்பது எளிதானதன்று. எனினும், வசதிக்காகக் கல்வி கற்பிக்கும் முறைகளைப் பின்வருமாறு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தனி நபருக்குச் சொல்லித் தரும் முறைகள் (**individual contacts**).
2. சிறு குழுக்களுக்குச் சொல்லித்தரும் முறைகள் (**Group contacts**).

3. பெரிய கூட்டங்களுக்கு ஏற்ற அல்லது பொதுவான கல்வி முறைகள் (Mass contacts).

செயல் முறை விளக்கங்கள் (demonstrations) போன்ற முறைகள் தனிப்பட்டோருக்கும், அதே சமயம் குழுக்களுக்கும் பொருந்தும்.

நமது நாட்டின் கிராமியச் சூழ்நிலைக்கேற்ற கல்வி முறைகள் சிலவற்றை ஆராய்வோம். அவை பின்வருமாறு :-

1. இல்லத்தில் பேட்டி காணுதல் (Home visits and interviews).
2. செயல்முறை விளக்கங்கள் தருதல் (Demonstrations).
3. கலந்துரையாடல் (Discussions).
4. கிராமத்தில் முகாம்கள் நடத்துதல் (Camps).
5. தீவிரத் திட்டங்கள் (Intensive campaigns).
6. தலைவர்களை உருவாக்குதல் (Developing leaders),
7. பொருட்காட்சிகள் அமைத்தல் (Organising exhibits).
8. கல்விப் பயணங்கள் மேற்கொள்ளுதல் (Study tours).
9. கலை நிகழ்ச்சிகள் (Dramatization and folk methods).
10. பொதுக் கூட்டங்கள் (Mass meetings).
11. எழுத்துகள் மூலம் கற்பித்தல் (Distribution of literature).
12. புலன்களை உபயோகிக்கும் சாதனங்களைப் பயன்படுத்திக் கற்பித்தல் (Use of Audio-Visual Aids).

ஒவ்வொரு முறையைப் பற்றிய முழு விவரங்களையும், அவற்றிலுள்ள நன்மைகள், குறைபாடுகளையும், அவற்றைப் பயன் படுத்தும்போது கவனிக்கவேண்டிய குறிப்புகளையும் ஆராய்ந்து பார்ப்போம். எந்த முறையைக் கையாளும்போதும், மூன்று நிலைகளில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

(அ) திட்டமிடுதல்

(ஆ) செயல்படுதல்

(இ) மதிப்பிடுதல்

1. இல்லத்தில் பேட்டி காணுதல் (Home Visits and Interviews)

கற்பிப்பவரே, கற்போரை அவர்களது இல்லங்களிலோ. அலுவல்

செய்யுமிடங் களிலோ சென்று, சந்தித்து, பல கருத்து களைப் பற்றி அளவளாவி வருவது, பேட்டிகாணும் முறையெனப் படும். இம் முறையில், ஒருவர் தமது பிரச்சனைகளைப்பற்றி மனம் விட்டுப் பேசி, யோசனைகளைக் கேட்டு நன்கு விவாதித்து அறிந்து செயல்பட முடிகிறது. உதாரணமாக, ஒரு கிராம சேவிகை



விரிவுப்பணியாளர் மக்கள் தொடர்புக்குத் தகுந்த முறைகளைத் தேர்ந்தெடுத்துக் கையாளவேண்டும்.

புதியதோர் குழந்தை உணவை அறிமுகப்படுத்த முயற்சி செய்யும் போது, சிலரே அதை முதலில் பரிசோதிக்க முன்வருவர். அவர்கள் தங்கள் வீடுகளில் வந்து, கற்றுக்கொடுக்கும்படி கிராம சேவிகை களிடம் கேட்கலாம். அல்லது அவர்கள் கேட்காமலேயே கிராம சேவிகை அவர்களை நாடிப் போகலாம். சுகாதார வசதிகள், தோட்டம் போடுதல், தானியங்களைச் சேமித்து வைப்பதுபோன்ற

பல பழக்கங்களை தனிப்பட்டோருக்கு, அழுத்தமாகப் புகட்ட இம் முறை உதவுகிறது. மேலும், இம் முறையைப் பயன்படுத்தும் போது, பல புள்ளி விவரங்களைச் சேகரிக்க முடியும். ஒரு புதிய கருத்தைக் குடும்பத்தார்க்கு அறிமுகப் படுத்துவதற்கு இது உகந்த முறை. கற்பிப்போருக்குக்கும், கற்போருக்கும் இடையே இம்முறை ஒரு அன்புப் பிணைப்பை ஏற்படுத்துகிறது. அவர்களுக்குரிய பண்புகள் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதற்கும் இம் முறை உதவுகிறது. மற்ற முறைகளைப் பயன்படுத்தும்போது வாய்திறவாதிருப்பவர்கள் கூட இம்முறையில் நன்றாகக் கலந்து கொள்ளுவார்கள்.

பேட்டி காணும்போது கவனிக்க வேண்டியவை

1. நட்புச் சூழ்நிலையை அமைக்க வேண்டும். தொடர்ந்து அவர்களுக்கு உதவி செய்யும் எண்ணத்தை வெளியிட வேண்டும்.
2. காண்பவர்களுக்குத் தேவையான, விருப்பம் உள்ள விவரங்களைப் பற்றியே பேச வேண்டும். உதாரணமாகத் தாய்மார்களுக்குத் தங்கள் குழந்தைகளின் நோயைப் போக்குவதைப் பற்றி, தாம் நலம் பெறுவதற்குரிய வழிகளைப் பற்றி, அதிகப் பணம் சம்பாதிக்கும் முறைகளைப் பற்றி பேச்சு அமைந்தால், கேட்பதற்கு விரும்புவார்கள்.
3. காண்பவர் பயன்படுத்தும் மொழியிலேயே பேட்டி அமைய வேண்டும்.
4. தவறான விவரங்களை ஒருபோதும் அளிக்கலாகாது.
5. பயன்அற்ற விவாதங்களையும், பேச்சுகளையும் தவிர்க்க வேண்டும்.
6. வாக்குறுதிகளை அளித்தால், அவற்றை நிறைவேற்றியே தீர வேண்டும்.
7. விடைபெறும்போது குடும்பத்தார்க்கு ஏதேனும் கைப் பிரதியை (literature) வழங்கிச் செல்வது நலம். உதாரணமாக மாநில அரசின்விளம்பர வெளியீடுகளையோ விவசாய, சமூக, நல, கல்வித்துறையினரின் இலவச வெளியீடுகளோ, விரைப் பொட்டலங்களையோ, புதுவகைத் தானியங்களையோ, வழங்குவது, மக்களின் உற்சாகத்தை அதிகப் படுத்தும்.

இம்முறையைக் கையாளும் போது நிறைய நேரம் தேவைப்படுவது ஒரு பிரச்சனை. பேட்டியளிப்பவர்க்கும், பேட்டி காண

பவருக்கும் பழக்கம் ஏற்பட நிறைய நேரம் தர வேண்டும். அது கிடைப்பது மிக அரிது. இம் முறையில் ஒரு சிலருடைய இல்லங்களுக்குப் பல முறை செல்லவேண்டியிருப்பதால் மற்றவர்களது மனவருத்தம் அல்லது பொறுமைக்கு ஆளாக வேண்டி வரலாம். எனினும் இம்முறை ஒரு சிறந்த கல்வி முறையாகும்.

வீடுகளுக்குச் சென்று பேசுதல் மூலம் விரிவுப்பணி செய்தல்

2. செயல் முறை விளக்கங்கள் (demonstrations) கல்வி முறைகளில், செயல் முறை விளக்கத்திற்குத் தலையாய இடம் உள்ளது. உணவுப் பொருள்களைப் பாதுகாப்பது, வெவ்வேறு எரிபொருள்களைப் பயன்படுத்துவது, உணவுச்சத்து கெடாத சமையல், மனை அலங்காரம், வீட்டில் தோட்டம் போடுதல், கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு, பொழுது போக்குத் தொழில்கள்மூலம் வருவாயைப் பெருக்குவது, குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்கள் செய்வது, பூச்சிகளை ஒழிப்பது, தையல், எம்பிராய்டரி, துணிகளில் படும் கறைகளை நீக்குவது, விபத்தில் முதலுதவிபோன்ற பல முறைகளைச் செயல்முறைகள்மூலம் விளக்கம் தரும்போதுதான் கற்போர் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது.

செயல்முறைக் கல்வியில் இரண்டு முறைகள் உள்ளன.

1. செயல்முறையைக் காட்டுதல் (method demonstration).
2. செயல்முறையுடன், பயனையும் நிரூபித்தல் (result demonstration).

செயல்முறை, விளக்கக் கல்வியினால் உண்டாகும் பயன்கள் பல; புதிய செயல் முறைகளைக் கற்பிக்கவும், நேரில் காண்பதால் கற்போருக்கும் உறுதி உண்டாகித் தாமும் அம் முறையைக் கடைப் பிடிக்குமாறு தூண்டவும் பயன்படுகிறது. மக்களை அணுகிக் கல்வி புகட்ட உதவுகிறது. கற்பிக்கும்போது நேரம் அதிகமாயினும் கற்பது விரைவாகிறபடியால், காலம் மிச்சப்படுகிறது. நேரடி யாகக் கற்போரது யோசனைகளைக் கேட்டு அவ்வப்போது முறைகளை மாற்றிக்கொள்ளவும் இம் முறை பயன்படுகிறது.

செயல்முறை விளக்க முறையைப் பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை

1. கிராம ஊழியர் தாம் கற்பிக்கப் போகும் நபர் அல்லது குழுவின் தேவைகளை முன் கூட்டியே தெரிந்துகொண்டு, அவர்களுக்குப் பயன்தரக்கூடிய செயல் முறை விளக்கங் களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சிசெய்து பார்த்துக்கொள்ள வேண்டும்.

2. செயல்முறை விளக்கம் நடத்தப்போகும் இடம் சரியாக அமைய வேண்டும். அதாவது, அனைவரும் எளிதில் வந்து சேரக்கூடியதாக ஊரின் மத்தியில், நல்ல காற்றோட்டமும், வெளிச்சமும் வசதிகளும் உள்ள இடமாகத் தேர்ந் தெடுத்தல் மிக அவசியம்.

3. அவரவர் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து ஆசிரியர் செய்து காட்டும் முறைகளை நன்கு காணக்கூடியதாக அவர்கள் இருக்கை, வட்டமாக (circular seating) அமைதல் அவசியம்.

4. செயல்முறை விளக்கத்திற்குத் தேவையான பொருள்கள், சாதனங்கள், படங்களை முன்கூட்டியே திட்டமிட்டுச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். உதாரணமாகப் புதிய சமையல் முறைகளைக் கற்பிப்பதென்றால், ஸ்டவ், தீப்பெட்டி, பாத்திரங்கள், மளிகைச் சாமான்கள், முதலியவற்றிற்குப் பட்டியல் தயார் செய்து, அவற்றைச் சேகரித்துக் கையெட்டும் தொலைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

5. செயல்முறை விளக்கத்திற்கு எடுத்துக்கொண்ட பொருள், அதற்குத் தேவையானவற்றைப் பற்றி அதில் கலந்து கொள்ளுவோருக்கு முன்கூட்டியே அறிவிப்புத் தர வேண்டும்.

6. செயல்முறை விளக்கம் தருவோர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே, அந்த இடத்திற்குச் சென்று, எல்லாம் சரியாக அமைந்துள்ளனவா என்று நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

7. செயல்முறை விளக்கம் செய்வோர் வந்திருப்போர் அனைவரையும் முகமலர்ச்சியுடன் வரவேற்று வசதியாக

மகளிர் மன்றத்தில் செய்முறைப் பயிற்சி செய்தல்

அமர அழைக்க வேண்டும். அவர் சற்று உயரமான இடத்தில் இருந்து எல்லோரும் பார்க்கக்கூடிய வகையில் தனது விளக்கத்தை ஆரம்பிக்க வேண்டும்.

8. செயல் முறை விளக்கத்தின், ஒவ்வொரு கட்டத்தையும் நன்கு விளக்கி அனைவரும் புரிந்துகொள்ளுகிறார்களா என்று பார்க்க வேண்டும்.

9. பார்ப்போர் கலந்து சொள்ளவும், வினாக்களை எழுப்பவும், ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளவும் தூண்டி விடவேண்டும்.

10. அவர்களைப் பல கட்டங்களில் பங்கு கொள்ள அழைக்க வேண்டும். விருப்பமுள்ளவர்களை அழைத்தல், கலக்குதல், காய்கறிகள் நறுக்குதல், துணியை வெட்டுதல், படங்களை ஒட்டுதல் போன்ற பல பணிகளில் கலந்து கொள்ள அழைக்கலாம்.

11. செயல்முறை விளக்கத்தில் ஏதாவது ஒரு கட்டம் அதிக நேரம் எடுக்குமானால் அதற்காகக் காத்திருக்கும் நேரத்தில் பயனுடைய வேறொரு செயல் அல்லது கைத்தொழிலில் ஈடுபடலாம். அல்லது படக்காட்சி, கலந்துரையாடல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யலாம்.

12. செயல்முறை விளக்கம் முடியுந்தறுவாயில் அது சம்பந்த மான வெளியீடுகள் ஏதேனும் இருந்தால் அளிக்கலாம்.

13. தலைமை தாங்கும் தகுதியுள்ளோரையும், நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முன்வருவோரையும் தனியே கவனித்து, ஆவன செய்ய வேண்டும்.

14. செயல்முறை விளக்கத்தின் பயனைப் பின்கண்ட நிகழ்ச் சிகள் மூலம் மதிப்பிடலாம் செயல்முறை விளக்கத்தில் கற்பித்த வற்றை நடைமுறையில் ஏற்றுக்கொண்டிருத்தல். தம் கருத்துகளை அவ்வப்போது தெரிவித்தல்.

தாம் கற்றுக்கொண்ட செயல்முறை விளக்கம்பற்றி மற்றவர்களுக்குச் சொல்லுவது.

மேலும் புதியன கற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்தல்.

மீண்டும் கிராம சேவிகையைச் சந்தித்துத் தொடர்ந்து கற்றுத்தர வற்புறுத்தல்.

பிரச்சனைகள்

செயல்முறை விளக்கங்கள் நடத்துவதில் சில பிரச்சனை களும் உள்ளன. முதலாவதாக அதற்கு ஆகும் செலவு அதிகம்; முன்கூட்டித் தயார் செய்வதும் கடினம். செயல்முறை விளக்கம், நன்கு நடத்தப்படாவிட்டால், மக்களின் வெறுப்பிற்கு ஆளாகநேரிடும். அதனால் புதியன கற்கவேண்டிய ஆவலும் மறைந்து விடும். ஆனால் நல்ல முறையில் நடத்தப்பட்டால், செயல்முறை விளக்கம் மிகச் சிறந்த நேரிடைக் கல்வி முறையாகும்.

3. **கலந்துரையாடல் (Discussion)** பங்குபெறுவோர் அனைவரின் நோக்கங்களையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தக் கலந்துரையாடல் நல்ல வாய்ப்பளிக்கும் முறையாகும். உரையாடல் முறையில் ஒவ்வொருவருக்கும் தனிப்பங்கு உண்டு; அச்சமும், வெட்கமும், தயக்கமும் உள்ளவர்கள் கூட, உற்சாகமூட்டப்பட்டுத் தத்தம் எண்ணங்களையும் யோசனைகளையும் வெளியிடக் கலந்துரையாடல் வழிசெய்கிறது. தனிப்படையாகத் தீர்வு காணமுடியாத பிரச்சனைகளை, நட்புறவுள்ள மற்றவர்கள் முன்னிலையில் சொல்லிக் கருத்துகளைப் பரிமாறிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண முடிகிறது. தலைவர்களையும், சமூகத்தின் முன்னோடிகளையும் கண்டுபிடித்துத் தேர்ந்தெடுப்பதற்கும், ஒரு கருத்தை ஒரே வேளையில், ஒரே மாதிரி பலருக்கு எடுத்துரைக்கவும், இம்முறை பயன்படுகிறது.

குடும்ப வளர்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தும் வழிகள், குழந்தைகளின் ஆரோக்கியத்தை உச்ச நிலையில் வைக்கும் திட்டங்கள், சமையலறையில் வசதிகளைப் பெருக்குவது, சிறு சேமிப்பின் அவசியம், துணிகளைத் தேர்ந்தெடுக்கும்போது கவனிக்க வேண்டியவை, பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தில் பெற்றோருடைய பங்கு போன்ற தலைப்புகளைக் கிராமங்களில், மகளிர் மன்றக் கூட்டங்களில் விவாதிக்கலாம். அப்படி விவாதிக்கும்போது பலருடைய கருத்துகளை அறிந்துகொண்டு செயல்பட முடிகிறது.

கலந்துரையாடல் முறையைப் பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை

1. எல்லோரும் விரும்பக்கூடிய, எல்லோருக்கும் பயன்தரக் கூடிய பொருள்களை விவாதத்திற்குத் தேர்ந்தெடுத்தல் அவசியம். அந்தத் தலைப்புகளை முன் கூட்டியே விவாதத்தில் பங்குகொள்ள வருகிறவர்களுக்கு அறிவித்து விட்டால், அவர்கள் அதனைப் பற்றி நன்கு சிந்தித்து, பங்கு எடுக்கத் தயாராய் வரமுடியும்.
2. தலைவர்கள் சிறந்த முறையில் கலந்துரையாடல் முறையைக் கையாளக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.
3. எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துப் பேசமுடியுமாறு இடமும், அமருவதற்கு இருக்கையும் அமைய வேண்டும்.

4. வீண் விவாதங்களில் சிதறாமல், எடுத்த பொருள் பற்றியே விவாதம் இருக்க வேண்டும்.

5. கலந்துரையாடலின்போது அனைவரையும் பங்கு பெறச் செய்து அவர்கள் மதித்துக் குறிப்பெடுத்துக்கொள்ளும் படி தலைவர் ஏற்பாடு செய்ய வேண்டும். இறுதியில்

கலந்துரையாடல்

எல்லாக் கருத்துகளையும் தொகுத்துக் கூட்டத்தில் படித்து, அவர்கள் ஒப்புதலைப் பெற வேண்டும்.

6. ஏற்றுக்கொண்ட கருத்துகளைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

7. பங்கு கொள்வோர் எண்ணிக்கை இருபதுக்கு மேற்படா திருத்தல் நலம்.

சில வேளைகளில் கலந்துரையாடலின் நோக்கங்கள், எதிர் பாராத இடையூறுகளினால் நிறைவேறாமல் போகலாம்; வீண் சர்ச்சைகளுக்கு இடமளிக்கலாம்; பயனற்ற பேச்சுக்களிலேயே

நேரம் கழிந்து விடலாம். ஒரு சிலரே திருப்பித் திருப்பிப் பேசி நேரத்தை வீணாக்கக்கூடும். கூடியவரையில் இக் குறைகளுக்கு இடம்கொடாமல், பங்குகொள்ளும் மக்களுக்கு அறிவூட்டும் படியும், நிறைவு கிடைத்து ஜனநாயக அமைப்புக்கு உருக் கொடுக்கும்வண்ணம், இம் முறையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. **கிராமிய முகாம் (Rural Camps) அல்லது பாடிகள்** பாடி (முகாம்) திட்டமிட்டுச் செயல் ஆற்ற உதவும் கல்வி முறைகளில் ஒன்று. முகாமில் அங்கத்தினர் அனைவரும் ஒரே இடத்தில் தங்கிக் குறிப்பிட்ட நாள் வரைக்கும் எடுத்த செயலைத் திட்டமிட்டபடி நடத்தி மதிப்பிடுவது சிறப்பு அம்சமாகும். ஒன்றாக வாழும்போது, தமது நீண்ட காலப் பிரச்சினைகளில் சிலவற்றைத் தீர்க்கவும் முடிகிறது. சத்துணவுத் திட்டம், கோழிகளின் நோய்களைப் போக்குதல், வீட்டுத்தோட்டம், முதியோர் கல்வி, குடும்ப அளவைக் கட்டுப்படுத்தத் தேவையான புள்ளி விவரங்களைச் சேகரித்தல், குடும்ப நலக்கல்வி போன்ற பணிகளை நிறைவேற்றிக் கொள்ள முகாம்கள் பெரும் உதவிபுரிகின்றன.

முகாம் நடத்தும்போது கவனிக்க வேண்டியவை

1. முகாமின் தலைவர், முகாமிடுவதற்குப் போதிய தங்குமிடம், வசதிகள், வேலை செய்ய வாய்ப்புகள் நிறைந்த இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

2. கிராமத் தலைவர்களையும், அதிகாரிகளையும் முன்கூட்டியே சந்தித்து அவர்களுடைய ஒப்புதல்கள், யோசனைகளைப் பெற்று அவர்களால் முகாமுக்கு எந்த அளவுக்கு உதவி செய்ய முடியும் என்பதையும் மதிப்பிட வேண்டும்.

3. முகாமை நன்கு நடத்த முகாமில் பங்கு பெறும் உறுப்பினர் எந்தெந்தப் பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்று குறித்து (Responsibility) அவர்களை அத்தனை குழுக்களாகப் (Committees) பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குறிப்பிட்ட ஒரு பொறுப்பை ஒப்புவிக்க வேண்டும். அவர்களுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் அளிக்கவேண்டும்.

4. முகாமில் வெற்றிகரமாக நடக்கும் பணிகளைப்பற்றி வானொலி, செய்தித்தாள் முதலியவற்றின் மூலம் வெளியிடவேண்டும்.

5. முகாமைப் பற்றி மதிப்பீடு (Evaluation) செய்து அந்த அறிவை, எதிர்கால முகாம்களுக்கும் பயன்படுத்த வேண்டும்.

முகாம் நடத்துவது எளிதன்று. அது நேரத்தையும், முயற்சிகளையும் பணத்தையும். செலவு செய்யும் கல்வி முறை. எல்லா ஏற்பாடுகளையும் முன்கூட்டியே ஒழுங்குசெய்வது இன்றியமையாதது. முகாம் நன்கு நடத்தப்படாவிடினும், கிராமத்தாரின் ஒத்துழைப்புக் குறைந்தாலும் தோல்விதான் ஏற்படும்.

5. **தீவிரத் திட்டங்கள்** (Intensive campaigns) குறிப்பிட்ட ஒரு முயற்சியை ஒரு குறுகிய குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஓர் இடத்தில் தீவிரமாகச் செயல்பட்டு முடிப்பதற்குத் ''தீவிரத் திட்டம்'' என்று பெயர். உதாரணமாக, அதிக விளைச்சல் தீவிரத் திட்டம், மலேரியா அல்லது அம்மை ஒழிப்புத் தீவிர திட்டம். பூச்சி ஒழிப்புத் திட்டம், கிராம சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் ஆகியவை. தீவிரத் திட்டங்களின் முக்கிய நோக்கம், சமுதாயத்தில் ஓர் குறிப்பிட்ட முயற்சி அல்லது கொள்கையைப் பற்றி வேகமாகத் தீவிரமான உணர்வை ஆழமாக ஏற்படுத்துவதாகும். ஆகவே, தீவிரத் திட்டத்தில். முயற்சி, பொருள், பணம் இதர பிற மூலதனங்களைக் குறிப்பிட்ட வேலைக்கே பயன்படுத்த வேண்டும்.

தீவிரத் திட்ட முறையில் பல நபர்களை ஒரே சமயத்தில் விரைவாக அணுக முடிகிறது. இதனால் ஆரம்பத்தில் கெடுபிடியாக இருந்தாலும் கடைசியில் நேரமும், செலவும் மிச்சமாகின்றன. மக்கள், தம் தேவைகளை உணர்ந்து தீவிரத் திட்ட அமைப்பாளர்களுடன் ஒத்துழைப்பதற்கு ஏதுவாகின்றது. அவர்களுக்கு தம் தேவைகளைத் தாமே நிறைவு செய்ய முடியும் என்ற நம்பிக்கையையும் வளர்க்கின்றது. அனைத்திற்கும் மேலாக, மக்களை ஒன்றுபட்டுச் செயல்பட வைக்கிறது.

தீவிரத் திட்டத்தில் கவனிக்க வேண்டியவை

1. மக்களது அவசர, உடனடியான தேவைகள் யாவை என்று ஆழ்ந்து அறியவேண்டும்.
2. ஊர்த் தலைவர்கள், பெரியவர்கள், தகுதி படைத்தவர்கள் ஆகியோரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.
3. தீவிரத் திட்டம் நடத்துவதற்குரிய நேரம், இடம் முதலியவற்றைக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. மேற்கொள்ளப்போகும் தீவிரத் திட்டங்களைப்பற்றி முன் கூட்டியே அறிவிப்புகள் விடுத்து, மக்களைத் தயார் செய்தல் வேண்டும்.

5, தலைவர்களுக்குத் திட்டங்களை நடத்தும் பொறுப்புகளை அளித்தல் வேண்டும்.

6. திட்டமிட்டபடி எல்லாம் நடைபெறுகின்றனவா என்று அவ்வப்போது கவனித்து ஆவன செய்யவேண்டும்.

7. தவறுகள் ஏதேனும் நடந்தால், உடனே அவற்றைத் திருத்திவிட வேண்டும்.

8. தீவிரத் திட்டம் முடிந்தவுடன் அதனால் பயனடைந் தோரைப் பற்றிய விவரங்களையும், காரணங்களையும் கண்டறிதல் மிக முக்கியம்.

9. நாளிதழ்கள். வானொலி இவை மூலம் தீவிரத்திட்டம் நடத்தப்பட்டதைப் பற்றி விளம்பரம் செய்தால் பின் வரும் திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு கிடைக்கும்.

மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் தீவிரத் திட்டமுறை வெற்றியடைய முடியும். நிபுணர்கள் ஒத்துழைப்பும், அரசின் ஆதரவும் கூடத் தேவை. தீவிரத் திட்டத்தைக் கல்வி முறையாகப் பயன்படுத்தும்போது குறிப்பிட்ட ஒரு சில பாடங்களை மட்டுமே நடத்த இயலும்.

6. **தலைவர்களைப் பயிற்றுவித்தல் (Developing leaders)** எந்த ஒரு சமுதாயத்திலும். சிலர் மக்களின் தலைவர்களாகவும், பலர் பின் பற்றுபவர்களாகவும் இருப்பார்கள், தலைவர்களின் உதவியை நல்ல முறையில் பயன்படுத்தினால், கற்பிக்கும் பணி எளிதாகிறது. மேலும். ஒரு மூன்றுவது, வேற்று மனிதரின் யோசனைப்படி நடப் பதைவிடத் தங்கள் தலைவர் சொற்படி நடப்பதையே பொதுவாக எல்லோரும் விரும்புவர். ஆகவே, மனையியல் வளர்ச்சி விஸ்தரிப்புத் திட்டத்தில் பரப்பும்படி நினைக்கும் கருத்துகளைக் கிராமத் தலைவர்கள்மூலம் வெளியிடுவது பொருத்தமாகவும், எளிதாகவும் இருக்கும். மேலும், பல தலைவர்களை உருவாக்கிச் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அவர்களைப் பயன்படுத்துவதன் மூலம், சக்தி நிறைந்த மக்கள் ஆட்சிக்கு அடித்தளமிட முடியும். உதாரணமாகக் கிராமங்களில் மகளிர் மன்றங்களை அமைப்பதன் மூலமாகச், சிறந்த தலைவிகளை உருவாக்கி, அவர்களை கிராம முன்னேற்றத்திற்கும், நாட்டு முன்னேற்றத்திற்கும் கருவிகளாகப் பயன்படுத்தலாம்.

அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கும் பல பணிகளில் அவர்களைப் பங்கு பெறத் தூண்டவும் செய்யலாம். இங்ஙனம், தலைவர்கள் மூலம் மக்களை அணுகும்போது காலம், பணம் ஆகியவை அரசுக்கு மிச்சப்படுகின்றன. இங்ஙனம் விரிவுப் பணிக்கு உதவும் தலைவர்கள் விரிவுப் பணியாளர்களுக்கும் (Extension Workers) மக்களுக்கும் இடையில் ஓர் பாலம்போல் விளங்குகின்றனர்.

தலைவர்களைப் பயன்படுத்தும் கல்வி முறையைக் கையாளும்போது கவனிக்க வேண்டியவை

1. தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது மிகுந்த எச்சரிக்கையுடன், முன்யோசனையுடன் தேர்ந்தெடுக்க வேண்டும். தலைமை வகிப்பதற்குரிய பண்புகள் அவர்களிடம் முழுமையாக இருக்கின்றனவா என்று ஆராய்ந்து செயல்பட வேண்டும். அவர் ஓர் குறிப்பிட்ட குழுவின் தலைவராக மட்டும் இல்லாமல், எல்லோராலும் ஏற்றுக்கொண்டு மதிக்கக்கூடியவராய் இருத்தல் அவசியம்.

2. தலைவருக்கு என்னென்ன பொறுப்புகளைக் கொடுக்கலாம், அவரிடமிருந்து என்னென்ன எதிர்பார்க்கலாம் என்பதைத் தெளிவாக நன்கு திட்டமிடவேண்டும்.

3. பயிற்சிப் பாடிகளில் (முகாம்கள்) தலைவர்களுக்குப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

4. தலைவர்களுக்குப் பொறுப்புகளை அளிப்பதுடன் அவர்கள் அவற்றைச் சரிவர நிறைவேற்ற, அவ்வப்போது ஆலோசனைகளையும் அளித்து வரவேண்டும்; அவர்களது ஆலோசனைகளைக் கூடியமட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5. தலைவர்களது பணிகளைப் பாராட்டி அவர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும். கிராமப் பொதுவிழாக்கள், கூட்டங்கள் முதலியன நடைபெறும்போது தலைவர்களைத் தகுந்தபடி கௌரவிக்க வேண்டும். வரவேற்பளித்தல், நன்றி நவிலல், தலைமை தாங்குதல் போன்ற பணிகளை அவர்களுக்கு அளிக்கலாம்.

எல்லாவிதக் குணநலன்களையும் ஒருங்கே பெற்ற தலைவர்களைக் காண்பது அரிது. சிலரைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கும் போது பலரது பொறாமைக்கும், அதிருப்திக்கும் ஆளாகவும் நேரிடலாம். சில தலைவர்கள், தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைத் தவறான வழிகளில் ஈடுபடுத்தலாம். தலைவர்களைத்

தேர்ந்தெடுக்கும்போது, அவற்றை மனத்திற் கொண்டு, குறைகளைத் தடுக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

7. **பொருட்காட்சி (Exhibition)** பொருட்கள் பலவற்றை அனைவரும் கண்டு களித்துப் பயன்பெற ஓரிடத்தில் சேகரித்து நெறிப்படுத்தி வைக்கும் அமைப்பு பொருட்காட்சி ஆகும். இம்முறை, கல்வித்துறையில் மிக்க பயன் தருகிறது. விஞ்ஞானம், வேளாண்மை போன்ற துறைகளில் வளர்ச்சி, அவற்றின் வெவ்வேறு பகுதிகளின் வெற்றிகள், திட்டங்கள் ஆகியவை ஒருங்கே காட்டப் பொருட்காட்சி உதவுகிறது. பொருட்காட்சியின் சிறப்பு என்னவென்றால் இதனைப் பலர் ஒரே சமயத்தில், அவரவர் விருப்பம் வேகத்திற்கேற்ப கண்டு பயன்பெற இயலுவதே. பொருட்காட்சி, அனைவரும் காணக்கூடிய பொதுஇடங்களில் அமைக்கப்பட்டு இருக்கும்போது, மக்கள் தமக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் சென்று காணவும் வழிசெய்கிறது.

பொருட்காட்சிகள் அமைக்கும்போது பல கல்வி முறைகளைப் பயன்படுத்தவேண்டும், உண்மைப் பொருள்கள், மாதிரிப் படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள், புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இதில் இடம்பெறுகின்றன. ஒரு கல்விநிலையத்தில் அமைக்கப்படும் பொருட்காட்சி, அண்மையிலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களும் காணவும் வசதி அளிக்கிறது.

பொருட்காட்சி அமைக்கும்போது கவனிக்க வேண்டியவை

1. பொருட்காட்சியின் பொருள் மக்களுக்கு உபயோகப் படுமாறு கிராமச்சூழ்நிலைக் கேற்றவாறு அமைத்திடல் வேண்டும். சத்துணவைத் தயாரிக்கும் முறைகள், சமையலறையை ஒழுங்காக அமைக்கும் வழிகள், நோய்த் தடுப்பு வழிகள், உணவைப் பாதுகாக்கும் முறைகள் போன்ற தலைப்புகள் மக்களுக்குப் பிடித்தமானவையாக இருக்கும். எனவே, பொருட்காட்சியின் தலைப்பைக் கவனமாகத் தேர்ந்தெடுத்தல் இன்றியமையாதது.
2. பொதுவான இடத்தில் ஏற்பாடு செய்யவேண்டும்.
3. காட்சிக்குரிய பொருள்கள் (Exhibits) பலவகைப் பட்டிருத்தல் நலம். எழுத்துகள் குறைவாகவும், பொருள்கள், படங்கள் அதிகமாகவும் இருத்தல்வேண்டும். அவற்றை பொருளுக்கேற்றபடி அழகுற வரிசைப்படுத்தி வைத்தல் அவசியம்.

4. பொருட்காட்சியைப் பற்றி மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கவேண்டும்.

5. பொருட்காட்சி முடிந்ததும், அதனை மதிப்பீடு செய்தல் அவசியம்.

பொருட்காட்சிவைத்துக் கல்வி அளித்தல்

6. கல்விப் பயணம் சுற்றுலா (Study tour and Field trips)

கல்விப் பயணம் அல்லது சுற்றுலா ஒரு நல்ல பயிற்சி முறை. இம் முறையில் பயணத்தை, மாணவர்களின் அறிவு, அனுபவ வளர்ச்சிக்காக, ஆசிரியர்கள் ஒரு கல்வி அனுபவமாகச் செயல்படுத்துகின்றனர். ஒரு மலரின் நிறம், மணம், மென்மை போன்ற குணங்களைப்பற்றிச் சொல்வதைவிட, அம் மலரினை நேரிலே காட்டித் தொட்டு விளக்குவதுதான் தேர்ந்த கல்வியாகும். ஆனால் நேரில் காட்டி விளக்கும் அனுபவம் மாத்திரம் முற்றுப்பெற்றதாகாது. பல நிறப்பூக்களைக் காணும் சிறுமியர் அந்தப் பூ ஏன் சிறியதாக இருக்கிறது? இது ஏன் பெரியதாக இருக்கிறது? இதன் நிறம் இவ்வளவு சிவப்பாக இருப்பதற்குக் காரணம் என்ன என்று பல வினாக்களை எழுப்பி விடை காண்பர். பயண அனுபவத்துடன் தகுந்த துணைவிளக்கமும், விரிவுரையும் இருந்தால்தான், அம்முறை பயன்தரும்; கல்வி முழுமைபெறும்.

சுற்றுப்பயணம் மேற்கொள்வதில் அரிய பெரிய நன்மைகளும் அனுபவங்களும் பல உள்ளன. மனையியல் ஆராய்ச்சி நிலையங்கள், நூற்பு ஆலைகள், மாதிரி வீடுகள், மகப்பேறு மருத்துவ நிலையங்கள், குழந்தைப் பள்ளிகள், உணவு ஆராய்ச்சி நிலையங்கள் போன்ற இடங்களுக்குச் சென்று, பல செயல்களைக் காண்பதால் மாணவர் அடையும் நன்மைகள் எண்ணிலடங்கா. கிராமங்களுக்குச் சென்று பார்வையிடுவதன்மூலம் நமது வாழ்க்கையை எளிதாக்கச் சமுதாயத்தில் பணிபுரியும் குயவர், நெசவாளர், தச்சர், வியாபாரிகள் ஆகியோரைப்பற்றி நேரில் அறிவதற்கும் கல்விப் பயணங்கள் உதவுகின்றன. மேலும் அங்கு தற்போது நிலவும் பிரச்னைகளான அசுத்தம், சுகாதாரமின்மை போன்றவற்றை நீக்குவதற்கும், முதியோர் கல்வி முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் வழி பிறக்கும்.

அனைத்துப் பாடத்திட்டங்களிலும், கல்விப்பயணம் ஒரு இன்றியமையாத அனுபவம் ஆக அமையவேண்டும். புகழ்பெற்ற கல்வி-முறை நிபுணர் (அமெரிக்க) டாக்டர் எட்கர் டேல் என்பவர், மேலை நாடுகளில் பள்ளிப்பாடத்திட்டத்தில் ஆசிரியர்கள் எவ்வாறு திட்டமிட்ட பயண அனுபவங்களை மாணவர்கட்கு நேரிடைக்கல்வி அளிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றனர் என்பதைத் தன் புத்தகங்களுள் ஒன்றில் விவரித்திருக்கிறார். பொருளாதார நிலையினாலும், வசதிக்குறைவுகளாலும் சுற்றுப்பயணங்களை ஏற்பாடு செய்வதில் சிரமங்கள் இருக்கின்றன. எனினும், இந்தப் பிரச்னைகளைத்தாண்டி, கல்விப்பயண அனுபவங்களை நம் இளஞ்செல்வங்களுக்கும் முதியோருக்கும் தரவேண்டும். சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் கிராம மக்களைப் பல இடங்களுக்கு அழைத்துச்செல்ல கணிசமான தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெற்றிகரமாகச் சுற்றுப்பயணம் அமைப்பதற்கான விதிமுறைகள்

1. சுற்றுப்பயணம், பாடத்திட்டத்தின் இன்றியமையாத பகுதியாய் அமையாதிருப்பின், வெறும் உல்லாசப்பயணமாகவோ, சுற்றுலாவாகவோ, மாறிவிடும். எனவே, பாடத்தோடு இணைந்த சுற்றுப்பயணங்களை ஏற்பாடு செய்யவேண்டும்.

2. ஆசிரியர்கள், முன்கூட்டியே செல்லவேண்டிய இடங்களைப் பற்றிய குறிப்புகளை நேரில் சென்றோ, அல்லது வேறொருவரை அனுப்பியோ சேகரித்துக் கொள்ளவேண்டும். உணவு, இடம், வைத்தியம், போக்குவரத்து வாகனம், பார்க்கும் இடங்களைப்பற்றிய விரிவுரைகள் போன்ற

வசதிகள் அனைத்திலும் ஏற்ற முன்னேற்பாடுகளைச்செய்ய வேண்டும்.

3. கல்விப்பயணத்தில் கலந்துகொள்பவர்களை முன்கூட்டியே தயார் செய்தல் இன்றியமையாதது. பயணத்தின் நோக்கம், செல்லும் இடம், அதன் வரலாற்று, கலைச் சிறப்பு ஆகிய விவரங்களை எழுத்துமூலமாக அளிப்பதோடு அவற்றை விளக்கும் புத்தகங்கள் இருந்தால், அவற்றையும் வாங்கித்தரவேண்டும். செல்லுமிடத்தில் வரைதல், படம்பிடித்தல், விரிவுப்பொருள் எழுதுதல் ஆகிய ஆக்க முயற்சிகளுக்குக் குறிப்புகளும் தந்து, கலந்து கொள்வோரின் கேள்வித்திறனையும், ஆய்வுச் சிந்தனைத்

பாட்டு, கலைநிகழ்ச்சிகள் மூலம் விரிவுப்பணி செய்தல்

திறனையும் வளர்ப்பதற்கான வாய்ப்புகளை உண்டாக்க வேண்டும். அப்போது நேரம் மீதமாவதோடு, பயணத் திற்கு அழைத்துச் செல்லப்படுவோரின் அறிவும், ஆவலும், அறிவின் ஆழமும் தெளிவும் அதிகரித்து, அவர்கள் உற்சாகமாகப் பங்கெடுப்பார்கள்.

4. பயணத்திலிருந்து திரும்பிய பின், பயணத்தின்போது கற்ற கல்வியின் ஆழத்தையும் அனுபவத்தையும் அறிய, மதிப்பிடுதல் வேண்டும். அதற்காக விவாதம், கருத்துப்

பரிமாற்றம் ஆகியவற்றைத் திட்டமிட்டுக் கையாள வேண்டும்.

9. கலை நிகழ்ச்சிகள் மூலம் கற்பித்தல் (Dramatisation and Folk methods) கலைநிகழ்ச்சிகள் அனைவரும் விரும்பும் ஓர் சிறந்த கல்வி முறையும், பொழுதுபோக்குமாகும். இவை கண், செவி, மெய் போன்ற புலன்களையும் உணர்ச்சிகளையும் தூண்டி அவை ஒன்று பட்டுச் செயல்படச் செய்கின்றன. கலை நிகழ்ச்சிகளைக் காணும் போது, மக்கள் உற்சாகமடைவதோடு. கருத்துகளையும் எளிதில் புரிந்துகொள்கின்றனர். பொழுதுபோக்கு வசதிகள் குறைந்த கிராமங்களில் மக்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் நல்ல பொழுது போக்காகவும் அமைகின்றன.

கலைநிகழ்ச்சிகள் பலவகைப்படும். தெருக்கூத்து, நாடகம், பொம்மலாட்டம், கதைப்பாட்டுகள், காலட்சேபம், வில்லுப்

பொம்மலாட்டம் மூலம் செய்தியை விளக்குதல்

பாட்டு போன்றவை பண்டைக்காலந்தொட்டு இருந்துவரும் கலை நிகழ்ச்சிகளாகும். காலப்போக்கில் இவை மறைந்துகொண்டே வந்தாலும், கிராமியச் சூழ்நிலைக்கு இவை என்றும் உகந்தவை.

கலைநிகழ்ச்சிகள், அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக் கொண்டதாக இருந்தால். இவை மக்கள் மனத்தில்

நன்கு பதிந்துவிடும். அவை நமது பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகவும், மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் கருத்துகளைக் கொண்டவையாகவும் இருத்தல் அவசியம். மக்களுக்கு வசதியான நேரத்தில் அவற்றை நடத்தவேண்டும்.

கலைநிகழ்ச்சிகளை நடத்தப் பெரும் பொறுப்பும், தகுதியும் வாய்ந்தவர்கள் வேண்டும். முன்னேற்பாடும் மக்கள் ஒத்துழைப்பும் கலைநிகழ்ச்சி முயற்சிகளை வெற்றியாக்கும்.

10. **பொதுக்கூட்டங்கள் (Public meetings)** பல்வேறு மக்களுக்கு ஒருங்கே பொதுவான சில கருத்துகளை எடுத்துச் சொல்லுவதற்குப் பொதுக் கூட்டங்கள் பயன்படுகின்றன. பொதுக்கூட்டங்கள் மூலமாக ஒரே சமயத்தில், ஏராளமான, பல தரப்பட்ட மக்களை அணுக முடிகிறது, புதுச்செய்திகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அவற்றைப் பரவலாக எடுத்துக்கூறிப் பதியச் செய்யவும் இம் முறை உதவுகிறது. உதாரணமாக ஒரு கிராமத்தில், உணவியற் கல்வியை அளிப்பதற்குமுன்பு, கிராம மக்களுக்கு அக் கல்வியின் அவசியம், நோக்கங்கள், திட்டங்கள், செயல்முறை ஆகியவற்றைப்பற்றி எடுத்துச் சொல்லவேண்டியது அவசியம். அப்போதுதான் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறமுடியும். அவர்களுடைய மனநிலை, போக்குகள், எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ளவும் முடியும். இவற்றிற்காகப் பொதுக்கூட்டங்களை நடத்தி மக்களின் சம்மதத்தைப் பெற்றபின்பு, மற்ற கல்வி முறைகளைக் கையாளுவது எளிதாகும்.

பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யும்போது கவனிக்க வேண்டியவை :

1. கிராமத் தலைவர்களுடன், பொதுக் கூட்டத்தின் அவசியம், ஏற்பாடுகள், சொல்ல வேண்டிய கருத்துகள், இடம், நேரம், தலைமை தாங்குவோர், பங்கு கொள்வோர், அழைப்பு விடுத்தல் ஆகியவற்றைப்பற்றிக் கலந்தாலோசித்து அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

2. கூட்டத்தில் தெளிவாகக், கவர்ச்சியாகப் பேசத் தகுதி படைத்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு முன் கூட்டியே கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப் போகும் தலைப்புகளைத் தந்து அழைப்புவிடுக்க வேண்டும்.

3. கிராமத் தலைவர்களில் வரவேற்புரை நிகழ்த்த, தலைமை தாங்க, நன்றியுரை நவிலச் சிலரை அழைக்க வேண்டும்.

4. கூட்டத்தில் மக்கள் உற்சாகத்துடன் பங்கு கொள்ளும்படி பாட்டு, கலைநிகழ்ச்சிகள், படக்காட்சி, பொருட்காட்சி ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

5. பொதுக்கூட்டம் நடைபெறப் போவதுபற்றிய விவரங்களை நாள், இடம், காலம் ஆகியவற்றை தண்டோரா, கவரொட்டிகள், சுற்றறிக்கை ஆகியவை மூலம் முன்கூட்டியே அறிவித்து மக்கள் திரண்டுவந்து கூட்டத்தில் கலந்துகொள்ள ஊக்குவிக்க வேண்டும்.

6. கூட்டத்தில் எல்லோரும் வசதியாக அமரவும், பார்க்கவும், கேட்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

7. பொதுக்கூட்டத்தை ஆரம்பிக்கும் நேரம், முடிக்கும் நேரம் ஆகியவற்றைத் திட்டமிட்டபடி அமுலாக்க வேண்டும்.

8. பேச்சாளர்கள் எடுத்துக்கொண்ட தலைப்பிலிருந்து வழுவாமலிருக்க உதவி செய்ய வேண்டும்.

9. கூட்டத்தின் முடிவில், பொருத்தமான புத்தக வெளியீடுகள், விதைகள் ஆகியவற்றை வழங்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

நமது கிராமப் புறங்களில், பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்வதில் பல இடையூறுகள் உள்ளன. விவசாயத்திலீடுபட்டிருக்கும் மக்கள் தம் வேலைகளை முடித்து ஓய்வுடன் இருக்கும் மாலையிலும், இரவு நேரத்திலும்தான் அத்தகைய கூட்டங்களில் கலந்துகொள்ள முடியும். ஆகவே விளக்குகளுக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கும். அவற்றுடன் மைக்குகள் போன்ற தேவைகள். செலவைப் பெருக்கும். மக்களின் கல்வியறிவு குறைவாக இருப்பதால், அவர்கள் புரிந்துகொள்ளும்படி கருத்துகளை எளிமையாகச் சொல்லக்கூடிய சிறந்த பேச்சாளர்கள் கிடைப்பது அரிது. பெருங்கூட்டங்களில், கலந்துகொள்ளுவோர் தங்கள் கருத்துகளை எடுத்துச் சொல்ல முடிவதிலலை, பலதரப்பட்ட மக்களும் கூட்டத்திற்கு வருவதால், தனிப்பட்டவரின் விருப்பு வெறுப்புகளை அறிந்து செயல்பட முடிவதில்லை. பங்கு கொண்ட மக்களின் கருத்துகளை அறியவும் இயலுவதில்லை. இக் காலத்தில் பொதுக்கூட்டங்கள் அரசியலுக்காகப் பெரிதும் பயன்படுத்தப் படுவதால், அரசியல் பாணியில் பேசும் வன்மை பெற்றவர்களைத் தான் மக்கள் விரும்பிக் கேட்கிறார்கள். ஆகவே மனையியற் கருத்துகளை, அத்தகைய கவர்ச்சி நிறைந்த சொற்பொழிவுகளாக்க முயற்சிசெய்ய வேண்டும்.

11. எழுத்துக்கள் மூலம் கற்பித்தல் (Distribution of literature) செய்தித்தாள்கள், புத்தகங்கள், பத்திரிகைகள், சுற்றறிக்கைகள் இதர வெளியீடுகள், ஆகிய ''எழுத்துகள்'' என்ற கல்வி முறையின்மூலம் ஆயிரக்கணக்கான மக்களை ஒரே சமயத்தில், குறைந்த செலவில், அவர்கள் இருக்கும் இடத்திலேயே அணுக முடிகிறது. எழுத்துகளைப் பல நாட்கள் பத்திரமாக வைத்திருந்து, வேண்டும்போது படிக்கலாம். மற்ற முறைகளுடன் சேர்த்து எழுத்து முறையையும் பயன்படுத்த முடியும். இம் முறையினால் மக்களின் எழுத்தறிவுத் திறனை வளர்க்கலாம். அவ்வப் பொழுது பயனுடைய பல கருத்துகளை மக்களுக்கு எழுத்து மூலம் சொல்லித்தரலாம். உதாரணமாக, அறுவடை சமயத்தில் தானியங்களைச் சேமிக்கும் முறைகள், பாதுகாக்கும் முறைகள், புதிய வீரிய தானியங்களைச் சமைப்பது எப்படி, ஆகியவற்றைப்பற்றிய வெளியீடுகளை விவசாயக் குடும்பங்களுக்குத் தரலாம். வீட்டுத் தோட்டம், கோழி வளர்ப்பு போன்றவற்றைத் தொடங்க குறிப்புகளை அளிக்கலாம். சுற்றறிக்கை (Circular letter) மூலம் பல கருத்துகளை விளம்பரமாகத் தெரியப்படுத்தலாம். ஆனால் நமது நாட்டில் பரவலாக இருக்கும் எழுத்தறிவின்மையும் கிராம மக்களுக்காக எழுதப் பலர் முன்வராததும், எழுத்துகளைக் கல்வி முறையாகப் பயன்படுத்துவதற்குத் தடையாக உள்ளன. எனினும், முயற்சிகளைக் கைவிடலாகாது. முதியோர் கல்வித் திட்டங்களை நன்முறையில் நடத்திப் படிப்படியாகக், கல்வி வெளியீடுகளைப் பலரும் நாடிப் படித்து நடைமுறையில் பயன்பெறச் செய்ய வேண்டும்.

எழுத்து மூலமே கல்வி-முறையை பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை : புத்தகங்கள் அல்லது வெளியீடுகள் :

1. எளிமையான நடையில், ஒரு முக்கிய கருத்தைத் தவறுகளின்றி வலியுறுத்துவனவாக இருக்க வேண்டும்.
2. ஐயங்களைத் தீர்க்கக்கூடிய கருத்துகளை அளிப்பனவாயிருக்க வேண்டும்.
3. அந்தந்த இடத்தில் வழங்கும் மொழியிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும்.
4. படங்களையும் புகைப்படங்களையும் கொண்டவையாக இருந்தால் படிக்கச் சுவையானவையா இருக்கும், கருத்துகளையும் புரிந்துகொள்ள முடியும்.
5. கருத்துகளைக் கதை வடிவிலும், பாட்டுகளாகவும் பொதிந்து, தந்தால் எளிதில் புரிந்து கொள்ள முடியும் ;

அவற்றில் வழக்கத்தில் உள்ள பெயர்களையும், சம்பவங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

6. படிப்பவரின் மனத்தைத் தொடும் தலைப்புகளையும் நடையையும் கொண்டனவாக இருத்தல் வேண்டும். உதாரணமாக, ''உங்கள் குழந்தைக்கு உணவு'' என்பது போன்ற சொற்றொடர்கள், படிப்போர் மனதில் ஓர் சொந்த உணர்வை ஏற்படுத்த முடியும்.

கிராம மக்களுக்குப் பயன்படும் நல்ல வெளியீடுகள் வருவதற்கு ஆர்வமும் பரிச்சயமும் உடையவர்களை எழுதும்படி தூண்ட வேண்டும். கிராமங்களில் நூல் நிலையங்கள் இல்லாவிடில் மகளிர் மன்றங்களின் உதவியுடன் நூல் நிலையங்களை ஏற்படுத்திப் புத்தகங்கள், வெளியீடுகள், பத்திரிகைகள் இவற்றைப் படிக்குமாறு மகளிரைத் தூண்ட வேண்டும்.

12. புலன் அடிப்படைத் துணைக்கருவிகள் (Audio-Visual aids) ஐம்புலன்களான மெய் (தொடுதல்-Touch), வாய் (பேசுதல்-Talk) கண் (பார்த்தல்-See), மூக்கு (நுகர்தல்-Smell), செவி (கேட்டல்-Hear) தொடுதல், பேசுதல், பார்த்தல், நுகர்தல், கேட்டல் ஆகியவற்றின் மூலம் புகட்டும் கல்வி முறைகளுக்குப் புலனடிப்படைக் கல்வி—முறைகள் என்று பெயர். உதாரணமாக திரைப்படம் ஒன்றை நாம் பார்க்கும்போது, நமது கண்களும், செவிகளும் படத்திலேயே லயித்து, உணர்வுகள் ஒன்றாகச் செயல் படுகின்றன, ஆகவே திரையில் காணும் நிகழ்ச்சிகள், பல கருத்துகளை எழுப்பி அவற்றை மனதில் ஆழப் பதிய வைத்து விடுகின்றன. ஒரு கருத்தைப்பற்றி காது மூலமாகக் கேட்பதுடன், அது சம்பந்தமான படங்களையோ, நாடகங்களையோ, செயல்முறை விளக்கங்களையோ காண்பதன்மூலம். அறிவு விரிவடைந்து, நிரந்தர மாக முடிகிறது.

புலன்களை உபயோகப்படுத்தி அளிக்கும் கல்விமுறைகளை முதல்-முதல் உலகுக்கு முறையாக விளக்கிய பெரிய நிபுணரான அமெரிக்க நாட்டு டாக்டர் எட்கர் டேல் (Edgar Dale) அவர்கள், இக் கல்வி முறைகளை, அடியிற்கண்டபடி ஒரு கூம்பு (Cone) வடிவத்தைக் கொண்டு விளக்குகிறார். இந்தக் கூம்பிற்கு ''அனுபவங்களின் கூம்பு'' என்று பெயர் அளித்திருக்கிறார்.

அனுபவக் கூம்பின் விசேட அம்சம் கூம்பின் அடித்தளத்தில், இருப்பது நேரிடை அனுபவங்கள். அடிப்பாகம் நேரிடைக்கல்வி யைக் குறிப்பிடுவதாகவும், படிப்படியாக மேலே செல்லச்செல்ல

இதர அனுபவங்கள் தம் வன்மையில் குறைந்து, இறுதியில் அடையாளங்களிலும் வெறும் வார்த்தைகளிலும் முடிகிறது. இங்ஙனம் அன்றாட வாழ்க்கையில் கிடைக்கும் பலதரப்பட்ட அனுபவங்களைக் கல்வி முறைகளாக்கி அறிவை விரிவாக்கலாம் என்று டாக்டர் எட்கர் டேல் விளக்குகிறார்.

நேரிடை அனுபவங்கள் (Direct experiences) மூலமாக கல்வி புகட்டுவது அனைத்திலும் சிறந்த முறையாகும். புதிய விவசாய



அனுபவங்களின் கூம்பு

முறைகள், உணவைப் பாதுகாக்கும் முறைகள், சமையல் மனைஅலங்காரம் செய்தல், தையல் முறைகள், உணவைப்

பரிசோதித்துப் பார்த்தல், ஆகியவை இம் முறைக்குச் சில சான்றுகளாகும்.

ஏற்படுத்தப்பட்ட அனுபவங்கள் மூலமாகக் (Contrived experiences) கற்கும் முறையில், மாணவர்களுக்குக் கற்கும் பொருளுடன் நேரிடையாகத் தொடர்பு கிடைக்காது. அதற்கு மாறாக பொருள்களின் மாதிரிகளையும் (Models) அமைப்புகளையும் (Mockup) பயன்படுத்திக் கல்வி நடைபெறுகிறது. உதாரணமாக ஒரு இலட்சிய கிராமத்தின் அமைப்பைப்பற்றிக் கற்பிக்கும்போது, அந்தக் கிராமத்தின் மாதிரியை வைத்துச் சொல்லிக்கொடுக்கலாம். அதேபோல் உலக உருண்டையைப் பயன்படுத்தி நிலநூல் கற்பிக்கலாம்.

கலைநிகழ்ச்சிகள் (Dramatisation) மூலம் கற்பிப்பது சிறந்த முறையும் அனுபவமுமாகும். குறிப்பாக அதில் பங்கு பெறுவோர் அந்தந்தப் பாத்திரங்களுடன், ஒன்றிப்போய்க் கல்வி பெறுகின்றனர். இம் முறையின் தனிச்சிறப்பு யாதெனில், வாழ்க்கையில் காணக்கிடைக்காத சரித்திர, புராண சம்பந்தமான நிகழ்ச்சிகளையும், நாடகம், பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு, கதை போன்ற கலை நிகழ்ச்சிகளையும் காணமுடிகிறது.

செயல்முறை விளக்கங்கள் (Demonstration) சுற்றுப்பயணம் (Study tour) பொருட்காட்சிகள் (Exhibitions) ஆகிய முறைகளை மற்ற முறைகளுடன் சேர்த்துப் பயன்படுத்தும்பொழுது, கல்வியின் பயன் அதிகரிக்கின்றது.

படக்காட்சி, டெலிஷன், வானொலி (Films Television, Radios) போன்ற கருவிகளின் துணையுடன் கல்வி முறைகள், அமையும் போது, நேரிடை அனுபவங்களின் பயன் கிடைக்கிறது.

புகைப்படங்கள், சித்திரங்கள், கரும்பலகை, இதர பலகைகளில் வரையும் படங்கள்மூலம், கல்வியைப் பிரத்தியட்சமாக அளிக்க முடிகிறது.

இங்ஙனம் புலன்களைக்கொண்டு கற்கும் முறைகளில் பல துணைக்கருவிகளைப் பயன்படுத்தவேண்டும். அவற்றைத் திரையிடப்படும் துணைக்கருவிகள் (Projected aids) திரையிடப்படாத் துணைக் கருவிகள் (Non-projected aids) என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

திரையிடப்படும் துணைக்கருவிகள் மூலம் கற்கும் முறைகள்

சினிமாப்படம், சிலைடுகள் ஆகியவை இப் பிரிவில் அடங்கும். இவை கருத்துகளை நன்கு விளக்கப்பயன்படுகின்றன. மக்களின் ஆர்வத்தையும் உணர்ச்சிகளையும் தூண்டுகின்றன. வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுவதோடு, எக் காலத்திலோ, எங்கோ நடந்த நிகழ்ச்சிகளைத் தற்காலத்தில் நாமிருக்கும் இடத்திற்கே கொண்டு வருகின்றன. இவை மக்களுக்கு ஓர் சிறந்த பொழுதுபோக்கு அம்சமாகவும் திகழ்கின்றன.

ஆனால் திரையிடும் துணைக்கருவிகளைப் பெறச் செலவு அதிகம் செய்யவேண்டும். அக் கருவிகள் விலையுயர்ந்தவை. இவற்றை இயக்க மின்சாரம் தேவை. பல கிராமங்களில் இவற்றை ஏற்பாடு செய்யப் போதிய வசதிகள் கிடையாது. மேலும் நமது கிராமியச் சூழ்நிலைக்கேற்ற திரைப்படங்களும் தயாரிக்கப்படுவதில்லை.

வானொலி, ஒலிப்பதிவுக்கருவி **(Tape Recorder)**, **(Gramaphone)** இசைத்தட்டுகள் போன்றவற்றையும் நமது நாட்டில் கல்விக்காக இன்னும் அதிகமாகப் பயன்படுத்தவேண்டும்.

திரையிடப்படாத துணைக்கருவிகள்மூலம் கற்கும் முறைகள்

வேறு சில துணைக்கருவிகள் குறைந்த பொருட்செலவில் தயாரிக்கக்கூடியவை. கரும்பலகை, ஒட்டுப்பலகை, செய்திப் பலகை, சுவரொட்டிகள் வரைபடங்கள், மின்படங்கள், விளம்பரப்பலகைகள் போன்றவை எளிதாக உபயோகிக்கக் கூடியவை. நமது கிராமங்களுக்கு ஏற்றவை. கலைநிகழ்ச்சிகள்மூலம் கற்பித்தலையும் இவ் வகையில் சேர்க்கலாம்.

கரும்பலகை (Black Board)

கரும்பலகை எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. சரியாகப் பயன்படுத்தினால் கல்வி புகட்ட அது ஒரு சிறந்த சாதனமாகிறது. முதியோர் கல்விக்குக், கரும்பலகை மிகவும் பயன்படுகிறது. உபயோகிக்க எளிதாகவும், திரும்பத்திரும்பப் பயன்படுத்திக்கொள்ளக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. தெளிவாகப் படங்கள் வரையவும் முக்கிய கருத்துகளைக் கற்போர் மனதில் அழுத்தமாகப் பதிய வைக்கவும் பயன்படுகிறது,

ஒட்டுப்பலகை (Flannel graph)

ஒட்டுப்பலகையானது, படங்களைத் தற்காலிகமாக ஒட்டிக் கல்வி புகட்டுவதற்குப் பயன்படுகிறது. இப் பலகையை மரத்தாலோ

அல்லது கனமான அட்டையைக் கொண்டோ அமைத்து, பிளானல் கம்பளி அல்லது கதர்த்துணி கொண்டு மூடிவிடவேண்டும். பின்னர் ஒட்டவேண்டிய படங்களைத் தயார் செய்து ஒவ்வொன்றிற்கும் பின்புறத்தில், உப்புக் காகிதத்தை அல்லது பிளானல் அல்லது கதர்த்துணியை ஒட்டி அதன் உதவியுடன், ஒட்டுப்பலகை மேல் சிறிது நேரம் அந்தப் படம் நிற்கும்படி ஒட்டவேண்டும்.

ஒட்டுப்பலகை எளிதில் தயார் செய்யக்கூடியது. இந்த முறையில் எல்லாப் படங்களும் ஒரே நேரத்தில் வராமல், ஒன்றன் பின் ஒன்றாக வருவதால், கற்போர் நாடகம் பார்ப்பது போன்ற உணர்வை அடைவர். இம் முறையில் கற்பிக்கும் பொருளைக் கதை வடிவில் அமைப்பது கற்பவர்கள் உற்சாகமாகக் கற்க உதவுகிறது.

செய்திப்பலகை (Bulletin Board)

செய்திப்பலகை பயன் நிறைந்த ஓர் கல்விக்கருவியாகும். இப் பலகையைப் பொதுவான இடத்தில் எல்லோரும் எளிதில் பார்க்கக்கூடிய உயரத்தில் அமைத்து அன்றாடச் செய்திகளைப் பயனுள்ள முறையில் அளிக்கலாம். புதுகருத்துகளைப் புகட்டுவதற்கும் உதவுகிறது, படங்கள், புகைப்படங்கள், புத்தக வெளியீடுகள், மாதிரிப்படங்கள், போன்றவற்றையும் ஒரே சமயத்தில் பலர் காணும்படி மாட்டுவதற்கு உதவுகிறது. ஆனால் இதுவும் ஒரு எழுத்துமுறையாதலால் எழுதப்படிக்கத் தெரிந்தவர்க்கே பயன்படுகிறது. இருப்பினும் மக்களின் சிந்தனையைத் தூண்ட இம் முறை பயன்படுகிறது. செய்திகள் சுவையாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் அவசியம். அடிக்கடி செய்திகளை மாற்றிக்கொண்டேயிருக்கவேண்டும்.

படங்கள், சித்திரங்கள், புகைப்படங்கள் (Pictures, drawings, photographs) :

படங்களும் சித்திரங்களும் உற்சாகமூட்டும் கல்விச்சாதனங்களாகும், ஆனால் இவை, தனியே இயங்கமுடியாது. மற்ற கல்வி முறைகளுடன் சேர்த்துப் பயன்படுத்தவேண்டும். இவை பார்ப்பவர்களுக்குத் தெளிவும், புதுமையும் ஊட்டும்போது, பேச்சைக் குறைத்துக் கல்வி முறையை வலுப்படுத்த உதவுகிறது. படங்களின் பொருளும், நிறமும், விளக்கமும், அமைப்பும், எளிமையானதாகவும், கற்போரின் வயது கல்வி, அறிவுத்திறன் ஆகியவற்றிற்கும் கிராமியச் சூழ்நிலைக்கும் பொருந்தியதாகவும் அமைந்திருத்தல் அவசியம்.

சுவரொட்டிகள் (Posters)

விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள இன்றைய உலகில் சுவரொட்டிகள் இன்றியமையாதவை. இவை கவர்ச்சிகரமான தலைப்புகளை உடையதாகவும், பெரிய, ஆனால், குறைந்த எண்ணிக்கையுள்ள எழுத்துகளைக் கொண்டதாகவும், சித்திரங்கள் உடையதாகவும், பொருளை எளிதில் உணர்த்துவனவாகவும் இருத்தல் மிக அவசியம். மக்களது பார்வை அடிக்கடி படும் பொதுக்கிணறு சந்தைப் பேட்டை ஆகிய இடங்களுக்கு அருகில் வைக்கவேண்டும்.

சுவரொட்டிகளும் கல்வி முறையாக தனித்து இயங்க இயலாது. இவற்றை ஓர் முன்னறிவிப்பாக, உற்சாகத்தைத் தூண்டும் கருவிகளாகவும், பொதுக்கூட்டம், செயல்முறை விளக்கம், கலந்துரையாடல் போன்ற முறைகளுடன் பயன்படுத்த வேண்டும்.

சுவரொட்டிகள் மூலம் சத்துணவுக் கல்வி அளித்தல்

வரைபடங்கள் (Charts)

வரைபடங்கள் புள்ளிவிவரக் கணக்கு, அளவு முறைகள் இவைகளை விளக்கப் பயன்படுகின்றன. உதாரணமாக,

உணவிலுள்ள சத்துகளின் அளவுகள், ஒரு நபருக்குத் தேவையான குடும்பத்தின் வரவு செலவு, ஒரு நபருக்குத் தேவையான கீரை, சோறு, பருப்பு ஆகிய உணவுப் பொருள்களின் அளவுகள், பல முறைகளில் ஈட்டிய பணத்தின் அளவு, ஆகியவற்றை வரை படங்கள் மூலம் விளக்க முடியும். கருத்துக்களை எழுத்துகள் அதிக மின்றி தெளிவாக வரைபடங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வரைபடங்கள் ஒழுங்குடனும், எளிமையுடனும், கவர்ச்சி யுடனும் இருக்க வேண்டும். இவற்றை கிராம மக்களுக்குக்

மின் அட்டைகளைப் பயன்படுத்தி விளக்குதல்

காட்டும்போது விரிவான விளக்கத்தை அளித்தல் அவசியம். இம் முறை, உயர்கல்வியில் பெரிதும் உதவுகிறது.

மின் அட்டை (Flash Cards)

கற்பிக்க வேண்டிய கருத்துகளை (மின்னல்) வேகத்தில் கற்போர் மனதில் படியச் செய்ய மின் அட்டை உபயோகப் படுகிறது. இம் முறையில் சொல்ல வேண்டிய செய்தி ஓர் கதை வடிவில் இருக்க வேண்டும். கதையில் ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒரு அட்டைப்படம் உண்டு. படங்களை வரிசைப்படி ஒன்றன்பின் ஒன்றாகக் காட்டிக் கதையைக் கூறி விளக்க வேண்டும்.

அட்டையின் பின்புறத்தில் கதைக் குறிப்பை எழுதிக்கொள்வது, கற்பிப்பவருக்குத் தெரியாமலேயே படித்து விளக்க உதவும். ஒரு கதையில் பதினைந்து அட்டைகளுக்கு மிகாமல் இருத்தல் நலம். அட்டைகளில் அளவு 6" × 4" அல்லது 12" × 10" இருக்கலாம். இம்முறை 15-20 பேருடைய சிறிய குழுக்களுக்கே பொருந்தும். ஏனெனில் பெரிய கூட்டங்களில், அட்டையில் உள்ள படங்களை அனைவரும் பார்க்க முடியாது.

விளம்பரப் பலகைகள் (Hoardings)

விளம்பரப் பலகைகள், கல்வி, விஞ்ஞானம், சத்துணவு, குடும்பக் கட்டுப்பாடு, விவசாயம் ஆகிய பல்வேறு துறைகளிலுள்ள புது முறைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தப் பெரிதும் பயன்படுத்தப்படும் முக்கிய சாதனங்களாகும். இவற்றின் பயன் சிறக்கப் பின்காணும் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. விளம்பரப் பலகைகள் மிகப் பெரிய அளவில் வெகு தூரத்திலிருந்தே கண்களில் படுமாறு அமைய வேண்டும்.
2. குறைந்த எழுத்துகளைக் கொண்டிருக்க வேண்டும்.
3. கவர்ச்சி நிறைந்த நிறங்களையும், படங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும்.
4. முக்கிய இடங்களில் அமைக்கப்பட வேண்டும். (உதாரணமாக, பெண்கள் தண்ணீர் நிரப்பும் குழாய் இருக்குமிடம், பஞ்சாயத்து யூனியன் கட்டிடம், பள்ளி, மாதர் சங்கம், சந்தை, நான்கு தெருக்கள் சந்திப்புப் போன்ற இடங்கள்)
5. சிறியோரையும், பெரியோரையும் கவரும்படியும், அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும்படியும் அமைய வேண்டும்.

புலன்களைப் பயன்படுத்திக் கற்பதனால் உண்டாகும் நன்மைகள்

1. வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் குறைவதால் குறைந்த நேரத்தில், நிறையக் கற்க முடிகிறது.
2. வார்த்தைகள், கருத்துகள் ஆகியவற்றிற்கும் பொருட்களுக்கும் உள்ள தொடர்பு தெளிவாகின்றது.
3. கல்வி நிரந்தரமாகிறது. கற்றவை விரைவில் மறக்கப் படுவதில்லை.

4. கருத்துகளைக் கோர்வையாக அறிய முடிகிறது.

5. கற்போரின் உற்சாகத்தைத் தூண்டி, அவர்களிடம் ஈடு பாட்டை உண்டாக்குகிறது.

6. கற்பவர்களைக் கல்வியில் ஆழ்ந்து இயங்கச் செய்கிறது.

துணைக் கருவிகளையும் சாதனங்களையும் பயன்படுத்தும்போது கவனிக்க வேண்டியவை

பயன்படுத்தத் தேர்ந்தெடுக்கப்படும் முறை சாதனம்

1. எடுத்துக்கொண்ட தலைப்புக்கும், பாடத்திற்கும், கருத்துக்கும் பொருத்தமானவைகளாக இருக்க வேண்டும். உதாரணமாகக் கிராம சுகாதாரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே யிருப்பதைவிட, அது சம்பந்தமான படக்காட்சிகளைக் காட்டி ஒரு தீவிர கிராம சுகாதாரத் திட்டத்தை **(Cleaning campaign)** ஆரம்பிக்கலாம்.

2. மக்களால் நன்கு புரிந்து கொள்ளக் கூடியவையாக இருக்க வேண்டும். உதாரணமாகக் கல்வி அறிவற்ற மக்களுக்கு எழுத்துகள் மூலம் கற்பிக்கவே முடியாது. அவர்கள் எளிதிற் புரிந்துகொள்ளக்கூடிய பாட்டு, கதை, படம் போன்றவை மூலமாக மக்களின் வயதிற்கும், அனுபவத்திற்கும் தகுந்த முறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

3. கற்போரின் சூழ்நிலைகளுக்கும், அவர்கள் இருப்பிடத்தில் உள்ள வசதிகளுக்கும் ஏற்றவாறு தேர்ந்தெடுக்கவேண்டும். வெளி நாட்டிலிருந்து தருவித்த படங்களை நம் கிராமங்களில் காண்பித்தால் பயன் இருக்காது. படம் திரையிட மின்சாரம் போன்ற வசதி யில்லாத இடங்களில் வேறு ஏதாவது முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

4. கல்விச் சாதனங்கள் அனைத்தும் நல்ல நிலையில் இருக்க வேண்டும். உதாரணமாகப் படம் காட்டும் " புரொஜெக்டர் " வேலை செய்யக்கூடிய நிலையில் இருப்பது அவசியம். படங்கள், சுவரொட்டிகள் கிழிந்திருத்தல் ஆகாது.

5. பல முறைகளையும், சாதனங்களையும் கலந்து உபயோகிக்க வேண்டும். உதாரணமாகச் சத்துணவுக் கல்வி கற்பிக்கவேண்டு மென்றால், சத்துணவுபற்றிப் பொதுக்கூட்டங்கள்மூலம் முதலில் அறிமுகப்படுத்தலாம். தொடர்ந்து, வீடு வீடாகச்சென்று தாய்

மாரைப் பேட்டி கண்டு, புள்ளி விவரங்களைச் சேகரித்து பின் படக் காட்சி, செயல் விளக்கமுறை இவைமூலம் கல்வி புகட்டலாம். ஆனால் ஒரு சமயத்தில் பல முறைகளை உபயோகித்துவிடுவது குழப்பத்தையே உண்டாக்கும்.

6. கற்பிக்கும் உபகரணங்களைத் தயார்செய்யும்போது, அந்த இடத்தில் கிடைக்கக்கூடிய விலை குறைந்த பொருள்களையே பயன் படுத்தவேண்டும்.

7. கல்வி முறைகளின் உபயோகத்திற்குப்பின் அவற்றின் நன்மை தீமைகளைப்பற்றிய விவரங்கள் அபிப்பிராயங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்வேண்டும். அப்போதுதான் அம் முறைகளை மீண்டும் உபயோகிக்கும்போது அறிவுடன் பயன் படுத்த உதவும்.

8. கல்வி புகட்டுவோர், கற்பிக்கும் முறைகளிலும், உபகர ணங்களை உபயோகிப்பதிலும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். கற்போரை முன்கூட்டியே தயார்செய்து கொள்ளவேண்டும். உதாரணமாக, ஒரு படக்காட்சிக்கு முன்பே அது எதனைப்பற்றியது, எவ்வளவு நேரம் ஓடும் என்ற விளக்கத்தைக் கற்போருக்கு அளித்தல் நலம்.

7. விரிவியலும், சமூகப் பழக்க வழக்கங்களும் பண்பாடும்

(SOCIAL AND CULTURAL FACTORS IN EXTENSION)

ஒரு சமுதாயத்தில் பரம்பரையாகக் கையாண்டு வரும்பழக்க வழக்கங்களும் முறைகளும் மக்களுடைய கூட்டு வாழ்க்கையாலும், பண்பாட்டாலும் நிர்ணயிக்கப்பட்டவை. மக்கள், தம் குறிக்கோள்கள், இடம், மொழி, ஆகியவற்றால் பிணைக்கப்பட்டு, ஒன்று சேர்ந்து, ஆலோசித்து, செயல்பட்டு வாழ்வதே சமுதாய வாழ்வு ஆகும். அவர்களுக்கிடையே ஒருமைப்பாட்டையும், கூட்டுறவு மனப்பான்மையையும் வளர்ப்பதுதான் சமுதாயப் பண்பாடு.

ஒரு சமுதாயத்தில் பல்வேறு குடும்பங்கள், கோத்திரங்கள், ஜாதி, மதங்கள், பணிகள், உண்டு. அதில், பிறப்பும், வளர்ப்பும், இறப்பும் மாறி மாறி வரினும், கூட்டுறவும், பழக்க வழக்கங்களும் மாறுபாடுகளுடன் தொடர்ந்து வருகின்றன. அவற்றின் மத்தியில் சமுதாயத்திலுள்ள மக்களின் கருத்துகள், கொள்கைகள், பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள் ஆகியவற்றால் பண்பாடு வளர்ந்து வந்து அவர்கள் வாழ்க்கையையும் நடத்தைகளையும் பாதிக்கிறது.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை அதன் உறுப்பினரிடமிருந்து குழந்தைகள் அறிகிறார்கள். அவர்கள் பிறக்கும்போதே நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறிவதில்லை. பெரியவர்களைப் பார்த்துப் படிப்படியாக அனுபவ ரீதியில் கற்றுக் கொள்கின்றனர். பண்பாடு என்பது பழக்கவழக்கம் மாத்திரம் அல்ல. மக்களின் உள்ளத்தின் உணர்ச்சிகளையும் கொண்டது. பண்பாடு காலத்திற்கேற்றவாறும், மக்களின் கருத்துக்களுக்கேற்றவாறும் மாறக்கூடியது. உதாரண

மாகப் புதிய பயிர்கள், புதிய பயிற்சிகள் ஆகியவை காலப்போக்கில் சமுதாயத்தின் பழக்கங்களாகிவிடுகின்றன. புதிய முறைகளைக் கையாண்டு விளைச்சல் அதிகமாகும்போது, பழைய முறைகளை உதறித் தள்ளிவிட்டுப் புதிய முறைக்கு விவசாயத்தை மாற்றிப் பண்பாட்டையும் மாற்றுகின்றனர்.

ஒரு விவசாயி பயிர்களை எவ்வாறு பயிரிடுகிறான்? நிலத்தைப் பண்படுத்துவது எவ்வாறு? பணத்தையும், முயற்சியையும் பயன் படுத்துவது எப்படி? வேளாண்மையை முன்னேற்றுவதற்காக அவன் கையாளும் வழிகள் எவை? என்பனபோன்ற வினாக்களுக்கு விடைகளை ஆராயும்போது, பழங்கொள்கைகளும், பழக்க வழக்கங் களும், பரம்பரையாகக் காரணமாக இருந்திருக்கின்றன என்பது தெரியவருகிறது. அவற்றில் நம்பிக்கைகொண்டுள்ள மக்களைச் சிந்திக்கத் தூண்ட பண்பாட்டறிவு உதவி செய்கிறது. ஆகவே, விரிவியல் துறையினர், மக்களின் பண்பாட்டை நன்கு அறிந்திருக்க வேண்டும். அவர்களுடைய நோக்கங்களையும், வாழ்க்கை வழிமுறை களையும், பரம்பரையாக வழங்கிவரும் பழக்க வழக்கங்களையும் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். மக்களுக்குத் தன்னம்பிக்கையைத் தருவ தும் செயல்பட ஊக்குவிப்பதும் என்ன என்று அறிந்து செயல்பட வேண்டும். சமுதாயத்தின் யார் யார் செல்வாக்குடையவர்கள், யார் யார் திட்டமிட்டுச் செயல்படுகின்றனர் என்பதை அறிந்து கொண்டு, விரிவு முயற்சிகளைப் புகுத்தவேண்டும்.

பரம்பரையாகச் சில பணிகளை ஆண்களும், வேறு சில பணி களைப் பெண்களும் மேற்கொண்டு வருகின்றனர். கிராமியக் குடும்ப வாழ்க்கையிலும், விவசாயத்திலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியான பொறுப்புகள் இருக்கின்றன. விரிவியல் துறை யினர், அவர்களுக்குப் புதிய முறைகளைப் பயிற்றுவிக்கும் முன், அவர்கள் வழக்கமாகச் செய்துவரும் வேலைகள், கையாண்டுவரும் முறைகளைப்பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும். ஒரு சமுதாயத் திலுள்ள விழாக்கள் முக்கியமாகப் பொங்கல், தேர் ஆகிய வற்றிற்கு வாழ்க்கையில் எவ்வளவு பங்கு உள்ளது என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

சமுதாயத்தில், அனுபவம் மிக்கவர்களுக்கும், வயதில் பெரிய வர்களுக்கும், அறிவில் சிறந்தவர்கட்கும் உயர்ந்த மதிப்பு உண்டு. இளைஞர்களைக் காட்டிலும், முதியோருக்குத் தேர்ந்த அனுபவமும் உலகியலறிவும் உண்டு. வயதுக்குத் தகுந்தவண்ணம் ஒவ்வொரு வரின் பழக்க வழக்கங்களும், வாழ்க்கையின் குறிக்கோள்களும்

மாறுபடுகின்றன. இவற்றையும் விரிவியல் துறையினர் மதிப்பிட வேண்டும்.

குடும்பங்கள் எவ்வாறுள்ளன? கூட்டுக் குடும்பங்களாகவா, அல்லது தாய், தந்தை, குழந்தைகள், பிள்ளைகள் மட்டும் தனியாக வசிக்கிறார்களா? குடும்பத்தின் தலைமை யாரிடம் உள்ளது, யார் பொறுப்பு வகிக்கின்றனர், வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் உதவி புரிவது யார், மூத்தவர்கள், இளையோர் படிப்பிற்குப் பண உதவி செய்கிறார்களா? என்பதையெல்லாம் ஆய்ந்தறிதல் வேண்டும். குடும்பத்தில் முன்னோடி யார்? புதிய முறைகளைச் சோதித்துப் பார்க்க யார் முன்வருகிறார்கள் என்று கண்டுபிடிக்க வேண்டும்.

பெண்களுக்குச் சொத்தில் உரிமை உள்ளதா? மக்கள் தாயமா? மருமக்கள் தாயமா? சொத்துரிமைபற்றிய இன்றைய சட்ட திட்டங்களைப் பெண்கள் நன்கு அறிந்திருக்கிறார்களா? பழமையான சம்பிரதாயப்படியும், இன்றைய சட்டங்களின்படியும் சொத்து வாரிசு, எங்ஙனம் நிறைவேற்றப்படுகிறது? என்ற வினாக்களுக்கும் விடைகாணவேண்டும்.

எந்தச் சமுதாயத்திலும், சிலர் புதிய வழிகளைக் கையாள் வதற்குத் தயாராக இருக்கின்றனர். அவர்களுக்குச் சமுதாயத்திலும் செல்வாக்கு இருக்கும். விரிவியல் பணியாளரை அணுகிப் புதிய உரமிடுவது எப்படி? நல்ல விதைகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி என்றெல்லாம் விரிவாகக் கேட்டுக்கொள்கின்றனர். பல ஆண்டுக ளாகக் குறிப்பிட்ட ஒரு முறையைக் கையாண்டு, பயிரிட்டவர் களுக்குப் புதுமுறைகளைப் பயன்படுத்துவது கடினமாகத்தா னிருக்கும். ஆனாலும், ஆழ உழுது, புதிய கலப்பு உரங்களைப் போடு வதால் நல்ல வருவாய் கிடைக்கிறது என்று தெரிந்தவுடன் அவர வர்கள் மலைபோன்ற முயற்சிகளையும் இலகுவாக்கிவிடுகின்றனர். ஆனால் அவர்கள் சமுதாயத்தில் குறிப்பிட்ட மாற்றங்களைக்கொண்டு வரும்போது, பழம்பரம்பரையான கொள்கைகளைக் கடைப்பிடித்து வருபவர்கள் அவர்கள்மீது சந்தேகமும். பொறாமையும் கொள்வர். அவற்றையும் மீறிச் சாதனங்களைக் காணும் தலைவர்களை விரிவியற் பணியாளர்கள் கண்டுபிடித்தாகவேண்டும்.

விரிவியல் பணிபுரிபவர்கள், சமுதாயத்தில் விஞ்ஞான முறைப் படி, வேளாண்மையிலும், குடும்ப வாழ்க்கையிலும், புதிய முறைகளை அறிமுகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சமுதா யத்திலுள்ளவன் படிப்பு சம்பந்தமாகவோ, வேறு வேலையாகவோ

அடுத்த சமுதாயத்திலுள்ளவர்களுடன் பழகும்போது அவனே தன் வாழ்க்கையில் கருத்துகளைத் தனக்கென ஏற்றுச் சில மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்கிறான். ஒரு சமுதாயத்தில் புதிய கருத்துகளைப் பலர் ஏற்றுக்கொண்டால், அதைப் பார்த்து எல்லா மக்களும் ஏற்றுக்கொள்வர்.

இன்று சமுதாயத்தில் போக்குவரத்து பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பயணம் செய்ய போக்குவரத்து வசதிகள் அமைந்திருப்பதால் மக்கள் எந்தச் சமயத்திலும் எந்த இடத்திற்கும் போகவும், சுற்றிப் பார்க்கவும் முடிகிறது. செய்தித் தாள்களும், வானொலியும் சினிமாவும் பிறருடன் தொடர்புகொள்ளப் பெரிதும் வழிவகுக்கின்றன. இவை மக்களின் பொருளாதாரம், வாழ்க்கைமுறைகள் ஆகியவற்றை அறிந்து மாற்ற வழி காட்டுகின்றன. அரசாங்கமும் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்த உதவுகின்றது.

நம்முடைய பழம் சம்பிரதாயங்களில், வயதில் முதிர்ந்தோருக்கு மரியாதை செலுத்துவது ஒரு நல்ல பழக்கம். யாராலும்



விரிவுப்பணித் திட்டத்தின் படிகள்

ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆனால், தங்களது நாகரிகம், வாழ்க்கை முறைதான் சிறந்தது. என்று நினைக்கும் முதியவர்கள், புது முறைகளைக் கைக்கொள்ளுவதற்குத் தடையாக இருப்பவர்கள். 'எங்களுக்குச் சிறந்த வழிகளெல்லாம் தெரியும், எங்களது வழியைவிடச்

சிறந்தது உண்டோ! என்று எதிர்க்கவும் செய்வார்கள். அவர்களையும் சமாளிக்க, விரிவுப் பணியினர் தெரிந்துகொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் ஒவ்வொருவரும் கையாளவேண்டிய பொறுப்புகள் பல உள்ளன. வருவாய் அதிகரிக்கும்போது, குடும்ப வாழ்க்கையின் தேவைகளும் அதிகமாகின்றன. ஒருவனது வருவாய் பெருகினால் அவனுடைய உதவியை நாடி நிற்கின்றவர்களும் அதிகமாகின்றனர். திருமணங்கள், சவ அடக்கங்கள் முதலியவற்றில் சமுதாயச் சம்பிரதாயங்கள் பல உள்ளன. விழாக்களுக்கும், சடங்குகளுக்கும் எவ்வளவு நேரம் செலவழிப்பது என்பது ஒரு பிரச்சனை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் புதிய முறைகளைக் கையாள்வதில் ஆர்வமுள்ளவர்கள் யாரென்பதை விரிவுத் துறையினர் தெரிந்திருக்கவேண்டும்.

விரிவியல் துறையில் பணி புரிபவர்கள் சமுதாயத்தின் தரத்தையும், மக்களின் செல்வாக்கையும் அளவிட்டு அறிந்திருத்தல் வேண்டும். கிராமக் குடும்பத்திலுள்ளவர்கள், உறவினர், குழுக்கள் ஆகியவர்களிடையே தகராறுகளும் சண்டைகளும் இருக்கலாம். ஆகவே, அவர்கள் மத்தியில் பணிபுரியும்போது ஒருவரை மட்டும் புகழுதல் கூடாது. ஏனெனில் ஒரு பிரிவிலுள்ளவர்கள் புதிய கருத்தை ஏற்றுக்கொள்வர், அடுத்த பிரிவினர் ஏற்றுக்கொள்ளாது எதிர்ப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மட்டுமல்லாமல், வேறு செல்வாக்குடையவர்களும், சில சமயங்களில் ஒரு முழுக்குடும்பமே கிராமத்தின் தீர்மானங்களை நிறைவேற்றலாம். சிலர் தலைவர்களாக இல்லாமலிருப்பினும் நிறைந்த செல்வாக்குடையவர்களாயிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.

புதிய கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு, மக்களே தேர்ந்தெடுக்கும் பொது இடங்களில் கூட்டம் கூட்டுவது சிறந்தது. அரசாங்கக் கட்டிடங்களில் கூட்டங்கள் நடத்தினால் அவற்றைப் பொதுவாக மக்கள் அரசாங்க விவகாரமாக நினைத்து மதிக்க மாட்டார்கள். பொது இடமாக இருப்பின், மக்கள் அக்கறை கொள்வர், ஆர்வம் காட்டுவர், கூறப்படுவதை கைக்கொள்ளவும் விரும்புவர். வாழ்க்கையை முன்னேற்றும் முறைகளைப் போதிக்கும் போது, மக்களுக்கு எளிதில் புரியும் வகையில் சாதாரணச் சொற்களையும், மொழியையும், உதாரணங்களையும், முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டும். படித்துத் தேர்ச்சி பெற்ற ஆசிரியருக்குத் தெரிந்துள்ள முறைகள் இனிமேல் படிக்கப்போகும் கிராம மக்களுக்கு மிகவும் கடினமாக இருக்கலாம். ஒவ்வொரு

நபரையும், தனிப்பட்டமுறையில் சந்தித்து குறிப்பிட்ட இடத்தில் புதிய கருத்துகளை விவரித்துக் கூறி, புதிய முறையைக் கண்கூடாகக் காணச் செய்து அவர் நம்பும்படி செய்ய வேண்டும். கண்ணால் காணும் நேரடி செய்முறைக்காட்சிகள் மூலம் நல்ல முறைகளையும் தொடர்ச்சியான அறிவையும் பெறமுடியும்.

விரிவியல் பணிபுரிபவர்களைப் பணம் சேகரிக்கும் பணியிலும், வரி வசூலிக்கும் பணியிலும் ஈடுபடுத்தவே கூடாது. அது கல்விக்குப் பிரதிகூலமாக இருப்பதுடன், மக்களையுந் துன்புறுத்துவதாகும்.

8. மக்களுடன் இணைந்து செயல்படுதல்

(WORKING HARMONEOUSLY WITH PEOPLE)

விரிவுப் பணி என்பது மக்களுடன் இணைந்து வேலை செய்வதாகும். விரிவுப் பணியாளர் திறமை மிக்கவராக இருப்பினும் மக்களுடன் ஒன்றி வேலை செய்யத் தெரியாவிட்டால், வெற்றி பெற இயலாது. மக்களுடைய நம்பிக்கையையும் கூட்டுறவையும் பெறுவதற்கு விரிவுப் பணி செய்பவர்கள் தமது அறிவையும் ஆர்வத்தையும் பயனுள்ள முறைகளில் ஈடுபடுத்தி, மேற்கொண்ட முயற்சிகளைச் சாதித்துக் காட்ட வேண்டும். அவர்கள், பிரச்சினைகளை ஆராயும்பொழுது, பழைய முறைகளை முன்னமேயே கையாண்டவை என்பதற்காகக் கண்களை மூடிக்கொண்டு பின்பற்றக்கூடாது. பழைய பிரச்சினைகளைப் புதிய நோக்குடன் காண வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகள் பல ஆண்டுகளாகத் தரமானதாக இருந்திருப்பினும் காலப் போக்கிற்கேற்பப் புதிய மாற்றங்கள் தேவைப்படலாம். விரிவுப் பணியாளர்கள் மாறுதல்களின் பிரதிநிதிகள். ஆகவே, அவர்கள் மக்களின் எண்ணங்களிலும் செயல்களிலும் அவர்களுடைய ஆற்றல்களையும் ஆர்வங்களையும் வெளிப்படுத்தத் தகுந்த மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் சிக்கல்கள் இருப்பின் அவற்றிற்குத் தகுந்த விளக்கங்களுடன் மக்களை அணுகி விவாதித்து அவர்களே தீர்வு காண ஊக்குவிக்க வேண்டும்.

விரிவுப் பணியாளர், மக்கள் தலைவர்களுக்குத் தலைவர். உண்மை, உற்சாகம், மக்கள் திறமையில் நம்பிக்கை ஆகியவை யாவும் விரிவுப் பணியாளரைச் சிறந்த தலைவராக்க உதவுகின்றன. தம் நம்பிக்கையாலும் உழைப்பாலும், பலதிறப்பட்ட உறுப்பினர் களிடையே நம்பிக்கையை வளர்த்துத் தலைமை பெறவேண்டும்.

செயல்களைத் திட்டமிட்டு மக்களின் தலைவர்களின் உதவியுடன் செயல்பட்டு, நல்ல பயன்களைப் பெறவேண்டும். இது, நாளடைவில் மக்கள் புதிய கருத்துகளை ஏற்று முன்னேற்ற வழிகளில் ஈடுபடுவதற்கு வழி காட்டும்.

விரிவுப் பணியாளர் தாம் பணிபுரியும் இடத்திலுள்ள மக்களின் பழக்கவழக்கங்களை விரைவில் அறிந்துகொண்டு அவர்களின் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு பொதுச் சொற்பொழிவுகள் பெரிதும் உதவுகின்றன. மக்களிடம் ஆர்வத்தையூட்டி, உண்மைகளை எடுத்துக் கூற மூன்று வழிகள் உள்ளன. அவைகளாவன; விவரித்தல், ஒப்பிடுதல், இணைத்தல்.

விவரித்தல் என்பது ஒரு சம்பவத்தை அதற்குத் தொடர்பான சான்றுகளின் மூலம் விளக்குதல்; ஒப்பிடுதல் என்பது தற்போதைய சூழ்நிலையை முன்னேற்றமடைந்திருக்கும் மற்றொரு சூழ்நிலையுடன் ஒப்பிட்டுக் கூறுதல்; இணைத்தல் என்பது புதிய கருத்துகளை மக்கள் ஏற்கெனவே அறிந்துள்ள கருத்துகளுடன் இணைத்துக் கூறுதல்.

சொற்பொழிவுகள் நன்கு தயாரிக்கப்பட்டனவாக இருக்க வேண்டும். அவற்றில் தகுந்த குறிக்கோள்கள், முன்னுரை, விரிவுரை, முடிவுரை ஆகியவை இருத்தல் வேண்டும். முன்னுரையில் பேசப்படும் கருத்தைச் சுருங்கிய அளவில் பொதுமக்களுக்கு ஏற்றவகையில் அமைத்துக் கொள்ளவேண்டும். கருத்துகளின் சாராம்சத்தைச் சுருக்கமாகக் கடைசியில் பின்னுரையில் கூற வேண்டும். விரிவுப் பணியினர் சொந்தக் கருத்துகளைப் புகுத்தாமல் உண்மையை உள்ளபடியே மக்கள் அறியும்படி கோர்வையாக வரிசைப்படுத்திச் சொல்லவேண்டும்.

பொதுக் கூட்டங்களில் பேசும்போது, இயற்கையாக நண்பர்களுடன் பேசுவதுபோல் பேசவேண்டும். கடினமான சொற்களை உபயோகித்தல் கூடாது. கூட்டத்திலுள்ள அனைவரும் கேட்கும்படி தெளிவாக உற்சாகத்துடன் எடுத்துக் கூறவேண்டும்.

எந்தச் சமூகத்திலும் பொதுத் தலைவர்கள் அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அரசாங்கத் தலைவர்கள், பாரம்பரியத் தலைவர்கள் என்ற மூன்றுவிதமான தலைவர்கள் இருப்பார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், மகளிர் மன்றத் தலைவிகள், இளைஞர் மன்றத் தலைவர்கள், இளைஞர் முன்னேற்றச் சங்கத் தலைவர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள். ஆசிரியர்களும், மதகுருமார்களும், கிராமத் தலைவர்

களும், பிரசித்திபெற்ற விவசாயிகளும் பாரம்பரியத் தலைவர்கள். வேளாண்மை, கால்நடை, நல்வாழ்வு, பொதுநலம், கல்வி ஆகிய துறைகளின் செயலாளர்கள், இயக்குநர்கள் ஆகியோர் அரசு நிர்வாகத் தலைவர்களாவார்கள். மன்றங்கள், கழகங்கள், வர்த்தகர் சங்கங்கள், கூட்டுறவு அங்காடிகள், ஆலோசனைக் குழுக்கள் ஆகிய வையும் தலைமையை வளர்க்கும் குழுக்கள்.

மேற்கண்ட தலைவர்களைத்தான் மக்கள் சாதாரணமாக நம்பு கிறார்கள். தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் அணுகுகிறார் கள். விரிவுப் பணியாளர் இத் தலைவர்கள்மூலம் மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களை உற்சாகப்படுத்தி விரிவுப் பணியை நிறைவேற்ற வேண்டும். தலைவர்களிடம் கண்ணியத்துடன் நடந்து கொண்டு அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றுத் திட்டமிட்டுச் செயல்களில் ஈடுபடவேண்டும். அவர்கள் கூட்டங்களிலும் செயல் முறைப் பயிற்சிகளிலும், விரிவுப் பணியாளர்களுக்கு உதவியாக இருந்து, மக்களை ஈடுபடுத்த முடியும். தலைவர்களைக் கூட்டங் களுக்கும் செயல்முறைப் பயிற்சிகளுக்கும் அழைத்துச் சிறந்த பங்குகொடுத்து ஈடுபடுத்த வேண்டும்.

பொதுத் தலைவர்கள் விரிவுப் பணிகளில் ஈடுபடுவதற்கு ஊக்கு விக்கப்படவேண்டும். இதற்குப் பயிற்சிகள் இன்றியமையாதவை. பயிற்சியைப் பொதுக் கூட்டங்கள், விவாதங்கள், விரிவுப்பணி முறைகள் மூலமாக அறிவிக்கலாம். தலைவர்களைப் பல இடங் களுக்கும் கூட்டிச் சென்று, பொதுப் பிரச்சினைகளை அறியும்படி செய்தல் வேண்டும். தலைவர்களுக்குப் போதிய வாய்ப்புகள் அளித்து அவர்களின் சேவை மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு செயல்முறைக்கும், பொதுக் கூட்டங் களுக்குப் பிறகும், நேரிலும் நன்றி அஞ்சல்கள் மூலமும், அவர்களின் பணியை வாழ்த்தி மேலும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய ஆதரவு கிடைப்பதுபற்றி மேலதிகாரி களிடம் கூறுதலும், அறிக்கைகளில் அவர்களின் பெயர்களை வெளியிடுதலும் வேண்டும்.

விரிவுப் பணியாளர்கள் விட்டுக்கொடுக்கும் தன்மையுடன் ஒத்துழைப்பார்களேயானால் மக்களால் வரவேற்கப்படுவர், பின் பற்றப்படுவர். இல்லையெனில், அவர்கள் மக்களிடையே தங்கள் மதிப்பை இழப்பர். ஆகவே, வெற்றிபெறுவதற்கு விரிவுப் பணியாளரின் வேலைத்திறனும், ஒத்துழைப்பும், சகிப்புத்தன்மையும் உறுதுணையாக இருக்கும்.

9. விரிவியல் பணிகளைத் திட்டமிடுதலும் மதிப்பீடு செய்தலும்

(PLANNING AND EVALUATING EXTENSION PROGRAMMES)

சிறந்த கல்விப் பணி ஒரு திட்டமிட்ட செயலாகும். திட்டம் வெற்றிக்கு வழி வகுக்கிறது. விரிவியல் திட்டப்பணி சிறந்த கல்வி முறைகளையும் கல்விப் பணிகளையும் கொண்டுள்ளதால், சீரிய திட்டமிடுதல் அதன் இன்றியமையாத அமைப்பாகிறது.

விரிவியல் திட்டம், எழுத்து வடிவில் அமைக்கப்பட்ட நீண்ட கால நோக்கமுள்ள செயலாக்கப்படவேண்டிய சாசனமாகும். அது, நோக்கங்களையும் அவற்றை அடையும் வழிமுறைகளையும் கொண்டு விரிவியல் பணியாளர்களின் திறனுய்வினுலும், செயல் திறத்தாலும் எங்கு, யாரால், எவ்வாறு, எவை நடைபெறும் என்பனவற்றைத் தெரிவிக்கும் செயல்பட்டியல்.

எழுத்து வடிவில் உள்ள திட்டம் அமலாக்கப்படும்போது திட்டத்தால் தொடர்ந்து பயன் பெறுவதற்கு அதன் முழு உருவும் உதவுகிறது; குறிக்கோள்களை அடைவதற்கு இடைக்கால மதிப்பீடுகள் உதவிசெய்கின்றன. மதிப்பீடுகள் நோக்கங்களின் அடிப்படையில் நல்ல முறையில் அமைதல் வேண்டும். அது, எவ் வழி செல்கிறோம், எங்ஙனம் செல்கின்றோம் என்பதையும் பணியின் வெற்றியையும், பணியாளர்களின் திறமையையும் ஊர்த் தலைவர்கள் உதவியையும், மக்களின் முன்னேற்றத்தையும், பிரச்சினைகளையும் கணக்கிட உதவும் நல்லதோர் கருவியாக இருக்க வேண்டும்.

திட்டத்தின் நோக்கங்கள், எங்கு எதைச் செயல்படுத்தப் போகிறோமோ, அவ் விடத்தின் பழக்கவழக்கங்கள், தட்பவெப்ப

நிலை, சமூகப் பொருளாதார நிலை போன்றவற்றிற்கு உட்பட்டு இருப்பதோடன்றி, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல், ஒத்துழைப்பு, உற்சாகம், உதவி, தலைவர்களின் ஆதரவு ஆகியவற்றைப் பெறுதல் என்ற அடிப்படையில் அமைய வேண்டும். மக்களுடன் கலந்தாலோசித்து, அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற திட்டங்களையே ஏற்று நடத்த வேண்டும். அவர்கள் பங்கெடுப்பதையும், ஆலோசனைகளையும் முன்வைத்துத் திட்டமிடுதல் அவசியம்.

திட்டம், அதை அமுல் செய்வதற்கான பல வழிமுறைகளையும் கொண்டிருக்க வேண்டும். அந்த வழிமுறைகளும், சிறந்தவையாக, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு செயல்முறை மக்களால் விரும்பப்படாததாக இருந்தால், வேறு முறைகளைக் கையாளுதல் வேண்டும்.

திட்டமிட்ட செயல்கள் அல்லது பணிகள் தெளிவாக, நேர்மையாக, நிலைமைகளை, பிரச்சினைகளை அலசிப்பார்த்து அவற்றை நிவர்த்தி செய்ய உதவவேண்டும். கற்பிப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் உகந்த சீரிய சூழ்நிலைகளை அமைத்து தக்க முயற்சிகளை மேற்கொண்டு சிறந்த நோக்கங்களுடன் செயல்பட ஊக்குவிக்க வேண்டும். திட்டமிட்ட நோக்குடன் தெளிவான, ஒழுங்கான முறைகளைப் பயன்படுத்தித் திட்டத்தைச் செயலாக்கும்போது, எதிர்பார்த்த பயன்கள் உருப்படியாகக் கிடைக்கும்.

தகுந்த திட்ட அமைப்பு இல்லாவிடில், விரிவுப் பணியாளரின் அனைத்து முயற்சியும் வீணாகும். ஆகவே, எத் திட்டமாயினும் கால வரையறை, தேவை, ஒத்துழைப்பு ஆகியவைகளின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

திட்டமிடும்பொழுது கையாளவேண்டிய நியதிகள்

1. **நிலைமைகளை, விவரங்களை அறிதலும் ஆராய்தலும் :** திட்டமிடுவதற்கு முன், சில முக்கிய விவரங்களைச் சேகரிக்க வேண்டும். செய்திகளைப் பல வழிகளைக் கையாண்டு பலவிடங்களிலிருந்தும் சேகரிக்கலாம். கிராமத்திலுள்ள இயற்கைச் செல்வங்கள், நிலம், நீர், நிலவளம், ஆறு, ஓடை போன்றவற்றையும் அவற்றின் பயனையும் நிலையையும் அறியவேண்டும். அந்தச் சூழ்நிலையில், விரிவுக் கல்விப் பணியை எவ்வாறு நடத்துவது என்பதையும் தெளிந்துணரவேண்டும்.

மக்கள்தொகை, அவர்கள் வாழும் நிலை, குடியிருப்பு, வசதி, செலவினம், சமூகப் பொருளாதார நிலை போன்றவற்றையும் அறியவேண்டும். மக்களின் பண்பாடு, கலாச்சாரம், சமூக அமைப்பு, விருப்பு, வெறுப்பு, மூட நம்பிக்கைகள், எண்ணங்கள் ஆகியவற்றையும் அறிதல் அவசியம். மக்களின் முக்கிய தொழில் கள், விவசாய முறைகள், அவர்கள் விரிவுப் பணியை வரவேற்கும் விதம், பழைய அனுபவங்கள், அவற்றின் வெற்றி-தோல்விகள் அனைத்தும் விரிவுத் திட்டத்திற்குப் பெரும் அளவில் துணைபுரியும்.

மக்களின் வாழ்க்கைத்தரம் **(Standard of living)** வருவாய், சேமிப்புப் பழக்கங்கள், சொத்துகள், தொழிற்சாலைகள், போன்றவைபற்றியும் போக்குவரத்து வசதி, சாலை வசதி, பொருள் களின் விற்பனை வசதிபற்றியும் அறிதல் வேண்டும். தொழில்கள் வாரியான நிபுணத்துவம் அளிக்கும் நிறுவனங்கள், தேவையான செய்திகளை அளிக்கும் நிபுணர்கள், செய்தித் துறைகள், வேளாண் மைப் பல்கலைக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவைபற்றியும் அறிதல் வேண்டும். சுகாதார நிலையங்கள், சமுதாயச் சீர்திருத்தத் திட்டங்கள், ஊராட்சிப் பணி ஆகியவற்றைப்பற்றி அறிந்து அவற்றை விரிவுப் பணி திட்டத்துடன் இணைப்பது, அவர்களிட மிருந்து பயனுள்ள செய்திகளைப் பெறவும் பொருள் அல்லது விவரங்கள் போன்ற உதவிகள் பெறவும் வசதியாக இருக்கும்.

விரிவியல் பணியாளர்கள், குறிப்பிட்ட கிராமம் அல்லது நகரத்தில் செயல்பட்டு வரும் பிற நிறுவனங்களின் நோக்கங்களையும் பணிகளையும், எதிர்காலத் திட்டங்களையும் அறிதல் வேண்டும். இதன்மூலம் தம் பணியை எளிதாக்குவது மட்டுமின்றி முழுமை யாகவும் பொருளுள்ளதாகவும் செய்து, ஒரே பணியை இருவர் செய்வதையும் தடுக்க முடியும்.

விவரங்களைச் சேகரிக்கும் முன் மக்களின் நம்பிக்கையைப் பெற நல்ல அறிமுகத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தங்களுக்கு ஏதேனும் நன்மை பயக்கும் என்று தெரிந்தால்தான் மக்கள் விவரங் களைத் தருவதில் ஒத்துழைப்பை முழுமையாய்த் தருவர். மக்களின் பழக்கவழக்கங்கள், பொருளாதார நிலை, சமுதாயத்திலுள்ள வசதி கள் இவற்றை பார்வையிட்டுக் கணக்கெடுத்து, உணர்ந்து அவற்றை அடிப்படையாக்கி, விரிவுமுறைகளைக் கையாளவேண்டும். இதற் காகச் சுருக்கமான, தெளிவான வினாத்தாள்களைப் பயன்படுத்தி, விவரங்களைச் சிறந்த முறையில், சரியான புள்ளி விவரங்களுடன் சேகரிக்கலாம். நேரில் சென்று மக்களிடம் பழகும் வாய்ப்பும் ஏற்படும். இங்ஙனம் விரிவுப் பணியாளர்களால், மக்களால் அல்லது நிறுவனங்களால் எடுக்கப்படும் கணக்கெடுப்பு நூல்கள்,

ஏடுகள், அட்டைகள், செய்தி அறிக்கைகள் அனைத்தும் விவரங்களைத் தெரிந்துகொள்ள உதவுகின்றன. அவை, பிற்காலத்தில் திட்டங்களின் வெற்றியை மதிப்பிடவும் புதிய திட்டங்களை அமைக்கவும் பயன்படும். உதாரணமாக, ஒரு மகளிர் மன்றத்தில் புதிய திட்டம் ஒன்று உண்டாக்கவேண்டுமானால், அதிலுள்ள நபர்களின் எண்ணிக்கை, அவர்கள் கூடிய காலங்கள், நடத்திய செயல்முறைகள்பற்றிய புள்ளி விவரங்களை, மகளிர் மன்றத் தலைவியிடம் உள்ள செய்தி அறிக்கைப் புத்தகத்திலிருந்து விரிவான விளக்கம் பெறலாம்.

2. **பிரச்சினைகளைக் குறித்தல் :** இங்ஙனம் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து முக்கியமான பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு உண்மை நிலையை அறியமுடியும். சில பிரச்சினைகள் வெளிப்படையாகவும், சில மறைமுகமாகவும் இருக்கும். ஆகவே, பிரச்சனைகளைப் பட்டியல் செய்து எந்தப் பிரச்சினையை முதலில் தீர்க்கப் புதிய திட்டம் உதவுமோ அந்தப் பிரச்சினையை முதலில் ஆராய்ந்து அறியவேண்டும். உதாரணமாக ஒரு கிராமத்தில் குழந்தைகளின் உடல்நிலை அடிக்கடி பாதிக்கப்படலாம். அதற்கான காரணங்கள், உணவுப் பழக்கங்கள் சரியாக இல்லாததாக இருக்கலாம். மகளிர் மன்றத்தின் புதிய திட்டத்தில் விரிவியல் பணியாளர், இந்தப் பிரச்சினைகளின் காரணத்தை அறிந்து செயல்பட முதலிடம் தரவேண்டும்.

3. **பிரச்சினைகளை விளக்குதல் :** பிரச்சினைகளைக் குறித்தவுடன் அவற்றை மக்களுக்கு விளக்க வேண்டும். விளக்குவதோடு மக்கள் அவற்றில் எவற்றை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று கருதுகிறார்கள்? ஏன் அவ்வாறு நினைக்கிறார்கள்? எப்படித் தீர்க்கலாம் என்று நினைக்கிறார்கள்? என்பதையும் ஆராயவேண்டும்.

4. **பிரச்சினைகளை நீக்க வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்தல் :** பிரச்சினைகளின் உண்மையான விளக்கத்தை மக்களின் ஆழ்ந்த சிந்தனைகளின் வழியாகவும், ஆராய்ச்சிகளின் அடிப்படையாகவும் பெறவேண்டும். பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய பல வழிகளை ஆராய்ந்து எது சிறந்ததோ எளியதோ அதைச் செயல்படுத்த வேண்டும். இங்ஙனம் பிரச்சினைகளைத் தெரிந்தபின்பு அவற்றிற்குத் தீர்வு காண வழிமுறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவற்றைச் செயலாக்கும் முறைகளை எளிதாக்கி, மேற்கொள்ளும் முயற்சிகளின் நோக்கங்களைத் தெளிவாக்கி, அவற்றின் அவசியம், நோக்கங்கள் ஆகியவற்றைத் தெளிவாக, சுருக்கமாக, நேர்முகமாக

மக்களிடம் எடுத்துக் கூறுவது அவசியம். விரிவியல் பணியாளர் தம் சக்திக்கு அப்பாற்பட்ட நிதி, அல்லது பொருளாதார வசதிகள் தேவைப்படும் முறைகளைத் தவிர்க்க வேண்டும். நிதி உதவி, மக்களிடையே கிடைக்குமெனின் அவர்களுடைய உதவியைப் பெற மேலதிகாரிகளின் அனுமதியை நாட வேண்டும்.

இங்ஙனம் முடிவு செய்யப்பட்ட வழிமுறைகள், ஊர்த் தலைவர்கள், பெரியோர்கள், ஊராட்சித் தலைவர்கள் ஆகியோர் சம்மதத்தைப் பெற்றுச் செயல்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். செயல்முறைக்கு ஒப்பிய சில வழிமுறைகள், பின்னர் ஊர் மக்களால் தவிர்க்கவும் படலாம். ஆகவே, எந்த முறையாயினும், அது மக்களின் பரிபூரண சம்மதத்தையும், ஒத்துழைப்பையும் பெற்றதாக இருத்தல் வேண்டும்.

மக்களால் பின்பற்றக்கூடியதாயும், பணம், நேரம் போன்றவற்றில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதாயும், நிபுணர்களின் ஆலோசனை தேவையாயின் அவர்களை அணுகுவதற்குரிய வழிமுறைகள் கூறுவதாயும் அமையவேண்டும். அவசியமான பிற வசதிகள், கருவிகள் இருக்கின்றனவா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பிரச்சினைகளைத் தீர்க்கத் தேர்ந்தெடுக்கப்படும் முறைகள், மக்கள் புரிந்துகொள்ளும்வண்ணம், அவர்கள் கல்வி அறிவுக்கும் திறமைக்கும் ஏற்றதாகவும், அவர்களுடைய முயற்சி, உழைப்பு அனைத்தையும் சீரிய வழியில் பயன்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும்.

மக்கள் சிறந்த முறைகளைக் கடைப்பிடிக்க ஊக்குவிக்கவும், உற்சாகப்படுத்தவும் ஏற்றுக்கொள்ளவும் செய்யக்கூடிய கல்வி முறைகளை விளக்க வேண்டும். மக்கள் அவைகளில் நம்பிக்கையைப் பெற எளிதான பிரச்சினைகளை முதலில் எடுத்து, அவற்றிற்கான வழிமுறைகளை ஆராய்தலே விரிவுப் பணியாளருக்கு உசிதமாகும்.

5. **திட்டத்தைத் தீட்டுதல் :** விரிவியல் துறையில் திட்டங்களைப் பொதுவாக ஆண்டுத் திட்டமாக அமைப்பது வழக்கம். அத்தகைய திட்டத்தில் நோக்கங்கள், கால அட்டவணை, திட்டக் குறியீடு, விரிவான விளக்கங்கள், ஈடுபடும் மக்கள், அவர்கள் பொருளாதார, சமூக, கலாச்சாரப் பழக்கவழக்கங்கள், பயன் படுத்தும் கல்வி முறைகள், அவற்றின் விளக்கங்கள், செயல் பட்டியல், செயல்படுத்த வேண்டிய நேரம், இடைக்கால மதிப்பீடு, செய்யும் முறைகள், காலம், ஈடுபடும் நிறுவனங்கள், ஆராய்ச்சி

நிலையங்கள், பணியாளர்கள், சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் ஆகிய விவரங்கள் அனைத்தும் இருக்க வேண்டும்.

திட்டச் செயல்கள் தேவைகளுக்கேற்ப இருக்க வேண்டும், கடினமான செயல்முறைகள் மக்களின் தேவைக்கும், எண்ணத்தின் மாற்றங்களுக்கும் இடம் கொடா. மக்களது உணர்வும், எண்ணங்களும், மாற்றமும், இயந்திரம்போல் கட்டுப்பாட்டுடன் செல்லமாட்டா. ஆகவே, மக்களின் தேவைக்கும், வசதிக்கும் ஏற்பத் திட்டங்களையும் செயல்முறைகளையும் அமைத்தல் மிகமிக முக்கியம். உதாரணமாக, முதியோர் கல்விக்கு மக்களைத் தவறாது வரச்செய்ய, நேரம் இருந்தாலும், வராத, தொடர்ந்து வர இயலாத அல்லது வேலை நேரத்தால் தாமதமாக வரும் பெண்களுக்கும் மதிப்புக் கொடுத்து அவர்களுக்குக் கல்வி அளித்தல் அவசியம். அவர்களுடைய நேரத்தையும் சக்தியையும் வீணாக்காத படி கல்வித் திட்டம் வழிவகுக்க வேண்டும்.

எந்தச் செயலாயினும் அதைச் சிறந்த முறையில் திட்டமிட்டு, எளிதான ஆனால் விரைவில் முடிக்கும் முறைகளைக் கையாள வேண்டும். மக்களின் நேரமும், உழைப்பும், பொன்னானவை. மக்களைச் சந்திப்பதற்கும், அவர்கள் பிரச்சினைகளை அல்லது சந்தேகங்களைக் கேட்பதற்கும், கடிதங்கள் எழுதுவதற்கும் திட்டங்கள் தீட்டுவதற்கும் விரிவுப் பணியாளர் நேரம் ஒதுக்க வேண்டும்.

மதிப்பீடு செய்தல்

ஒரு முயற்சியைத் திட்டமிட்டுச் செயல்படுத்தியபின், அதன் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து அதுபற்றிய அறிக்கை வெளியிடுதல் அவசியம். மக்களின் ஒத்துழைப்பையும் செயலையும் வைத்து மதிப்பீடு செய்யவேண்டும். ஒவ்வொரு செயலுக்கும் முதல்நிலை தொட்டு முடிவுவரை மதிப்பீடு அவசியம். இடைக்கால மதிப்பீடு பணியாளர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். எழுதி வைக்கப்பட்ட செயல்களின் விளக்க முறைகள், மக்களுக்கும், பணியாளர்களுக்கும், மதிப்பீடு செய்யும் முறையை விளக்கும். செயல்களின் முடிவில் மக்களின் ஒத்துழைப்பையும், செயல்படுத்தும் தன்மையையும் மதிப்பீடு செய்தல் அவசியம். திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டனவா? செயல் முறைகள் சீரியனவாய் இருந்தனவா? புதிய முறைகளை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தூண்டியனவா? என்ற கேள்விகளுக்கு மதிப்பீடு விடை தரவேண்டும்.

அன்றாட வாழ்க்கையில் நாம் மதிப்பீடு செய்துகொண்டே இருக்கிறோம். உதாரணமாக, நாம் சமையல் செய்தபின் பண்டங்களை ருசிபார்த்து நன்றாக இருக்கின்றனவா இல்லையா, இல்லையெனில் தவறென்னவென்று அறிந்து சரிப்படுத்த முயல்கிறோம். ஓர் அழகான காட்சியைக் காணும்போது 'எத்தனை அழகு!' என்று கூறுகிறோம்.

ஒரு திட்டத்தை மதிப்பீடு செய்வதன்மூலம், பணியில் ஈடுபட்ட பணியாளர்களின் வேலைத்திறன், முறைகள், கணக்கீடுகள் தரம் ஆகியவற்றை அறிதல், பயன்படுத்திய கல்விச் சாதனங்கள், முறைகளின் வன்மையை அளத்தல், அத் திட்டத்தின் பயனை அறிதல் ஆகிய பல பயன்கள் கிடைக்கின்றன.

விரிவியல் பணியாளர் தாமே தம் செயல்களைச் சீர்தூக்கிப் பார்த்துச் செய்யும் மதிப்பீடு வன்மையும் பயனுள்ளதும் சிறந்ததும் ஆகும். தன் வெற்றியை மக்களின் வரவேற்பிலும், அவர்கள் கல்வி அறிவை ஏற்றுப் பயன்படுத்துவதன் மூலமும், அவர்கள் ஒத்துழைப்பின்மூலமும் நன்கு கணக்கிடலாம்.

திட்டச் செயல்களில் பயன்படுத்தும் முறைகளையும் மதிப்பீட்டுப் பயன்களையும் உரிய நேரத்தில், தொடர்ந்து அறிக்கைகளாகத் தரவேண்டும். ஒரு திட்டத்திற்குப் பின் அதன் முடிவுகளை செய்திப் பலகை, பத்திரிகைகள், அறிவிப்புப் பலகைகள் மூலமாக மக்கள் அறிந்துகொள்ள வெளியிடவேண்டும். முயற்சியின் நோக்கங்கள் குறிப்பாகவும், (Specific), சுருக்கமாகவும் (Brief) இருந்தால் மதிப்பீடும் எளிதாகும். நோக்கங்கள் எளிதாய் இருப்பதோடு, செயல் முறைகளும் எளிதாக அமையவேண்டும்.

ஒரு முன்னேற்றத்தை, எத்தனை பேர் எடுத்துக்காட்டிய முறைகளில் கைப்பற்றி வருகின்றனர், எந்த அளவுக்குப் பயன்படுத்துகின்றனர் என்ற அளவைகள் மூலம் எளிதில் மதிப்பீடு செய்யலாம். கணக்கெடுப்பு, வினாத்தாள், நேர்முகச் சந்திப்பு, தர மதிப்பீடு, நிர்ணய மதிப்பீடு போன்றவைமூலம் மதிப்பீடு செய்யலாம். விரிவியல் பணியாளர் காட்டும் வழிகளை மக்கள் தங்கள் வாழ்வில் பின்பற்றி, முன்னேறும்போதுதான் அவர்கள் முயற்சி வெற்றி கண்டுள்ளது என அறிந்து பூரிப்படையலாம்.

கல்வி எனும் அழியாச் செல்வத்தை மக்கள் அனைவருக்கும் தரும் முயற்சியில் விரிவியல் துறையினர் பெரும்பணி செய்துவருகின்றனர்.

அவர்களுடைய பணிக்கு உறுதுணையாக இருப்பவை சிறந்த கல்வி முறைகள். அவை

> " கற்கக் கசடற, கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக."

என்ற பயன் கிடைக்கும் வகையில் அமைய இந் நூல் உதவும்.

கல்விமுறைகள் கல்வியை ஊட்டும் களங்கள். தகுந்த கல்வி முறைகளைப் பயன்படுத்தும்போது மக்களிடையே ஆர்வம், உற்சாகம், இடைவிடா ஊக்கம், செயல்படுத்தும் ஆற்றல் ஆகியவை வளர முடியும். கல்வி உயர்ந்த வளர்ச்சியில் வாழ்வு மலர்ச்சியுறும். வறுமை அகற்றப்பெற்றுத் தன்னிறைவு கிட்டும். தன்மானம் ஓங்கும், நாடு சிறக்கும்.

மேற்கோள் நூற்பட்டியல்

(*Bibliography*)

Devadas, Rajammal, P., The Meaning of Home Science, Sri Avinashilingam Home Science College, Coimbatore, 1958.

Bradfield, D. J., Guide to Extension, Food and Agricultural Organisation of the United Nations, Rome, 1969.

Kelsey, Lincoln David and Hearne, Cannon Chiles, Co-operative Extension Work, Comstock Publishing Associates, New York, 1955.

Ensminger, Douglas, A Guide to Community Development, The Ministry of Community Development, Government of India, New Delhi, 1957.

Dale, Edgar, Audio Visual Methods in Teaching, The Dryden Press Holt Rinehart and Winston Inc., New York, 1969.

Mukerji, B., Community Development in India, Orient Longmans, Bombay, 1961.

கலைச்சொற்கள்

Agricultural Bias — விவசாயச் சார்பு
Area Development — பிராந்திய முன்னேற்றம்
Annual Report — ஆண்டறிக்கை
Action Committee — செயற்குழு
Applied Nutrition Programme — ஊட்ட உணவு அல்லது சத்துணவுத் திட்டம்
Associate women workers — மகளிர் கூட்டு ஊழியர்கள்
Action-Research — செயல்நோக்கு ஆராய்ச்சி
Agro-Industries — விவசாயச் சார்பு தொழில்கள்
Associate Organisations — கூட்டு அமைப்புகள்
Administration — நிருவாகம்

Block — வட்டாரம்
Block pattern — வட்டார அமைப்பு
Block Development Officer — வட்டார ஆணையாளர்
Block Staff Pattern — வட்டார ஊழியர் அமைப்பு
Block Team — வட்டார ஊழியர் குழு
Bal Mandal — சிறுவர்கள் மன்றம்
Balwadi — பால்வாடி, குழந்தைப் பள்ளி, குழந்தைகள் காப்பகம்
Baby show — குழந்தைகள் காட்சி
Balsevika — (பால சேவிகா) குழந்தை நலக்காப்பாளர்
Basic Training — அடிப்படைப் பயிற்சி
Block Advisory Committee — வட்டார ஆலோசனைக் கமிட்டி
Block Development Committee — வட்டார முன்னேற்றக் கமிட்டி
Black Board — கரும்பலகை
Bulletin Board — செய்திப் பலகை

Community	—	சமுதாயம்
Community Development	—	சமுதாய நல வளர்ச்சி
Community Organisation	—	சமூக அமைப்பு
Community Relations	—	சமூக உறவுகள்
Community Improvement	—	சமூகச் சீரமைப்பு
Constructive work	—	நிர்மாணப் பணி ஆக்க வேலை
Community Development Methods	—	சமூக வளர்ச்சிக்கான வழிகள்
Conference	—	மாநாடு
Community Projects	—	சமூக நல முயற்சிகள்
Cultural change	—	கலாசார (பண்பாட்டு) மாற்றம்
Community Development Blocks	—	சமூக முன்னேற்ற வட்டாரங்கள்
Community Effort	—	சமூக முயற்சி
Coordination Committee	—	இணைப்புக் கமிட்டி
Central Committee on Community Development	—	மத்திய சமூக முன்னேற்றக் கமிட்டி
Coordination	—	இணைப்பு, இணக்கம்
Convenor	—	அமைப்பாளர்
Central Consultative Committee on Community Development	—	மத்திய சமூக முன்னேற்ற ஆலோசனைக் கமிட்டி
Central Social Welfare Board	—	மத்திய சமுதாயநல வாரியம்
Community Centre	—	சமூக நிலையம் (கேந்திரம்)
Community School	—	சமூகப் பள்ளி
Community Organiser	—	சமூக நல அமைப்பாளர்
Community Sense	—	சமூக உணர்வு
Constitution	—	அரசியல் சட்டம்
Consultative Committee on Panchayat-i-Raj	—	பஞ்சாயத்து ஆட்சி ஆலோசனைக் கமிட்டி
Campaign	—	இயக்கம்
Circular Letter	—	சுற்றுக் கடிதம்
Development	—	முன்னேற்றம், வளர்ச்சி
Director	—	இயக்குநர், நெறியாளர்
Development Commissioner	—	வளர்ச்சி ஆணையாளர்
District Collector	—	மாவட்ட ஆட்சியாளர்
District Development Council	—	மாவட்ட முன்னேற்றக் குழு
Discussions	—	உரையாடல்கள்
Decentralised Administration	—	பரவல் முறை நிருவாகம்

District Board — மாவட்ட நிர்வாக வாரியம்
Decentralisation — பரவல் முறை
Direct Contact — நேரடித் தொடர்பு
Demonstration — செயல்முறை, செய்துகாட்டல்

Economic Development — பொருளாதார முன்னேற்றம் (வளர்ச்சி)

Extension — விரிவாக்கம், விரிவுத் துறை
Extension Methods — விரிவாக்க முறைகள்
Extension Service — விரிவாக்க சேவை
Extension Officer — விரிவாக்க அலுவலர்
Evaluation — மதிப்பீடு
Extension Techniques — விரிவாக்க முறைகள்
Extension Education — விரிவாக்கக் கல்வி
Exhibition — பொருட்காட்சி
Extension Training — விரிவாக்கப் பயிற்சி

Fundamental Education — அடிப்படைக் கல்வி
Fundamental objectives — அடிப்படைக் குறிக்கோள்கள்
Functional Committees — செயலாக்கும் (செயல் நோக்கு) கமிட்டிகள்
Functional Leaders — செயலாக்கும் தலைவர்கள்
Follow-up work — பின் தொடர் பணி
Felt Needs — உணரப்படும் தேவைகள்
Fundamental Research — அடிப்படை ஆராய்ச்சி
Field Workers — கள ஊழியர்கள்
Field Experience — கள அனுபவம்
Field problems — களப் பிரச்சினைகள்
Final objectives — இறுதிக் குறிக்கோள்கள்
Functional organisations — செயல்படு அமைப்புகள்
Functional Democracy — செயல்படு ஜனநாயகம்
Flash cards — ஒளிரும் அட்டைகள், மின் அட்டைகள்
Flannel Graph — ஒட்டுப் பலகை
Film shows — படக் காட்சிகள்

Government — அரசு
Grant — மானியம்
General objectives — பொதுவான குறிக்கோள்கள்
Gram Seveka — கிராம ஊழியர்
Group project — குழுப் பணி

Group work — குழு வேலை
Grass Roots Democracy — வேரூன்றிய ஜனநாயகம்
Group contact — குழுத் தொடர்பு

Human Relations — மனித உறவுகள்
Health Visitor — சுகாதாரப் பார்வையாளர்
Home Science — மனையியல்
Home Science Wing — மனையியல் பிரிவு

Integration — ஒருங்கிணைந்த, ஒருங்கிணைப்பு
Individual Project — தனிப் பணி
In-service Training — வேலைக்காலப் பயிற்சி
Internal Evaluation — சொந்த மதிப்பீடு
Immediate programme — உடனடித் திட்டம்
Institution — நிறுவனம்
Individual contact — தனி நபர் தொடர்பு
Information Centre — செய்தி நிலையம்

Job Training — வேலைப் பயிற்சி
Job Chart — வேலைப் பட்டியல்

Kitchen Garden — வீட்டுத் தோட்டம்

Laision Officer — தொடர்பு அலுவலர்
Leadership — தலைமை
Longterm programme — நீண்டகாலத் திட்டம், நெடுங்காலத் திட்டம்
Local initiative — தல முயற்சி
Local resources — தல வளங்கள்
Local conditions — தல நிலைமைகள்
Local problems — தலப் பிரச்சினைகள்

Mass Education — மக்கள் கல்வி
Model Village — மாதிரி கிராமம்
Multi-purpose worker — பல்நோக்கு ஊழியர்
Ministry of Community Development Co-operation and Panchayat Raj — மத்திய சமூக முன்னேற்றக் கூட்டுறவுப் பஞ்சாயத்து ஆட்சி அமைச்சகம்
Minimum programme — குறைந்தபட்சத் திட்டம்
Mukhya Sevika — முக்கிய சேவிகா
Mass contact — மக்கள் தொடர்பு
Mahila Mandal — மாதர் சங்கம்

News Letter — செய்திக் கடிதம்
National Extension Service — தேசிய விரிவாக்கப் பணி
National Development Council— தேசிய முன்னேற்றக் குழு
Non-Officials — அரசு அலுவலரல்லாதார்

Objectives — குறிக்கோள்கள்
Organisation — அமைப்பு
Orientation Training — புத்துணர்வுப் பயிற்சி
Outlook — கண்ணோட்டம்
One-way traffic — ஒருவழிப் போக்கு
Orientation — புத்துணர்வு

People's Participation — மக்கள் பங்கு
Programme Planning — திட்டமிட்டு வேலை செய்தல்
Pilot Project — முன்னோடிப் பணி, முன்னோடி முயற்சி
Project — பணி, முயற்சி
People's initiative — மக்கள் முயற்சி
Planning Commission — திட்டக் குழு
Panchayat-i-Raj — பஞ்சாயத்து ஆட்சி முறை
Panchayat — பஞ்சாயத்து, ஊராட்சி
Production wing — உற்பத்தி அணி
Physical achievements — உருவான சாதனைகள்
Photograph — புகைப்படம்
Posters — சுவரொட்டிகள்
Pre-view — முன்விளக்கம்
Panchayat Samiti, Panchayat Union — பஞ்சாயத்து சமிதி, பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து ஒன்றிப்பு (ஒன்றியம்)
Primary Health Centre — ஆரம்ப மருத்துவ நிலையம்

Rural Development — கிராமிய முன்னேற்றம்
Rural up-lift — கிராமிய உயர்வு
Rural Reconstruction — கிராமியச் சீரமைப்பு (நிர்மாணம்)
Rural Problems — கிராமியப் பிரச்சினைகள்
Region — பிராந்தியம்
Rural Extension — கிராமிய விரிவாக்கம்
Rural Radio Forum — கிராமிய வானொலி மன்றம்
Result Demonstration — பலன்காட்டும் செயல்முறை, செய்துகாட்டல்

Refresher Course — மறுபயிற்சி
Representative — பிரதிநிதி
Review — பரிசீலனை
Radio Programmes — வானொலி நிகழ்ச்சிகள்

Social Qualities — சமுதாயப் பண்புகள்
Social justice — சமுதாய நீதி
Specific objectives — குறிப்பிட்ட குறிக்கோள்கள்
Self-sufficiency — தன்னிறைவு
Sociology — சமுதாய இயல்
Sub-Committee — உப-கமிட்டி
Self-help — தன்னுதவி
Social Education — சமுதாயக் கல்வி
Study team — ஆய்வுக் குழு
Social, Imbalances — சமுதாய ஏற்றத் தாழ்வுகள்
State Development Committee — மாநில முன்னேற்றக் கமிட்டி
Standing Committees — நிலைக் கமிட்டிகள்
Social Change — சமுதாய மாற்றம்
Social Reform — சமுதாயச் சீர்திருத்தம்
Social education organiser — சமுதாயக் கல்வி அமைப்பாளர்
Social work — சமுதாய வேலை
Social Service — சமுதாய சேவை
Seminar — கருத்தரங்கு
Symposium — கருத்துரை நிகழ்ச்சி
Social skills — சமுதாயத் திறன்கள்
Social objectives — சமுதாயக் குறிக்கோள்கள்
Service co-operation — சேவைக் கூட்டுறவு
Society — சமுதாயம்
Self education — தன் மதிப்பீடு (சுய மதிப்பீடு)
Social consciousness — சமுதாய விழிப்புணர்ச்சி
Slides — ஸ்லைடுகள்

Technical Assistance — தொழில் நுணுக்க உதவி
Two-way Traffic — இருவழிப் போக்கு
Team work — குழு வேலை
Target — குறியளவு ; குறிக்கோள்
Three-tier system — மூன்றடுக்கு அமைப்பு
Training camp — பயிற்சி முகாம்
Team spirit — குழு உணர்வு, குழு உணர்ச்சி
Three-tier Administration — மூன்றடுக்கு நிர்வாகம்
Tour — சுற்றுலா, சுற்றுப் பயணம்

Unified approach	— ஒருமித்த போக்கு
Village work	— கிராம வேலை
Village level worker	— கிராம நிலை ஊழியர்
Village Community	— கிராமச் சமூகம்
Village groups	— கிராமப் பிரிவுகள்
Villager's outlook	— கிராமத்தான் கண்ணோட்டம்
Village outlook	— கிராமக் கண்ணோட்டம்
Visual Aids	— காட்சிப் பொருள்கள்
Welfare State	— நல்ல நாடு
Works programme	— வேலைத் திட்டம்
Women's wing	— மகளிர் கிளை
Youth Club, Yuwak Mandal	— இளைஞர் மன்றம், இளைஞர் சங்கம்
Young Farmers Clubs	— விவசாய இளைஞர் மன்றங்கள்
Youth festival	— இளைஞர் விழா

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை-600031

★

தமிழில் பயில்பவர்க்குக் கல்லூரிப் பாடநூல்கள்

(Tamil Medium Books for Colleges)

இதுவரை 606 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன

★

மேலும், விரைவில் வெளிவருபவை

பொறியியல்	—	43	நூல்கள்
சட்டம்	—	19	,,
மருத்துவம்	—	9	,,
இயற்பியல்	—	27	,,
வேதியியல்	—	21	,,
தாவரவியல்	—	17	,,
விலங்கியல்	—	7	,,
கணிதம்	—	19	,,
வணிகவியல்	—	30	,,
பொருளாதாரம்	—	21	,,
புவியியல்	—	12	,,
வரலாறு	—	36	,,
மனையியல்	—	2	,,
தத்துவம்	—	5	,,
உளவியல்	—	4	,,
புள்ளியியல்	—	2	,,
கல்வி	—	3	,,
நிலப் போதியியல்	—	3	,,
அரசியல்	—	25	,,

கிடைக்குமிடம் :

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கிடங்கு

(கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகச் சுற்றுக்குள்)

கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்

சென்னை-600006

கல்லூரிப் பாடநூல்களுக்கு 20% கழிவு வழங்கப்படும்